ஸ்ரீமத் பகவத்கீதா
தாத்பர்ய நிர்ணயம்

ஸ்ரீமத் பகவத்கீதா தாத்பர்ய நிர்ணயம்

ப்ரஹ்மஸ்ரீ
டி. அருணசல சாஸ்த்ரிகள்
இயற்றியது

உ
ஸ்ரீ குருப்யோ நம:
சென்னை
22.10.80

பதிப்புரிமைப் பெற்றது]   1973   [விலை: ரூ. 1·50

இரண்டாம் பதிப்பு : 1973

காபிகள் கிடைக்குமிடம் :

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

4 பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1

லிபர்ட்டி அச்சகம், சென்னை-1.



ஸத்குரு ஸ்ரீ ஞானனந்தகிரி ஸ்வாமிகள்
தபோவனம்—திருக்கோயிலூர்

ஸ்ரீ குருப்யோ நம:

இந்த இரண்டாம் பதிப்பு ஸத்குரு ஸ்ரீ ஞானனந்தகிரி ஸ்வாமிகளின் சரணாரவிந்தங்களில், அவர்களுடைய சிஷ்யர்களால் ஸமர்ப்பிக்கப்படுகிறது.

முதற் பதிப்பின் முகவுரை

பகவத்கீதை ப்ரமாணக்ரந்தங்களில் சிரேஷ்டமானது. வேதார்த்தம் முழுவதும் இதில் அடங்கியிருக்கிறது. முமுக்ஷுக்கள் யாவர்க்கும் இதில் அதிகாரமும் உண்டு. இதற்கு ஆஸ்திகர்கள் பலர் வ்யாக்யாநம் செய்திருக்கிருர்கள். 'லோகாந்தர ப்ராப்தியே முக்தி' என்று நினைக்கும் சில ஆஸ்திகர்கள், ப்ராப்தி கர்மபலனுயிருப்பதனுல் ஈச்வரோபாஸநாரூபமான கர்மாவை கீதை போதிக்கிறதென்று கீதையைக் கர்ம பரமாக நயநம் செய்திருக்கிருர்கள். "கர்மசிதலோகம் அழிவை அவச்யம் அடையும். ஆகையால் லோகாந்தர ப்ராப்தி முக்தி யல்ல. பந்தம் ஸத்யமானுல் அதற்கு நிவ்ருத்தி ஸம்பவிக்காது. முக்தி ஸ்வதஸ்ஸித்தமாயில்லாவிட்டால் நித்யமாகாது. ஆகையால் பந்தம் அவித்யா கல்பிதம். வித்யையினுல் அவித்யை விலகவே நித்யஸித்தமான மோக்ஷம் விளங்கும்" என்று அபிப்ராயமுடைய ஆஸ்திகர்கள் கீதையை ஜ்ஞாநபரமாக நயநம் பண்ணியிருக்கிருர்கள். "வர்ணாச்ரமோசித கர்மாவே பந்தம். அதன் நிவ்ருத்தியே மோக்ஷம்" என்று அபிப்ராயங்கொண்ட ஆதுநிகர்கள் கீதையை லௌகிக கர்ம பரமாக வ்யாக்யாநம் செய்திருக்கிருர்கள். அநேகமாய் ஜநங்கள், கர்மாநுஷ்டாநத்திற்குப்பயந்தவர்களாயிருப்பதனுலும், இங்கிலீஷ் பாஷாபிமாநத்தினுலும், கீதைக்கும் ஆதுநிகர்கள் வ்யாக்யாநத்திற்கும் என்ன ஸம்பந்தமிருக்கிறதென்று கவனிக்காமலே வர்ணாச்ரமதர்ம பங்கத்திற்கு கீதை ப்ரமாணமென்று சொல்லிக்கொண்டு வர்ணாச்ரமதர்மத்தை நழுவவிட்டவர்களாய் ஆதுநிக வ்யாக்யாநத்தை அநுஸரிக்கிருர்கள். இவ்விதம் பல வ்யாக்யாநங்கள் இருப்பதனுல் உண்மையில் கீதையின் தாத்பர்யம் எது என்பதை அறிய சில விவேகிகள் ஆசைப்படுவார்கள். அவர்கள் அநாயாஸமாய் கீதையின் தாத்பர்யத்தை அறியும்பொருட்டு இந்தச் சிறிய புஸ்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமுக ஹு }
ஆவணி. 30 }

அருணசல சாஸ்திரிகள்.

ஸ்ரீமத் பகவத்கீதா தாத்பர்ய நிர்ணயம்

முதல் அத்யாயம்

यदालोकादन्तर्बहिरपि च लोको वितिमिरो
न मञ्जूषा यस्य त्रिजगति न शाणो न च खनिः ।
यतन्ते चैकान्तं रहसि यतयो यत्प्रणयिनो
नमस्तस्मै तस्मै निगमशिखरोत्तंसमणये ॥

யதாலோகாத் அந்தர்பஹிரபிச லோகோ விதிமிர:
நமஞ்ஜூஷா யஸ்ய த்ரிஜகதி நஶாணோ நச கநி: ।
யதந்தே சைகாந்தம் ரஹஸி யதயோ யத்ப்ரணயிந:
நமஸ்தஸ்மை ஸ்வஸ்மை நிகமஶிகரோத்தம்ஸமணயே ॥

உலகத்திலுள்ள ஸகல ப்ராணிகளும் துக்கம் ஒரு பொழுதும் உண்டாகக் கூடாதென்றும் ஸுகமே எந்நாளுமிருக்கவேண்டுமென்றும் விரும்புகிறார்கள். ஸுகமென்பது சித்தவிகாஸரூபம். துக்கமென்பது சித்தஸங்கோசரூபம். ஸுகம் ப்ராரப்த புண்யத்தால் உண்டாகும். துக்கம் ப்ராப்த பாபத்தால் உண்டாகும். புண்யமென்பது விஹித்கர்மாவின் அநுஷ்டானத்தினாலுண்டாகி சித்தத்தில் தங்கும் அத்ருஷ்டம். பாபமென்பது நிஷித்தகர்மாவின் அநுஷ்டாநத்தினாலுண்டாகி சித்தத்தில் தங்கும் அத்ருஷ்டம். ப்ராரப்தமென்பது இந்த ஜந்மாவுக்குக் காரணபூதமான கர்மா. பிறப்பு மாத்ரத்தில் எண்ணமுடியாத பலவித

போகம் ஸித்தித்திருப்பதனுல் ப்ராரப்த புண்ய பாபங்களே, போகாயதந சரீரத்திற்கும் போகஸாதநத்திற்கும் ஸாதநத்தால் உண்டாகும் ஸுகதுக்க போகத்திற்கும் முக்கியகாரணங்களாய் இருக்கின்றன. புருஷப்ரயத்நத்தினுல் ப்ராரப்த கர்மாவின் பலனைத் தடுக்க முடியாது. ஒருவன் மற்ருெருவனுக்கு ஸுகத்தையாவது துக்கத்தையாவது உண்டு பண்ண முடியாது. தானும் ஜாக்ரதையினுல் தனக்கு வரும் துக்கத்தைத தடுக்கவும் ஸுகத்தை உண்டு பண்ணிக் கொள்ளவும் முடியாது. ப்ராரப்த புண்ய பாபத்திற்குத் தக்கபடி எவனும் ஸுகதுக்கங்களை அநுபவிக்கவே வேண்டும்.

सुखस्य दुःखस्य न कोऽपि दाता परो ददातीति कुबुद्धिरेषा ।
अहं करोमीति वृथाभिमानः स्वकर्मसूत्रग्रथितो हि लोकः ॥

ஸுகஸ்ய து:கஸ்ய ந கோபி தாதா
பரோ ததாதீதி குபுத்திரேஷா ।
அஹம் கரோமீதி வ்ருதாபிமாந:
ஸ்வகர்ம ஸூத்ரக்ரதிதோ ஹி லோக: ॥

ஸுகம் துக்கம் இவைகளை அளிப்பவன் யாருமில்லை. வேறு யாரோ அளிக்கிருர் என்ற எண்ணம் தவரும். நான் செய்கிறேன் என்பது வீண் அபிமாநம். தம்தம் கர்மபாசத்தினுல் ஸர்வஜநங்களும் கட்டுப்பட்டிருக்கிருர்கள்.

புருஷனுடைய யத்நம் புண்யத்தைச் செய்து நல்ல கதியை அடையவோ பாபத்தைச் செய்து துர்கதியை அடையவோ சக்தமாயிருக்கிறது. ப்ராரப்தத்தை விதியென்றும் பௌருஷத்தை மதி யென்றும்

சொல்வதுண்டு. 'மதியை வென்ருலும் விதியை வெல்ல முடியாது' என்ற பழமொழி மேற்சொன்ன அர்த்தத்தை விளக்கிக் காட்டும். இவ்விதம் இருந்தும் ப்ராணிகள், யத்நத்தால் தடுக்கமுடியாத ஸுகதுக்க விஷயத்தில் யத்நம் செய்துகொண்டும், தாம்செய்யும் புண்ய பாப விஷயத்தில் விதியைக் காரணமாய் சொல்லித் தப்பித்துக் கொள்வதுமாய் இருக்கின்ருர்கள். அவர்கள் விஷயத்தில் 'விதியை வென்ருலும் மதியை வெல்ல முடியாது' என்று பழமொழி இருக்கவேண்டும். தம் ஸுகதுக்கத்திற்காகவோ அந்யர்களுடைய ஸுகதுக்கத்திற்காகவோ யத்நம் பண்ணுகிறவர்கள், க்ஷணமாவது யத்நத்தை நிறுத்தி ஆலோசிப்பர்களானுல் "ஸுகமோ துக்கமோ நமக்கு அதீநமல்ல, புண்ய பாபத்திற்கு அதீநமாயிருக்கிறது" என்பதை அறியாம லிருக்கமாட்டார்கள். நளன் ஹரிச்சந்த்ரன் யுதிஷ்டிரர் முதலானவர்கள், பாபபலனுகிய துக்கத்திற்கு ப்ரதீகாரம் செய்யமுடியுமானுல், துக்கப்பட்டிருக்கமாட்டார்கள். புண்ய பலனுகிய ஸுகத்தை யத்நத்தினுல் அடைய முடியுமானுல் மேதாவிகள் அடையாமல் இருக்கமாட்டார்கள். ஆகவே புண்யம் ஸுகத்திற்குக் காரணமாயும், பாபம் துக்கத்திற்குக் காரணமாயும் இருக்கிறது.

கர்மாவால் நித்ய ஸுகத்தை அடைய முடியாது

நிஷித்தத்தை விலக்கி விஹிதத்தைச் செய்தால் மட்டும் துக்க ஸம்பந்தமில்லாத நித்ய ஸுகத்தை அடைய முடியாது. எல்லாக் கர்மாவும் தோஷத்தோடு கூடியதுதான்.

सर्वारम्भा हि दोषेण धूमेनाग्निरिवावृताः । (18—48)

ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேநாக்நிர்வாவ்ருதா: | (18-48)

நெருப்பு புகையுடன் கலந்திருப்பதுபோல எல்லாக் கர்மாக்களும் தோஷத்துடன் கலந்தே யிருக்கின்றன.

கர்மா, அவிசுத்தி க்ஷயம் அதிசயம் என்ற மூன்று வித தோஷங்களுடையது. அவிசுத்தி, ஹிம்ஸை முதலியவற்ருல் உண்டான ஸ்வல்ப பாப ஸம்பந்தம். க்ஷய மென்பது அழிவு. அதிசயம், தனக்கு மேலான தாக ஒன்றை யுடையது. ஜைமிநி மஹர்ஷியும் புண்யகர்மாவில் கொஞ்சம் பாப ஸம்பந்தமுண்டு என்பதாகச் சொல்லியிருக்கிருர்.

स्वल्पस्संकरः सुपरिहरः ; अथवा सप्रत्यवमर्शः ।

ஸ்வல்ப: ஸங்கர: ஸுபரிஹர:, அதவா ஸப்ரத்யவமர்ஶ: |

கொஞ்சம் பாபஸம்பந்தமுண்டு. அதை ப்ராயச் சித்தத்தால் போக்கடிக்கலாம். அல்லது பொறுத்துக் கொள்ளலாம்.

क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति । (9—21)

க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஶந்தி | (9-21)

புண்யம் அழிந்ததும் மனித லோகத்தை அடை கிருர்கள்.

என்ற வாக்யத்தால் அழிவு உண்டென்று ஏற்படு கிறது. கர்மாவில் தாரதம்யமிருப்பதனுல் நிரதிசய மல்ல, ஸாதிசயந்தான்.

न्यूनसंपदं हि पुरुषम् अधिकसंपत् दुःखाकरोति।

நியூநஸம்பதம் ஹி புருஷம் அதிகஸம்பத் து:காகரோதி।

குறைந்த ஸம்பத்துள்ளவனே அதிக ஸம்பத்து துக்கப்படுத்துகிறதல்லவா?

என்ற ந்யாயத்தால் அதிசயம் துக்கத்தை உண்டு பண்ணும். ஆகையால் ப்ராணிகள் அபேக்ஷிக்கும் துக்கஸம்பந்தமில்லாத நித்யஸுகம் கர்மாவால் அடையப்படாது.

ஜ்ஞாநம்தான் அதற்கு உபாயம். கீதாதாத்பர்யம்

உபாயம் வேறு இல்லையோ என்ருல் அதைச் சொல்லுவதற்குத்தான் இந்த கீதை ஏற்பட்டது. ஜ்ஞாநமே உபாயம். அது குருமுகமாய் தத்வவிசாரணையால்தான் உண்டாகும். ஜ்ஞாநம் உண்டாகச் சித்தம் சுத்தமாயிருக்கவேண்டும். பலேச்சை யில்லாமல் செய்யப்படும் கர்மாவினுல்தான் சித்தம் சுத்தமாகும். பக்தி கர்மாவில் சேரும். பலேச்சையோடு செய்யப்படும் கர்மா பந்தத்திற்கு ஹேது. இவ்விஷயங்கள் தான் பதினெட்டு அத்யாயங்களாலும் விரிவாய்ச் சொல்லப்பட்டுள்ளன.

ஜ்ஞாநமென்ருல் என்ன?

ஜ்ஞாநமென்பது க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களுடைய ஜ்ஞாநம்.

क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम। (13—2)

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோ: ஜ்ஞாநம்
யத் தத் ஜ்ஞாநம் மதம் மம। (13-2)

க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரஜ்ஞனேயும் தெரிந்து கொள்வது எதுவோ அதுவே ஜ்ஞாநம் என்பது என்னுடைய நிச்சயம்.

க்ஷேத்ர மென்பது த்ருச்யம். க்ஷேத்ரஜ்ஞனென்பது த்ரஷ்டா. இதே அத்யாயத்தில் பின்வரும் ஶ்லோகங்களால் க்ஷேத்ரத்தை விளக்கியிருக்கிறுர்.

महाभूतान्यहंकारो बुद्धिरव्यक्तमेव च ।
इन्द्रियाणि दशैकं च पञ्च चेन्द्रियगोचराः ॥

மஹாபூதாந்யஹங்கார: புத்திரவ்யக்தமேவ ச ।
இந்த்ரியாணி தசைகஞ்ச பஞ்ச சேந்த்ரிய கோசரா: ॥

इच्छा द्वेषः सुखं दुःखं संघातश्चेतना धृतिः ।
एतत्क्षेत्रं समासेन सविकारमुदाहृतम् ॥ (13—5,6)

இச்சா த்வேஷ: ஸுகம் து:கம் ஸங்காதஶ் சேதநா த்ருதி: ।
ஏதத் க்ஷேத்ரம் ஸமாஸேந ஸவிகார முதாஹ்ருதம் ॥
(13-5,6)

ஸூக்ஷ்ம பூதங்கள், அஹங்காரம், புத்தி, அவ்யக்தம், ஜ்ஞாநகர்மேந்திரியங்கள் பத்து, மநஸ் ஒன்று, சப்தாதி இந்த்ரிய விஷயங்கள் ஐந்து, இச்சை, த்வேஷம், ஸுகம், துக்கம், தேஹேந்த்ரியங்களின் கூட்டம், அறிவு, தைர்யம், விகாரங்களுடன்கூடிய இந்த க்ஷேத்ரம் உனக்குச் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டது.

க்ஷேத்ரஜ்ஞனே ஜ்ஞேயசப்தத்தால் குறிப்பிட்டுப் பின்வரும் சுலோகங்களால் விளக்கியிருக்கிறுர்.

ज्ञेयं यत्तत् प्रवक्ष्यामि यज्ज्ञात्वामृतमश्नुते ।
अनादिमत् परं ब्रह्म न सत्तन्नासदुच्यते ॥

ஜ்ஞேயம் யத் தத் ப்ரவக்ஷ்யாமி யத் ஜ்ஞாத்வாம்ருத
மஶ்நுதே ।
அநாதிமத் பரம் ப்ரஹ்ம நஸத் தந்நாஸதுச்யதே ॥

सर्वतः पाणिपादं तत् सर्वतोक्षिशिरोमुखम् ।
सर्वतः श्रुतिमल्लोके सर्वमावृत्य तिष्ठति ॥

ஸர்வத: பாணி பாதம் தத் ஸர்வதோக்ஷி ஶிரோமுகம் ।
ஸர்வத: ஶ்ருதிமத் லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி ॥

सर्वेन्द्रियगुणाभासं सर्वेन्द्रियविवर्जितम् ।
असक्तं सर्वभृच्चैव निर्गुणं गुणभोक्तृ च ॥

ஸர்வேந்த்ரிய குணாபாஸம் ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம் ।
அஸக்தம் ஸர்வப்ருச்சைவ நிர்குணம் குணபோக்த்ருச ॥

बहिरन्तश्च भूतानामचरं चरमेव च ।
सूक्ष्मत्वात्तदविज्ञेयं दूरस्थं चान्तिके च तत् ॥

பஹிரந்தஶ் ச பூதாநாம் அசரம் சரமேவ ச ।
ஸூக்ஷ்மத்வாத்ததவிஜ்ஞேயம் தூரஸ்தம் சாந்திகே சதத் ॥

अविभक्तं च भूतेषु विभक्तमिव च स्थितम् ।
भूतभर्तृ च तज्ज्ञेयं ग्रसिष्णु प्रभविष्णु च ॥

அவிபக்தஞ்ச பூதேஷு விபக்தமிவ ச ஸ்திதம் ।
பூதபர்த்ருச தத்ஜ்ஞேயம் க்ரஸிஷ்ணு ப்ரபவிஷ்ணு ச ॥

ज्योतिषामपि तज्ज्योतिस्तमसः परमुच्यते ।
ज्ञानं ज्ञेयं ज्ञानगम्यं हृदि सर्वस्य धिष्ठितम् ॥(13-12-17)

ஜ்யோதிஷாமபி தத்ஜ்யோதி: தமஸ: பரமுச்யதே ।
ஜ்ஞாநம் ஜ்ஞேயம் ஜ்ஞாநகம்யம் ஹ்ருதி ஸர்வஸ்ய
திஷ்டிதம் ॥ (13-12-17)

தெரிந்துகொள்ளத் தகுந்தது எதுவோ, எதைத் தெரிந்துகொண்டு மோக்ஷத்தை அடையலாமோ அதைச் சொல்லுவேன். ஆதியற்ற பரப்ரஹ்மம் ஸத்து மல்ல அஸத்துமல்ல. எங்கும் கைகளையும் கால்களையும் கண்களையும் தலைகளையும் வாய்களையும் காதுகளையு முடையதாய் ஸகலத்தையும் வ்யாபித்திருக்கிறது. ஸகலேந்த்ரியங்களின் வ்யாபாரங்களால்தான் வ்யாபார முடையதுபோல் இருப்பதாயும், ஸகலேந்த்ரி யங்களற்றதாயும், ஒன்றிலும் ஒட்டாததாயும், எல்லா வற்றையும் தாங்குகிறதாயும், குணங்களற்றதாயும், ஸுகம் முதலியவைகளை விளக்குகிறதாயும், பூதங்களின் உள்ளும் புறமும் இருக்கிறதாயும், ஸ்தாவர ஜங்கம ரூபமாயும், ஸூக்ஷ்மமானதால் அறியமுடியாததாயும், (அவிவேகிகளுக்கு) தூரத்தில் இருக்கிறதாயும், (விவேகிகளுக்கு) ஸமீபத்தில் இருக்கிறதாயும், அவிபக்தமானாலும் பூதங்களில் விபக்தம் போல் காணப் படுகிறதாயும், பூதங்களைப் படைத்துக்காப்பாற்றி அழிக் கிறதாயும், ஸூர்யசந்த்ரர்களுக்குங்கூட ப்ரகாசத்தைக் கொடுக்கிறதாயும், அஜ்ஞாநாதீதமாயும் சொல்லப்படு கிறது. ஜ்ஞாந ஸாதநமும் முன் சொல்லப்பட்ட ஜ்ஞேயவஸ்துவும் ஜ்ஞாந பலமும் ஸர்வப்ராணிகளு டைய புத்தியில் இருந்து கொண்டிருக்கின்றன.

இதன் தாத்பர்யம் :—பகவான் ஜ்ஞேயத்தைச் சொல்லுவதாக ப்ரதிஜ்ஞை செய்து "அது இருக் கிறதுமல்ல, இல்லாததுமல்ல" என்று சொல்லியிருக் கிறார். இது அஸங்கதம். ஏனென்றால் இருக்கிறது அல்லவென்றால் இல்லாததாக இருக்கவேண்டும். அதுவுமல்லவென்றால் அஸங்கதமே. மேலும் ஜ்ஞேய வஸ்துவை எப்படிக் குறிப்பிட்டதாக ஆகும்?

ஸமாதானம் :— உலகத்தில் இந்த்ரியகோசரமான வஸ்துவை இருக்கிறதென்றுவது இல்லை யென்றுவது சொல்வதுண்டு. ஜ்ஞேய வஸ்து ஸூக்ஷ்மமாய் இந்த்ரிய அகோசரமா யிருப்பதனால் இருக்கிறதென்றும் இல்லை யென்றும் சொல்லமுடியாது. அப்படியானால் ஜ்ஞேயம் உண்டு என்று நிர்ணயம் எவ்விதம் ஸித்திக்கும்? உலகத்திலுள்ள ஸர்வ ப்ராணிகளும், எடுப்பதும் நடப்பதும் பார்ப்பதும் கேட்பதுமான வ்யாபாரங்களைச் செய்துகொண்டு கை கால் முதலிய தேஹ அவயங்களோடு கூடி யிருப்பது, ஜ்ஞேய பரமாத்மா இருப்பதனால் தான். எப்படி யென்றால், கர்மேந்த்ரியங்கள் கர்மாவைச் செய்வதும் ஜ்ஞாநேந்த்ரியங்கள் விஷயங்களை க்ரஹிப்பதும் மநஸின் ஸம்பந்தத்தால் தான். மநஸும் விஜ்ஞாநாத்மாவை அபேக்ஷித்துச் சலிக்கும். விஜ்ஞாநாத்மாவும் இருக்கிறேன் என்ற ஸாமாந்ய ஜ்ஞாநத்தை அபேக்ஷித்து நிற்கிறது. ஸாமாந்யஜ்ஞாநம் உத்பத்தி உடையதா யிருப்பதானால் அநுத்பந்நமாய் (உண்டாகாததாய்) சாந்தமாய் சிந்மாத்ரமாயுள்ள ஜ்ஞேய வஸ்துவை அபேக்ஷித்து நிற்கிறது. ஆகவே ஜ்ஞேயம் (சாந்த ஜ்ஞாநம்) இல்லாவிட்டால் ஸாமாந்யமில்லை. அது இல்லாவிட்டால் விஜ்ஞாநமில்லை. விஜ்ஞாநமில்லாவிட்டால் மநஸில்லை. மநஸில்லாவிட்டால் இந்த்ரியங்களில்லை. இந்த்ரியங்களில்லாவிட்டால் விஷயக்ரஹணமில்லை. பாணிபாதாதி அவயவங்களையும் அவைகளின் வ்யாபாரங்களையும் அறிகிறோம். ஆகையால் ஶாந்த சிந்மாத்ரமான ஜ்ஞேய வஸ்து இருக்கிறதென்று ஸித்திக்கிறது. க்ஷேத்ர உபாதியின் வழியாய் க்ரஹிக்கப்படுவதானால் தான் ஜ்ஞேய பரமாத்மாவுக்கு க்ஷேத்ரஜ்ஞன் என்றுபெயர்.

ப்ரபஞ்சம் ஜ்ஞேய பரமாத்மாவில் கல்பிதம்.

नाधिष्ठानाद्भिन्नताऽऽरोपितस्य ।

நாதிஷ்டாநாத் பிந்நதா ஆரோபிதஸ்ய ।

(ஆரோபிதம் அதிஷ்டாநத்திற்குவேருகிறதில்லை.)

என்ற ந்யாயத்தை அநுஸரித்து பாணிபாதம் முதலிய சரீர அவயவங்கள் ஜ்ஞேய பரமாத்மாவுக்குச் சொந்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

आरोपितं नाश्रयदूषकं भवेत् ।

ஆரோபிதம் நாஶ்ரயதூஷகம் பவேத் ।

(கல்பிதம் ஆச்ரயத்தைக் கெடுக்காது)

என்கிற ந்யாயத்தை அநுஸரித்து,

न सत्तन्नासदुच्यते ।

நஸத் தத் நாஸதுச்யதே ।

என்ற வாக்யத்தால் கல்பிதத்தின் அபநயநம் செய்யப்பட்டிருக்கிறது.

अध्यारोपापवादाभ्यां निष्प्रपञ्चं प्रपञ्च्यते ।

அத்யாரோபாபவாதாப்யாம் நிஷ்ப்ரபஞ்சம் ப்ரபஞ்ச்யதே ।

(ஆரோபம் அபவாதம் இவ்விரண்டால் ப்ரபஞ்ச தர்ம ரஹிதமான ஜ்ஞேய வஸ்து தெளிவாய்ப் போதிக்கப்படுகிறது.)

என்பது வேதாந்தஸம்ப்ரதாயத்தை அறிந்த பெரியோர்களுடைய வசநம்.

ஜ்ஞேய வஸ்துவை விவரணம் செய்த ஶ்லோகங்களில் சில விசேஷணங்கள் ஆரோபத்தையும் சில விசேஷணங்கள் அபவாதத்தையும் குறிக்கின்றன.

ஆரோபத்தை மாத்ரம் சொல்லும் பக்ஷத்தில் ஆத்மா ப்ரபஞ்ச ரூபமாய் இருக்கிறதென்று க்ரஹிக்கப்படும். அதனால் ப்ரபஞ்ச மித்யாத்வம் ஸித்திக்காது. அபவாதம் மாத்ரம் சொன்னால் அப்பொழுதும் ப்ரபஞ்ச மித்யாத்வம் ஸித்திக்காது. ஆத்மா ப்ரபஞ்சத்திற்கு விலக்ஷணம் என்று மாத்ரம் ஏற்படும். ப்ரபஞ்சம் இருக்கிறது என்பதைத் தடுக்கமாட்டாது. ஆகையால் 'ப்ரபஞ்சம் ஆத்மாதான்' என்று ஆரோபத்தால் ப்ரபஞ்சம் வேறாய் உண்டு என்பதைத் தடுத்து, அபவாதத்தால் ஆத்மாவை ப்ரபஞ்ச விலக்ஷணமாகச் சொல்லும் பக்ஷத்தில் ப்ரபஞ்சமித்யாத்வம் ஸித்திக்கும். அது ஸித்தித்தால்தான் பேதபுத்தி விலகும். அது விலகினால்தான் அநுகூல ப்ரதிகூல புத்தி விலகும். அது விலகினால்தான் ராகமும் த்வேஷமும் விலகும். அவ்விரண்டும் விலகினால்தான் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திரூப கர்மா விலகும். கர்மா விலகினால்தான் கர்மஜந்யமான ஸம்ஸாரம் விலகும். ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு நிற்பதே மோக்ஷம். ஆகையால்தான் பகவான் பரமாத்மாவாகிய தன்னைச் சொல்லுமிடங்களிலெல்லாம் உலகமெல்லாம் தான் தான் என்ற ஆரோபத்தையும் தான் உலகத்திற்கு விலக்ஷணன் என்ற அபவாதத்தையும் சொல்லியிருக்கிறார். இவ்விடத்திலும் ஆரோப அபவாதங்களைக் காண்பித்திருக்கிறார்.

பின்வரும் ச்லோகத்தில் இந்த ஜ்ஞேயவஸ்துவை அறிந்தவன் முக்தனாகிறான் என்று சொல்லியிருக்கிறார்.

इति क्षेत्रं तथा ज्ञानं ज्ञेयं चोक्तं समासतः ।
मद्भक्त एतद्विज्ञाय मद्भावायोपपद्यते ॥ (13—18)

**இதிக்ஷேத்ரம்ததாஜ்ஞாநம் ஜ்ஞேயம் சோக்தம் ஸமாஸத: ।
மத்பக்த ஏதத்விஜ்ஞாய மத்பாவா யோபபத்யதே ॥ (13-18)**

இவ்விதம் க்ஷேத்ரம் ஜ்ஞாநம் ஜ்ஞேயம் இவைகள் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டன. என் பக்தன் இதை அறிந்து பரமாத்மபாவத்தை அடைகிருன்.

ஏழாவது அத்யாயத்தில் இரண்டு ப்ரக்ருதிகள் குறிப்பிடப்பட்டு பந்தஹேதுவான அபராப்ரக்ருதி எட்டுவிதம் பிரிக்கப்பட்டிருக்கிறது. இங்கு க்ஷேத்ரத்தால் குறிப்பிடப்பட்டது அதுதான். பராப்ரக்ருதியால் ஜீவனென்று குறிப்பிடப்பட்டது எதுவோ அதுவே க்ஷேத்ரஜ்ஞன். பகவானுடைய அபராப்ரக்ருதியானது கார்யகரண ஸங்காத ரூபமாய் அமையும் பொழுது பகவான் தன் நிஜரூபத்தோடு ஸர்வதீ[4] (புத்தி) வ்ருத்தி ஸாக்ஷியாய் க்ஷேத்ரஜ்ஞரூபமாய் அமைந்திருக்கிருர். ஸர்வப்ராணி ஶரீரங்களிலும் த்ரஷ்டாவாயிருப்பது பகவானே.

नान्योऽतोऽस्ति द्रष्टा ।

நாந்யோதோஸ்தி த்ருஷ்டா ।

இவனைத் தவிர வேறு த்ரஷ்டா கிடையாது.

அபராப்ரக்ருதியும் பகவானுக்கு அந்யமல்ல. அந்யமாயிருந்தால் ப்ரக்ருதிகார்யமான உலகத்தில் பகவான் இருக்கமுடியாது.

न तदस्ति विना यत् स्यान्मया भूतं चराचरम् । (10-39)

ந ததஸ்தி விநா யத்ஸ்யாத் மயாபூதம் சராசரம் । (10-39)

ஸ்தாவர ஜங்கம ரூபமாயுள்ள எதுவும் என்னை விட்டு இல்லை.

என்று எங்கும் தானிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆகையால் அபராப்ரக்ருதி பரமாத்மாவுக்கு அந்ய மல்ல. அபராப்ரக்ருதியின் கார்யமான ஸங்காதமும் பராப்ரக்ருதி ரூபமான க்ஷேத்ரஜ்ஞனும் பரமாத்மா வாகவேயிருந்தால் பராபரபரஸ்பரபேதமும் த்ரஷ்ட்ரு த்ருச்ய பேதமும் எபப்டி ஸித்திக்கும்? க்ஷேத்ரம் அல்லது த்ருச்யம் பரமாத்மாவாயிருந்தாலும் பரமாத்மாவிற்கு விலக்ஷணம். க்ஷேத்ரஜ்ஞன் பரமாத்ம ஸலக்ஷணன்; ஆகாச கார்யமான குடம் முதலானவை ஆகாச விலக்ஷணமாயும், அவற்றுள் இருக்கும் ஆகாசம் ஸலக்ஷணமாயுமிருப்பதுபோல. குடம் முதலானவை ஆகாச விலக்ஷணமானாலும் ஆகாச கார்யமானதால் ஆகாசம்தான்.

आत्मा ह्याकाशवज्जीवैर्घटाकाशैरिवोदितः ।
घटादिवच्च संघातैर्जातावेतन्निदर्शनम् ।। (मां-का–3–3.)

ஆத்மா ஹி ஆகாஶவத் ஜீவை: கடாகாஶைரிவோதித: ।
கடாதிவச்ச ஸங்காதை: ஜாதாவேதந்நிதர்ஶநம் ॥
(மாம்-கா-3-3)

ஆத்மா ஆகாசம் போல் இருக்கிறது. ஆகாசம் கடாகாசங்களாக உண்டானது போல ஆத்மா ஜீவர்களாக உண்டாயிருக்கிறது. ஆகாசம், குடம் முதலியனவாக உத்பத்தி அடைந்ததுபோல ஆத்மா ஸங்காதங்களாக உத்பத்தி அடைந்திருக்கிறது. உத்பத்தியில் இது த்ருஷ்டாந்தம்.

விலக்ஷண கடத்தில் ஸலக்ஷண ஆகாசம் இருப்பதனால்தான் ஜலம் கொண்டுவருதல் முதலான கார்யம் ஸித்திக்கிறது. அதேவிதமாக விலக்ஷண ஸங்காதமும் ஸலக்ஷண க்ஷேத்ரஜ்ஞனும் சேர்ந்திருப்பதனால் தான் வ்யவஹாரம் ஸித்திக்கிறது.

பரமாத்மாவின் அபராப்ரக்ருதியும் அதன் கார்யங்களும்

பரமாத்மாவின் அபராப்ரக்ருதி, ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற மூன்று குணங்களை உடையது. இம் மூன்றும் சேர்ந்தே யிருக்கும். ஆனால் ஒன்று அதிகப் பட்டும் மற்ற இரண்டும் குறைந்தும் இருக்கும். இந்த ந்யூநாதிக தாரதம்ய (ஏற்றக்குறைவு வித்தியாஸ) த்தி னால் ஆகாசாதிபூதபௌதிகப்ரபஞ்சம்வெளிப்பட்டிருக் கிறது. ஆகாசாதி ஸூக்ஷ்மபூதங்களுடைய ஸத்வாம் சம் தனித்தனியே ஐந்து ஜ்ஞாநேந்த்ரியங்களாகவும், சேர்ந்து அந்தக்கரணமாகவும், அவற்றின் ரஜோம்சம் தனித்தனியே பஞ்ச கர்மேந்த்ரியங்களாகவும் சேர்ந்து பஞ்சப்ராணன்களாகவும் மாறியிருக்கின்றது. இந்த ஸூக்ஷ்மபூதங்கள் பஞ்சீக்ருதமாகி ஸ்தூலபூதங்களா கின்றன. அவைகளிலிருந்து ஸ்தூலதேஹம் வெளிப் படுகிறது. ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஐந்து, கர்மேந்த்ரியங் கள் ஐந்து, ப்ராணன்கள் ஐந்து, அந்தக்கரணம் ஒன்று இந்தப் பதினாறும் சேர்ந்து லிங்கசரீரமென்று சொல் லப்படுகிறது. இந்த லிங்கம் ஸ்தூலத்தை ஆச்ரயித்தே யிருக்கும். புண்யபாபங்களுக்குத் தக்கபடி ஊர்த்வ அதோ லோகங்களுக்குப் போய் உச்ச நீச சரீரங்களை ஆச்ரயிக்கும். ஸ்தூலத்திற்கு அழிவு இருப்பது போல இதற்கு அழிவில்லை. ஆனால் ஜ்ஞாநத்தால் அழியும். அதாவது பிரிந்து அந்த அந்த பூதங்களுடன் சேரும். இந்த ஸ்தூலமும் அதை ஆச்ரயித்த லிங்கமும் சேர்ந்து ஸங்காதமென்றும் க்ஷேத்ரமென்றும் சொல் லப்படுகிறது. இந்த க்ஷேத்ரம் பலவிதம். இவைகளை விளக்கும் க்ஷேத்ரஜ்ஞன் ஒரே பரமாத்மா தான்.

क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत । (13—2)

க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத ।
(13-2)

ஸர்வக்ஷேத்ரங்களிலுமுள்ள க்ஷேத்ரஜ்ஞனே நான் என்று அறிந்துகொள்.

एको देवः सर्वभूतेषु गूढः ।

ஏகோ தேவ:ஸர்வபூதேஷு கூட: ।

ஒரே தேவன் ஸர்வபூதங்களிலும் மறைந்திருக்கிருன்.

லிங்கசரீரத்திலுள்ள ப்ராணன், கர்மேந்த்ரியம் ஜ்ஞாநேந்த்ரியம் அந்தக்கரணம் என்ற பதினென்றுக்கும் சக்தியைக்கொடுக்கிறது. ஒரு சரீரத்திலிருந்து மற்ருெரு சரீரத்தை அடைய ஸாதகமாயுமிருக்கும். கர்மேந்த்ரியங்கள் கர்மாவைச்செய்யும். ஜ்ஞாநேந்த்ரியங்கள் ரூபம் முதலான ஐந்து விஷயங்களை க்ரஹிக்கும். அந்தக்கரணம், மநஸ் புத்தி சித்தம் அஹங்காரம் என்று நான்கு விதமாக மாறும். அதில் சுபாசுப கர்மாக்களின் அத்ருஷ்டமும் சுபாசுப கர்மாக்களைச்செய்யும்படி தூண்டும் ஸம்ஸ்காரங்களும் தன்னிடத்திலுண்டாகும் இதரஜ்ஞாநஸம்காரங்களும் அடங்கியிருக்கும். பந்தஹேதுக்களான கர்த்ருத்வம் முதலான ஸர்வ ஸம்ஸார தர்மங்களும் இதில் அடங்கியிருக்கும். உண்மையில் புருஷன் பரமாத்மாவான க்ஷேத்ரஜ்ஞனுகவே யிருக்க அந்த உண்மையை அறியாமல் அந்தக்கரண தர்மங்களைத் தன்னிடத்தில் ஏற்றி ஸம்ஸாரியாகிருன்.

ஸம்ஸாரத்திலிருந்து விலகும் ப்ரகாரம்

பகவத்கீதையின் ப்ரதமஷட்கத்தை குருமுகமாய் விசாரித்துத் தன்னை ஸங்காதத்திலிருந்து விலக்கி சிந்மாத்ரனென்று அறிந்து, மத்யஷட்கத்தை குருமுகமாய் விசாரித்து, "அந்ருத ஜட துக்காத்மகமான ப்ரபஞ்சம் ஸச்சிதாநந்தரூபியான பரமாத்மாவுக்கு அத்யந்தம் விலக்ஷணமாயிருந்தாலும், மண்ணுக்கு விலக்ஷணமான குடம் எப்படி மண்மாத்ரமோ விலக்ஷண குடமென்று ஒரு பொருளாகவே யில்லையோ, அப்படி உலகமும் ஸச்சிதாநந்த பரமாத்மா தான், உலகமென்ற ஒரு பொருள் இல்லவே யில்லை, குடம்போல்தோன்றுவதுமாத்ரம்தான்" என்று சிந்மாத்ரபரமாத்மாவாக சேஷித்து, அந்த்ய ஷட்கத்தை குருமுகமாய் விசாரித்து, "சிந்மாத்ரமாய் சேஷித்து நிற்கிற பரமாத்மா சிந்மாத்ரமாயிக்கும் நான்தான்" என்று அறிவானேயானால், "சிந்மாத்ரமான எனக்கு அந்யமாய் ஒன்றும் ஒருபொழுதும் இருந்ததில்லை. நான் எப்பொழுதும் முக்தனாகவே யிருக்கிறேன்" என்று, ஸுரக்ஷிதனாய் தூங்கும் ஒருவன் தான் சாலையில் நடந்து போவதாயும் திருடர்களால் ஹிம்ஸிக்கப்படுவதாயும் ஸ்வப்நம் கண்டானாகில், எழுந்திருந்ததும் "நான் எப்பொழுதுமே ஸுக்ஷிதனாயிருக்கிறேன். ஒருபொழுதும் சாலையில் நடக்கவுமில்லை. திருடர்களால் ஹிம்ஸிக்கப்படவுமில்லை. விழித்துக்கொண்ட இந்த நிலையில் இருப்பது போலவே எப்பொழுது மிருக்கிறேன்" என்று நினைப்பதுபோல, நினைப்பான்.

ஸம்ஸாரி யார்?

பதின்மூன்ரும் அத்யாயத்தில் மூன்ருவது ச்லோகத்தால் க்ஷேத்ரஜ்ஞனுடைய மஹிமையைச் சொல்லுவதாகக் குறிப்பிட்டு 12 முதல் ஆறு சுலோகங்களால் (பக். 6) பரமாத்மப்ரபாவத்தை நிரூபணம் பண்ணியிருக்கிருர். இதனுலும் க்ஷேத்ரஜ்ஞனே பரமாத்மா என்று ஏற்படுகிறது. க்ஷேத்ரஜ்ஞன் அஸம்ஸாரி பரமாத்மாவாய் இருக்கும் பக்ஷத்தில் ஸம்ஸாரி யார்? அவித்யையால் த்ருச்யமாகிய க்ஷேத்ரத்தின் தர்மத்தை த்ரஷ்டாவான க்ஷேத்ரஜ்ஞனிடத்தில் ஏற்றிப்பார்க்கும் பக்ஷத்தில் க்ஷேத்ரஜ்ஞனே ஸம்ஸாரி போல் காணப்படுகிருன். வித்யையால் க்ஷேத்ர தர்மத்தை விலக்கும் போது க்ஷேத்ரஜ்ஞனே அஸம்ஸாரி பரமாத்மா. தோஷமுள்ள நேத்ரத்தினுல் வேறுவிதமாகக் காணப்படும் வஸ்து நேத்ரதோஷம் விலகியதும் உள்ளபடி காணப்படுகிறது. த்ரஷ்டாவின் தர்மத்தை த்ருச்யத்திலும் த்ருச்யதர்மத்தை த்ரஷ்டாவிலும் ஏற்றுவது அறியாமை யென்பது அநுபவஸித்தம். சர்க்கரையின் கார்யமான பொம்மையை மதுர ரஸமுடைய சர்க்கரைதான் என்று க்ரஹிக்காமல் பொம்மை யென்று க்ரஹிப்பது அறியாமையே. இவ்விதம் பரமாத்மப்ரக்ருதிகார்யமான ஜகத்தை ஸச்சிதாநந்தபரமாத்மா வென்றே க்ரஹிக்காமல் உலகமாயும் க்ஷேத்ரமாயும் க்ரஹிப்பது அறியாமையே. அறியாமையைத்தான் அவித்யை என்று சொல்வது. பரமாத்மவிலக்ஷண க்ஷேத்ரத்தை க்ஷேத்ரமாகவே க்ரஹித்து அதன் தர்மத்தை ஸலக்ஷண க்ஷேத்ரஜ்ஞனிடத்தில் அறியாமையினுல் ஏற்றிப்பார்ப்பதனுல் ஸம்ஸாரம்

ஸித்திக்கிறது. இந்த அர்த்தத்தை இதே அத்யாயத்தில் பின்வரும் சுலோகங்களால் நன்ருய் பகவான் நிரூபணம் செய்திருக்கிருர்.

पुरुषः प्रकृतिस्थो हि भुङ्क्ते प्रकृतिजान् गुणान् ।
कारण गुणसङ्गोऽस्य सदसद्योनिजन्मसु ॥ (13—21)

புருஷ: ப்ரக்ருதிஸ்தோ ஹி
புங்க்தே ப்ரக்ருதிஜாந் குணாந் |
காரணம் குணஸங்கோஸ்ய
ஸதஸத்யோநிஜந்மஸு ॥ (13-21)

यावत् संजायते किंचित् सत्त्वं स्थावरजङ्गमम् ।
क्षेत्रक्षेत्रज्ञसंयोगात्तद्विद्धि भरतर्षभ ॥ (13—26)

யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்த்வம் ஸ்தாவரஜங்கமம் |
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத் தத் வித்தி பரதர்ஷப ॥
(13-26)

புருஷன் ப்ரக்ருதியை (சரீரத்தை)த் தாஞக எண்ணி ப்ரக்ருதியிலுண்டான குணங்களை அநுபவிக்கிருன். புண்யபாப யோநிகளில் பிறப்பதற்கு முக்குணங்களின் கூட்டுறவே காரணமாயிருக்கிறது. ஓ பரதஶ்ரேஷ்டனே! ஸ்தாவர ஜங்கம ரூபமான வஸ்துக்கள் எவை எவை உண்டோ அவைகள் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களுடைய ஸம்பந்தத்திஞலுண்டானவைகளாகத் தெரிந்துகொள்.

ஸர்வாநர்த்தஹேதுவான இந்த அவித்யை யாருக்குச் சொந்தம் என்ற கேள்வி ஸங்கதமல்ல. ஸம்ஸாரியாயிருந்தால் அவனே அவித்யாவான். न हि दृष्टेऽनुपपत्तिर्नाम என்ற ந்யாயப்படி தான் அவித்யா

வானுயிருக்க அவித்யை யாருக்கு என்று ஏன் கேட்க வேண்டும்? முக்தனுயிருந்தால் அவித்யை தன் கார்யத்தோடு அழிந்து போனபடியால் கேள்வி பிறக்காது.

स्वप्रकाशे कुतोऽविद्या तां विना कथमावृतिः ।
इत्यादितर्कजालानि स्वानुभूतिर्ग्रसत्यसौ ॥ (चित्रदीपम्—28)

ஸ்வப்ரகாசே குதோவித்யா தாம் விநா கதமாவ்ருதி: ।
இத்யாதிதர்கஜலாநி ஸ்வாநுபூதிர்க்ரஸத்யஸௌ ॥
(சித்ரதீபம்-28)

ஸ்வப்ரகாசமான ஆத்மாவினிடத்தில் எப்படி அவித்யை வரும்? அஃது (அவித்யை) இல்லாமல் எப்படி ஆவரணம்? இவ்விதமான குதர்க்கஸமூஹங்களை ஸ்வாநுபவம் விழுங்கி விடுகிறது.

என்ற ஶ்லோகத்தால் குதர்க்கங்களை வித்யாரண்ய ஸ்வாமிகள் பஞ்சதஶியில் கண்டநம் செய்திருக்கிருர்.

பரமாத்மஸ்வரூபத்தை அறியும் ப்ரகாரம்

அஹங்காராதி ப்ரபஞ்சமெல்லாம் பரமாத்மாவாக இருந்தாலும் க்ஷேத்ரஜ்ஞனுடைய அபேதத்தால் தான் பரமாத்ம ஸ்வரூபம் விளங்கவேண்டும். பஞ்சை அறிய விரும்புகிறவனுக்கு, துணி பஞ்சாயிருந்தாலும் துணிமுடிச்சை அவிழ்த்து உள்ளேயிருக்கும் பஞ்சைக் காட்டுவதுபோல, பரமாத்மாவை ப்ரதர்ஶநம் பண்ண பஞ்சகோஶ முடிச்சுகளை அவிழ்த்து உள்ளிருக்கும் பரமாத்மாபின்ன க்ஷேத்ரஜ்ஞனை ஶாஸ்த்ரம் காட்டுகிறது.

குழந்தை சீனிக்கழியைப் பார்ப்பதுபோல வயது சென்றவனும் அதே கழியைத்தான் பார்க்கிருன். ஆனல் க்ரஹணத்தில் பேதம் இருக்கிறது. குழந்தை

சீனியை மறந்து மிட்டாய்க்கழி யென்றே நினைக்கிறான். ஆகையால்தான் சீனி வீட்டிலிருந்தாலும் மிட்டாய்க் கழி வேண்டுமென்று அழுகிறான். வயதுசென்றவனோ, "கழிமுழுவதும் சீனி தான்; கழியென்பது ஒரு பொருளல்ல; சீனியோ ப்ராப்தமாகவே யிருக்கிறது" என்று மிட்டாய்க்கழியைக் கவனிப்பதேயில்லை. இது போல, குழந்தைபோல் அவிவேகிகளாயிருக்கும் அஜ்ஞர்கள் உலகத்தை ஒரு பொருளாக நினைத்து விருப்பு வெறுப்புக் கொள்கிறார்கள். ஜ்ஞாநியோ உலகத்தை ஸந்மாத்ரமாக நினைத்து ப்ரபஞ்சநாம ரூபத்தை ஒரு பொருளாக நினைக்காமல் ஸத்வஸ்துவும் க்ஷேத்ரஜ்ஞ ரூபமாய் நித்யப்ராப்தமாகவே இருக்கிற தென்று, அஸத்தாகிய இந்த உலகத்தில் விருப்பு வெறுப்புக் கொள்கிறதில்லை.

இஃது இரண்டாவது அத்யாயத்தில் பின்வரும் ஶ்லோகங்களால் தெரிகிறது.

नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः ।
उभयोरपि दृष्टोऽन्तस्त्वनयोस्तत्त्वदर्शिभिः ॥

நாஸதோ வித்யதே பாவ: நாபாவோ வித்யதே ஸத: ।
உபயோரபி த்ருஷ்டோந்தஸ்து அநயோ: தத்தவதர்ஶிபி: ॥

अविनाशि तु तद्विद्धि येन सर्वमिदं ततम् ।
विनाशमव्ययस्यास्य न कश्चित् कर्तुमर्हति ॥

அவிநாஶிது தத் வித்தி யேந ஸர்வமிதம் ததம் ।
விநாஶமவ்யயஸ்யாஸ்ய ந கஶ்சித் கர்துமர்ஹதி ॥

अन्तवन्त इमे देहा नित्यस्योक्ताः शरीरिणः ।
अनाशिनोऽप्रमेयस्य तस्माद्युध्यस्व भारत ॥ (2–16-18)

அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா: ஶரீரிண: ।
அநாஶிநோப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத ॥
(2-16-18)

இல்லாத வஸ்துவுக்கு இருப்பு ஒருநாளும் இல்லை. இருக்கிற வஸ்துவுக்கு இல்லாமை ஒருநாளும் கிடையாது. இவ்விரண்டினுடைய நிச்சயம் தத்வதர்ஶிகளால் அறியப்பட்டிருக்கிறது. இச் சகலமும் எந்த வஸ்துவினால் வ்யாபிக்கப்பட்டிருக்கிறதோ அதை நாசமற்றதாக அறிந்துகொள். நாசமற்ற அதற்கு ஒருவனாலும் நாசமுண்டுபண்ண முடியாது. நாசமற்றதும் நித்யமானதும் ப்ரமாணங்களுக்கு அகோசரமுமான சரீரியினுடைய இச்சரீரங்கள் நாசத்தையுடையனவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஓ அர்ஜுநா! ஆகையால் யுத்தம் செய்.

சர்க்கரையைக்கண்டு சீனிக்கழியை சர்க்கரையென்று நிர்த்தாரணம் செய்வதுபோல ஸந்மாத்ரமாகிய பரமாத்மாவைக் கண்டல்லவா உலகத்தை பரமாத்மாவாக நிக்சயிக்கவேண்டும்? ஸந்மாத்ரமாகிய வஸ்துவை இன்னதென்று வாக்கினால் குறிக்கவும் முடியாது. மநஆதி இந்த்ரியங்களால் க்ரஹிக்கவும் முடியாது. ஆகவே எவ்விதம் நிர்த்தாரணம் செய்வதென்றால், வாக்கு ஸத்வஸ்துவைச் சொல்ல முடியாமற்போனாலும் அஸத்தை நிராகரணம் செய்வதனால் ஸத்வஸ்துவைக்குறிப்பிட்டதுபோலவே ஆகும். மநஸும் நேராக ஸத்வஸ்துவை க்ரஹிக்காவிட்டாலும் அஸத்க்ரஹணத்தை நிறுத்தி நிருத்த (சாந்த) மாயிருந்தால் ஸ்வப்ரகாஶமான க்ஷேத்ரஜ்ஞனை ஸத்வஸ்து மநஸில் ப்ரதிபலிக்கும். அந்த ப்ரதிபலநத்தைக்கொண்டு ஸத்

வஸ்துநிர்த்தாரணம் ஏற்படும்; கண்ணுடியில் தெரியும் முகத்தைக்கொண்டு கழுத்தின் மேலிருக்கும் முகத்தை நிச்சயிப்பதுபோல. “ஒரு பொழுது அஸத்தாயிருப்பது எப்பொழுதும் அஸத்தே. ஒரு பொழுதும் ஸத்தாகாது” என்பது பகவன்மதம் என்று 2-வது அத்யாயம் 16-வது சுலோகத்தில் (பக்கம் 20) நன்ருய் விளங்குகிறது. முக்குணமுடைய ப்ரக்ருதியும் அதன் கார்யமும் அந்தவத் (முடிவுடைய)தா யிருப்பதனுல் எப்பொழுதும் அஸத்தே.

இவ்விதம், ஜகத் காலத்ரயத்திலும் அஸத்தென்றும் அதன் அதிஷ்டாநமான ஸத்ரூபியான பரமாத்மா க்ஷேத்ரஜ்ஞனை தானே யென்றும் நிச்சயிப்பது தான் ஜ்ஞாநம்.

ஜ்ஞாநஸாதநங்கள்

இந்த ஜ்ஞாநம் பின்வரும் ஶ்லோகங்களால் குறிப்பிடப்பட்ட ஜ்ஞாநஸாதநங்கள் இருந்தால்தான் உண்டாகும்.

अमानित्वमदम्भित्वमहिंसा क्षान्तिरार्जवम् ।
आचार्योपासनं शौचं स्थैर्यमात्मविनिग्रहः ॥

அமாநித்வம் அதம்பித்வம் அஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம் ।
ஆசார்யோபாஸநம் ஶௌசம் ஸ்தைர்யமாத்மவிநிக்ரஹ: ॥

इन्द्रियार्थेषु वैराग्यमनहंकार एव च ।
जन्ममृत्युजराव्याधिदुःखदोषानुदर्शनम् ॥

இந்த்ரியார்தேஷு வைராக்யம் அநஹங்கார ஏவ ச ।
ஜந்ம ம்ருத்யு ஜராவ்யாதி து:கதோஷாநுதர்ஶநம் ॥

असक्तिरनभिष्वङ्गः पुत्रदारगृहादिषु ।
नित्यं च समचित्तत्वमिष्टानिष्टोपपत्तिषु ॥

அஸக்தி ரநபிஷ்வங்க: புத்ரதார க்ருஹாதிஷு |
நித்யஞ்ச ஸமசித்தத்வம் இஷ்டாநிஷ்டோபபத்திஷு ||

मयि चानन्ययोगेन भक्तिरव्यभिचारिणी ।
विविक्तदेशसेवित्वमरतिर्जनसंसदि ॥

மயிசாநந்யயோகேந பக்திரவ்யபிசாரிணீ |
விவக்ததேஶஸேவித்வம் அரதிர்ஜநஸம்ஸதி ||

अध्यात्मज्ञाननित्यत्वं तत्त्वज्ञानार्थदर्शनम् ।
एतज्ज्ञानमिति प्रोक्तमज्ञानं यदतोऽन्यथा ॥ (13-7-11)

அத்யாத்மஜ்ஞாநநித்யத்வம் தத்த்வஜ்ஞார்த தர்ஶநம் |
ஏதத் ஜ்ஞாநமிதி ப்ரோக்தம் அஜ்ஞாநம் யததோந்யதா ||
(13-7-11)

ஆத்மஸ்துதி டம்பம் இவைகளற்றிருத்தலும், பிறருக்கு ஹிம்ஸை உண்டாக்காமலிருத்தலும், பொறுமையும், நேர்வழியில் ப்ரவ்ருத்திப்பதும், குரு ஸேவையும், உள்ளும்புறமும் சுத்தமாயிருத்தலும், ஸ்திர புத்தியுடன் கூடியிருத்தலும், இந்த்ரியங்களை அடக்கி ஸந்மார்க்கத்தில் செலுத்துதலும், விஷயங்களில் ஆசையற்றிருத்தலும், அஹங்காரமற்றிருத்தலும், ஜநநம் மரணம் கிழத்தனம் வ்யாதி துக்கம் இவைகளில் தோஷபுத்தியுடைத்தாயிருத்தலும், புத்ர களத்ர வீடு முதலியவைகளில் ப்ரீதியற்றிருத்தலும், இஷ்டம் அநிஷ்டம் ஸம்பவிக்குமேயானல் எப்பொழுதும் ஸம புத்தியுடன் கூடியிருத்தலும், என்னிடத்தில் ஏகாக்ர சித்தத்தினுல் சலிக்காத பக்தி செலுத்துதலும், தனித்த

தேசத்திலிருத்தலும், ஜநஸமூஹத்தில் ப்ரீதியற்றிருத்தலும் ஸ்வரூபஜ்ஞாநத்திலேயே எப்பொழுதும் மநஸை வைத்தலும் தத்வஜ்ஞாநத்தின் பலனுகிய மோக்ஷஸ்வரூபத்தைச் சிந்தித்தலுமே ஜ்ஞாநமென்றும் இவைகள் அற்றதாயுள்ள மற்றதெல்லாம் அஜ்ஞாந மென்றும் சொல்லப்படுகிறது.

ஜ்ஞாநத்தால்தான் மோக்ஷம் ஸித்திக்கும்

ஜ்ஞாநம் உண்டானமாத்ரத்தில் குணமயமான ஸம்ஸாரம் ஒழிந்து நித்யாநந்த ஸ்வரூபியான பரமாத்மாவாய் நின்றுவிடுகிருன். அவன் சித்தம் அஸத்தாகிய உலகத்தில் இறங்காமல் எப்பொழுதும் ஆநந்தரூபியான பரமாத்மாவினிடத்திலேயே நிற்கும். இது தான் மோக்ஷம். இது ப்ராப்தமாகவே யிருப்பதனுல் ஜ்ஞாநமே இதற்கு ஸாதநம். இந்த அர்த்தம் பின் வரும் ஶ்லோகங்களால் நன்ருய் விளங்கும்.

ज्ञेयं यत्तत् प्रवक्ष्यामि यज्ज्ञात्वाऽमृतमश्नुते ।
अनादिमत् परं ब्रह्म न सत्तन्नासदुच्यते ॥ (13–12. ப-6)

ஜ்ஞேயம் யத் தத் ப்ரவக்ஷ்யாமி
யத் ஜ்ஞாத்வாம்ருதமஶ்நுதே ।
அநாதிமத் பரம் ப்ரஹ்ம
நஸத் தத் நாஸதுச்யதே ॥ (13-12. ப. 6)

इति क्षेत्रं तथा ज्ञानं ज्ञेयं चोक्तं समासतः ।
मद्भक्त एतद्विज्ञाय मद्भावायोपपद्यते ॥ (13–18. ப-11)

இதிக்ஷேத்ரம் ததா ஜ்ஞாநம் ஜ்ஞேயம் சோக்தம் ஸமாஸத: ।
மத்பக்த ஏதத் விஜ்ஞாய மத்பாவாயோபபத்யதே ॥
(13–18. ப. 11)

य एवं वेत्ति पुरुषं प्रकृतिं च गुणैः सह ।
सर्वथा वर्तमानोऽपि न स भूयोऽभिजायते ॥ (13–23)

யஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச குணைஸ்ஸஹ ।
ஸர்வதா வர்தமானோபி நஸ பூயோபிஜாயதே ॥ (13-23)

समं सर्वेषु भूतेषु तिष्ठन्तं परमेश्वरम् ।
विनश्यत्स्वविनश्यन्तं यः पश्यति स पश्यति ॥ (13–27)

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஶ்வரம் ।
விநஶ்யத்ஸு அவிநஶ்யந்தம் ய:பஶ்யதி ஸ பஶ்யதி ॥
(13-27)

இவ்விதம் புருஷனையும் தன் கார்யங்களோடு கூடின ப்ரக்ருதியையும் எவன் தெரிந்துகொள்கிருனே அவன் எப்படி யிருந்தபோதிலும் மறுபடியும் பிறக்க மாட்டான். ஸகல ப்ராணிகளிலும் ஸமமாயிருக்கிற வரும் ஸகலமும் நசித்தபோதிலும் தான் நசியாத வருமாயிருக்கிற பரமேஶ்வரனை எவன் தெரிந்துகொள் கிருனே அவன்தான் உண்மையைப் பார்க்கிருன்.

समं पश्यन् हि सर्वत्र समवस्थितमीश्वरम् ।
न हिनस्त्यात्मनात्मानं ततो याति परां गतिम् ॥ (13–28)

ஸமம் பஶ்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்தித மீஶ்வரம் ।
நஹிநஸ்தி ஆத்மநாத்மாநம் ததோ யாதி பராம் கதிம் ॥
(13–28)

எல்லாவிடத்திலும் ஸமமாயிருக்கிற பகவானைத் தெரிந்து கொண்டவன் தன்னுல் தன்னை ஹிம்ஸித்துக்கொள்ள மாட்டான். அதனுல் உத்தமமான மோக்ஷத்தை அடைகிருன்.

यदा भूतपृथग्भावमेकस्थमनुपश्यति ।
तत एव च विस्तारं ब्रह्म संपद्यते तदा ॥ (13–30)

யதா பூதப்ருதக்பாவம் ஏகஸ்தமநுபச்யதி ।
ததஏவது விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா ॥ (13-30)

நாநாவித பேதங்களையுடைய ப்ரபஞ்சத்தை ஒன்ருகிய ஆத்மாவினிடத்தில் (கல்பிதமாய்) இருப்பதாயும் ஆத்மாவினிடத்திலிருந்துதான் அவைகள் உண்டானதாயும் எப்பொழுது பார்க்கிருனே அப்பொழுது ப்ரஹ்மமாகிருன்.

क्षेत्रक्षेत्रज्ञयोरेवमन्तरं ज्ञानचक्षुषा ।
भूतप्रकृतिमोक्षं च ये विदुर्यान्ति ते परम् ॥ (13–34)

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோரேவமந்தரம் ஜ்ஞாநசக்ஷுஷா ।
பூதப்ரக்ருதிமோக்ஷம் சயே விதுர்யாந்தி தே பரம் ॥ (13-34)

அநுபவஜ்ஞாநம் என்கிற த்ருஷ்டியினுல் சரீரம் சரீரி இவைகளின் இவ்வித பேதத்தையும் பூதங்களுக்குக் காரணமான ப்ரக்ருதி இல்லையென்பதையும் யார் தெரிந்துகொள்கிருர்களோ அவர்கள் மோக்ஷத்தை அடைகிருர்கள்.

नान्यं गुणेभ्यः कर्तारं यदा द्रष्टानुपश्यति ।
गुणेभ्यश्च परं वेत्ति मद्भावं सोधिगच्छति ॥ (14–19)

நாந்யம் குணேப்ய: கர்தாரம் யதா த்ரஷ்டாநுபச்யதி ।
குணேப்யச்ச பரம் வேத்தி மத்பாவம் ஸோதிகச்சதி ॥
(14-19)

கார்யகரண ஸங்காதரூபமாய் அமைந்த ஸத்வாதி குணங்கள்தான் கர்த்தா, அதற்கு வேருய் கர்த்தா

இல்லை, தான் குணவ்யாபாரஸாக்ஷிபூதன், குண வ்யாபாரமற்றவன் என்று எப்பொழுது அறிகிருனே அப்பொழுது ப்ரஹ்மபாவத்தை அடைகிருன்.

गुणानेतानतीत्य त्रीन् देही देहसमुद्भवान् ।
जन्ममृत्युजरादुःखैर्विमुक्तोऽमृतमश्नुते ॥ (14–20)

குணாநேதாநதீத்ய த்ரீந் தேஹீ தேஹஸமுத்பவாந் |
ஜந்மம்ருத்யுஜராது:கை: விமுக்தோம்ருதமஶ்நுதே ||
(14-20)

தேஹியானவன் தேஹமுண்டாவதற்குக் காரண பூதமான இந்த முக்குணங்களேயும் கடந்து பிறப்பு இறப்பு முதுமை துக்கம் இவைகளால் விடுபட்டவனுய் மோக்ஷத்தை அடைகிருன்.

यस्य नाहंकृतो भावो बुद्धिर्यस्य न लिप्यते ।
हत्वापि स इमाँल्लोकान्न हन्ति न निबध्यते ॥ (18–17)

யஸ்யநாஹங்க்ருதோபாவ: புத்திர்யஸ்ய நலிப்யதே |
ஹத்வாபி ஸ இமாந் லோகாந் நஹந்தி நநிபத்யதே ||
(18-17)

எவனுக்குத் தான் கர்த்தா வென்கிற எண்ண மில்லையோ, எவனுடைய புத்தி கர்மாவில் ஒட்டாம லிருக்கிறதோ, அவன் இவ்வுலகிலுள்ள ப்ராணிகளேக் கொன்றபோதிலும் கொன்றவனுகமாட்டான். அக் கர்மாவால் கட்டப்பட மாட்டான்.

கர்த்தா கர்மா கரணம் கர்மபலம் ஶ்ரத்தை முதலி யன வெல்லாம் குணமயமென்றும், அதன் ஸம்பந்த மிருக்குமேயானுல் துக்க ரூப ஸம்ஸாரம் விலகாதென் றும் சொல்லி, 14–20–வது (பக்—27) ஶ்லோகத்தால்

அதில் ஸம்பந்தமில்லாமல் தாண்டி நிற்பவன் எவனோ அவனே ஜந்மபந்தத்திலிருந்து விடுபட்டவனாகிறானென்று பகவான் வெளியிட்டிருக்கிறார். ஏதாவது ஒரு தேஹத்துடன் கலந்திருப்பானானால் அவன் தேவலோகத்தில் தேவனாயிருந்தாலும் ப்ரக்ருதியிலிருந்து உண்டான குணங்களால் விடுபட்டவனாகமாட்டான். இந்த அர்த்தம்—

न तदस्ति पृथिव्यां वा दिवि देवेषु वा पुनः ।
सत्त्वं प्रकृतिजैर्मुक्तं यदेभिः स्यात् त्रिभिर्गुणैः ॥ (18–40)

நததஸ்தி ப்ருதிவ்யாம் வா திவி தேவேஷு வா புந: |
ஸத்த்வம் ப்ருக்திஜைர்முக்தம் யதேபி: ஸ்யாத்த்ரிபி: குணை: ॥ (18-40)

என்கிற ஶ்லோகத்தால் விளங்குகிறது.

மோக்ஷஸ்வரூபம்

இதனால் மோக்ஷமென்பது அஶரீரபரமாத்மநிலைதான். ஶரீரத்தோடு கூடியிருப்பானேயானால் தேவனாயிருந்தாலும் குணபத்தனே.

மோக்ஷமென்பது லோகாந்தரத்தை அடைவது அல்லது ஒரு நாமரூபத்தோடு கூடின தேவதையின் ஸாரூப்யத்தை அடைந்து அவன் ஸந்நிதாநத்தில் இருப்பதல்ல. அஶரீர பரமாத்மாவாயிருக்கும் தன்னை உள்ளபடி அறிந்து அதுவாக நிற்பதுதான் மோக்ஷமென்பது பகவானுடைய மதம்.

புருஷோத்தமன் யார்?

மண்ணுண்டை காரணம். குடம் சட்டி முதலியன கார்யம். கார்யமும் மண்ணே. காரணமும் மண்ணே.

இரண்டும் மண்ணுயிருப்பதனுல் உபயாநுகதமான மண் கார்யமு மல்ல, காரணமு மல்ல. கார்யகாரண பாவ ரஹிதமான மண் சுத்தம். இப்படிஸர்வ பூதங்களும் புருஷனே. ஸர்வ பூதங்களுக்கும் காரணமான பரமாத்மப்ரக்ருதியும் அஃதாவது மாயையும் புருஷனே. உபயாநுகதனுன புருஷன் கார்ய பூதங்களாகாமலும் காரணப்ரக்ருதியாகாமலுமுள்ள சுத்தன். அவனுக்குத்தான் புருஷோத்தமன் என்று பெயர். பரமாத்மா வென்றும் சொல்லுவார்கள். 15-வது அத்யாயத்திலுள்ள பின்வரும் ஶ்லோகங்களால் இந்த அர்த்தம் வெளியாகிறது.

द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरः सर्वाणि भूतानि कूटस्थोक्षर उच्यते ॥ (15–16)

த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஶ்சாக்ஷர ஏவச ।
க்ஷரஸ்ஸர்வாணி பூதாநி கூடஸ்தோக்ஷர உச்யதே ॥ (15-16)

उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥ (15–17)

உத்தம: புருஷஸத்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: ।
யோலோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர: ॥ (15-17)

यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ॥ (15–18)

யஸ்மாத் க்ஷரமதீதோஹம் அக்ஷராதபி சோத்தம: ।
அதோஸ்மி லோகேவேதே ச ப்ரதித: புருஷோத்தம: ॥
(15-18)

உலகத்தில் க்ஷரனென்றும் அக்ஷரனென்றும் இரண்டு புருஷர்கள் உண்டு. ஸகல ப்ராணிகளும் க்ஷர மென்றும் ப்ரக்ருதி அக்ஷரமென்றும் சொல்லப்படுகின்றன. இவ்விரண்டு புருஷர்களுக்கு விலக்ஷணமாய் உத்தமபுருஷனுண்டு. அவன் பரமாத்மாவென்று சொல்லப்பட்டிருக்கிறுன். அந்த நாசமற்ற ஈச்வரன் மூவுலகங்களையும் ப்ரவேசித்து அவைகளை தரிக்கிறுன். யாதொரு காரணத்தினுல் நான் க்ஷரத்தைக் கடந்தவனுகவும் அக்ஷரத்தைக் காட்டிலும் ச்ரேஷ்டனுகவும் இருக்கிறேனே அதனுல் இவ்வுலகிலும் ஶ்ருதியிலும் புருஷோத்தமன் என்கிற பெயரால் வழங்கப் படுகிறேன்.

எவனொருவன் ப்ரபஞ்சநாமரூபங்களால் மோஹமடையாமல் இவ்விதம் கார்யகாரணபாவரஹிதமான புருஷோத்தமனைத் தெரிந்துகொள்கிறுனே அவன் எல்லாவற்றையும் அறிந்தவனுகிறுன். ஸர்வாத்மாவான என்னையே பஜநம் செய்கிறுன். இந்த அர்த்தம் பின்வரும் ஶ்லோகத்தால் விளங்குகிறது.

यो मामेवमसंमूढो जानाति पुरुषोत्तमम् ।
स सर्वविद्भजति मां सर्वभावेन भारत ॥ (15–19)

யோ மா மேவமஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம் ।
ஸஸர்வவித் பஜதி மாம் ஸர்வபாவேந பாரத ॥ (15-19)

ஓ அர்ஜுநா! எவன் மோஹமற்றவனுய் இவ்விதம் என்னைப் புருஷோத்தமனுகத் தெரிந்துகொள்கிறுனே அவன் எல்லாவற்றையும் தெரிந்தவகிறுன். அவன் எல்லாம் பரமாத்மா என்ற எண்ணம் உடையவனுய் என்னை பஜிக்கிறுன்.

கார்யகாரணபாவரஹிதமான உத்தமபுருஷனை எவ்விதம் தெரிந்துகொள்கிறது என்ருல், தெரிந்து கொள்ளவேண்டியதில்லை. தெரிந்துகொள்ள வேண்டிய ப்ரயத்நத்தை அபேக்ஷிக்காமல் மற்றொன்றை அறியும் ப்ரயத்நத்தை நிறுத்தினமாத்ரத்தில் தனக்குத் தானகவே விளங்கும் நித்யஸித்தமான க்ஷேத்ரஜ்ஞனே பரமாத்மாத்மா. அவனே உத்தமபுருஷன். இந்த அர்த்தம் பின்வரும் சுலோகத்தால் விளங்குகிறது.

उपद्रष्टानुमन्ता च भर्ता भोक्ता महेश्वरः ।
परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन् पुरुषः परः ॥(13—22)

உபத்ரஷ்டாநுமந்தாச பர்தா போக்தா மஹேஶ்வர: ।
பரமாத்மேதிசாப்யுக்த: தேஹேஸ்மிந் புருஷ: பர: ॥ (13-22)

(கார்யகரணவ்யாபாரங்களில் தான் ஸம்பந்தப் படாமல் கார்யகரணங்களுக்கு) பக்கத்திலிருந்து பார்க்கிறவனும், (கார்யகரணவ்யாபாரங்களைத் தடுக்காததனுல் கார்யகரணவ்யாபாரங்களை) அநுமோதநம் பண்ணுகிறவனும், (தேஹேந்த்ரியாதிகளை) தாரணம் செய்கிறவனும், (ஸுகதுக்கமோஹங்களை ப்ரகாசப் படுத்துகிறதனுல்) புஜிக்கிறவனும், (ஸர்வாத்மாவாயிருப்பதனுல்) மஹானும்,(ஸ்வதந்த்ரனுயிருப்பதனுல்) ஈச்வரனும், (அறியாமையினுல் ஆத்மாவாக நினைக்கப் பட்ட தேஹாதிகளைக் காட்டிலும் உத்க்ருஷ்டமாயிருப்பதனுல்) பரமாத்மாவென்று சொல்லப்பட்டவனுயுமிருக்கிற உத்தம புருஷன் இந்த தேஹத்தில் இருக்கிருன்.

இந்த ஶ்லோகத்தில் **अस्मिन् देहे** என்று சொல்லி யிருப்பதனாலும் **उपद्रष्टा** முதலிய விசேஷணங்களா லும் க்ஷேத்ரஜ்ஞனே உத்தம புருஷன். அவனே பரமாத்மா வென்று ஸித்திக்கிறது. நிஷ்க்ரிய க்ஷேத்ரஜ் ஞனிடத்தில் தர்ஶநாதிக்ரியா கர்த்ருத்வம் ஔபசாரிக மாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் ஸாந்நித்யம் இதில் நிமித்தம்.

விகாரியான ப்ரபஞ்சநாமரூபங்களால் மோஹ மடைந்து அந்த இடத்திலேயே நாமரூபரஹிதனும் நிர்விகாரியாயிருக்கும் என்னை உலகம் பார்க்கிறதில்லை என்று பின்வரும் ஶ்லோகத்தால் பகவான் சொல்லி யிருப்பதால் குணமய பாவங்கள் தோற்றமாத்ர மென்று ஸித்திக்கிறது.

त्रिभिर्गुणमयैर्भावैरेभिः सर्वमिदं जगत् ।
मोहितं नाभिजानाति मामेभ्यः परमव्ययम् ॥ (7–13)

த்ரிபி: குணமயைர்பாவை: ஏபி: ஸர்வமிதம் ஜகத் ।
மோஹிதம் நாபிஜாநாதி மாமேப்ய: பரமவ்யயம் ॥ (7-13)

குணமயபாவங்களைப் பார்க்காமல் அங்குள்ள பரமாத்மாவைப் பார்க்கிறவனே சரியான பார்வை யுடையவன். இந்த அர்த்தம் 13-வது அத்யாயத்தில் 27-வது சுலோகத்தால் (பக்—25) விளங்குகிறது.

அந்த்ய ஷட்க தாத்பர்ய ஸங்க்ரஹம்

அந்த்ய ஷட்கத்திலுள்ள 15-வது அத்யாயத்தில் பகவான் ஸம்ஸாரத்தை அஶ்வத்தவ்ருக்ஷமாகக் கல்ப் பனை செய்து, அதில் ஸம்பந்தம் வைக்காமல், எதை

அடைந்தால் திரும்பமாட்டானே அந்த ஸ்தாநத்தைத் தேட வேண்டுமென்று குணமயஜகத்தை தூஷித்திருக்கிறார்.

இந்த அந்த்யஷட்கத்தில் தைவ ஸம்பத்தையும் அஸுர ஸம்பத்தையும் விரிவாய்ச்சொல்லியிருக்கிறார். அஸுரஸம்பத்தை விலக்கி தைவஸம்பத்தை க்ரஹிக்க வேண்டும் என்பது தாத்பர்யம். ஸத்வம் ரஜஸ் தமஸ் இவைகளையும் இவைகளின் கார்யங்களையும் தனித்தனியாய்ப் பிரித்து விரிவாய்ச் சொல்லியிருக்கிறார். ராஜஸ தாமஸ கார்யங்களை விலக்கி ஸாத்விக கார்யங்களை க்ரஹிக்க வேண்டுமென்பது தாத்பர்யம். இந்த அந்த்ய ஷட்கத்தில் "உலகம் பொய், அதற்கு அதிஷ்டாநமான பரமாத்மா ஸத்யம். அந்த பரமாத்மா க்ஷேத்ரஜ்ஞன் தான், பொய்யான உலகத்தில் மோஹமுள்ளவர்களுக்கு இந்த உண்மை தெரியாது, மோக்ஷமென்பது பரமாத்மாவுக்கு வேறாகாத க்ஷேத்ரஜ்ஞனாய் நிற்பது தான்" என்கிற விஷயங்கள்தான் சொல்லப்பட்டிருக்கின்றன.

அந்த்ய ஷட்க தாத்பர்யமே இதர ஷட்கதாத்பர்யம்

இவ்விஷயங்கள்தான் ப்ரதமஷட்கத்திலும் மத்யம ஷட்கத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் ப்ரதமஷட்கத்தில் த்வம்பதார்த்தத்தை ப்ரதாநமாகவும் மத்யஷட்கத்தில் தத்பதார்த்தத்தை ப்ரதாநமாகவும் அந்த்யஷட்கத்தில் ஐக்யத்தை ப்ரதாநமாகவும் எடுத்துக்கொண்டிருக்கிறார்.

த்வம்பதார்த்தத்தைச் சொல்லும்போது தத் பதார்த்தத்தின் அபேதத்தைச் சொன்னால்தான் த்வம் பதார்த்தத்தின் உண்மையைச் சொன்னதாகும். தத் பதார்த்தத்தைச் சொல்லும்போது த்வம் பதார்த்தத்தின் அபேதத்தைச் சொன்னால்தான் தத்பதார்த்தத்தின் உண்மையைச் சொன்னதாகும். உலகம் பொய்யானால் தான் இவ்விரண்டின் அபேதம் ஸித்திக்கும். ரஜஸ் தமஸ் அடங்கி ஸத்வம் எவனுடைய அந்தக்கரணத்தில் மேலிட்டிருக்கிறதோ அவனே இந்த தத்வத்தை அறிய சக்தியுள்ளவன். ஆகையால் ரஜஸ் தமஸ் அடங்கி ஸத்வம் மேலிடுவதற்குத்தக்க உபாயங்களை மூன்று ஷட்கங்களிலும் சொல்லியிருக்கிறார்.

இரண்டாம் அத்யாயம்

இரண்டாவது அத்யாயதாத்பர்யம்

இரண்டாவது அத்யாயத்தில் 11-வது ஶ்லோகத்திற்கு முந்தின பாகமெல்லாம் அர்ஜுநனுடையஶோகமோஹத்தைக் காண்பிப்பதற்காக ஏற்பட்டது. ஆத்மஜ்ஞாநமில்லாமல் ஶோகமோஹநிவ்ருத்தி உண்டாகாது என்பதை அறிந்து பகவான் அர்ஜுநனுக்கு ஆத்ம ஜ்ஞாநத்தையே உபதேசிக்கத் தொடங்கினார்.

अशोच्यानन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषसे ।
गतासूनगतासूंश्च नानुशोचन्ति पण्डिताः ॥ (2–11)

அஶோச்யாநந்வஶோச: த்வம்
ப்ரஜ்ஞாவாதாந் ச பாஷஸே ।
கதாஸூந் அகதாஸூந் ச
நாநு ஶோசந்தி பண்டிதா: ॥ (2-11)

ஓ அர்ஜுநா! துக்கிக்கக்கூடாதவர்களைப்பற்றி நீ துக்கிக்கிறாய். ஆனால் புத்திமான்களைப் போல் நீ பேசுகிறாய். ஆத்மஜ்ஞாநிகள் இறந்தவர்களைப் பற்றியாவது ஜீவித்திருப்பவர்களைப் பற்றியாவது துக்கிக்கமாட்டார்கள்.

என்கிற ஶ்லோகத்தால் ஆத்மஜ்ஞாநிகள் ஶோகமடையமாட்டார்கள் என்று ஆரம்பம் செய்து,

न त्वेवाहं जातु नासं न त्वं नेमे जनाधिपाः ।
न चैव न भविष्यामः सर्वे वयमतः परम् ॥

நத்வேவாஹம் ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா: ।
நசைவ நபவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் ॥

देहिनोऽस्मिन् यथा देहे कौमारं यौवनं जरा ।
तथा देहान्तरप्राप्तिर्धीरस्तत्र न मुह्यति ॥ (2–12, 13)

தேஹிநோஸ்மிந்யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா ।
ததா தேஹாந்தர ப்ராப்தி: தீரஸ்தத்ர ந முஹ்யதி ॥
(2-12, 13)

நான் ஒருக்காலும் இல்லையென்பதில்லை; நீயும் இல்லையென்பதில்லை. இந்த அரசர்களும் இல்லையென்பதில்லை. நாமெல்லோரும் இச்சரீரம் போன பிறகும் இல்லாமற் போவோமென்பதில்லை. தேஹிக்கு எப்படி ஒரே சரீரத்தில் வாலிபம் யௌவநம் மூப்பு முதலியவைகளோ அப்படியே இதர சரீரப்ராப்தியும். இவ்விஷயத்தில் புத்திமான் மோஹமடைய மாட்டான்.

என்கிற ஶ்லோகங்களால் ஸ்தூல தேஹத்திலிருந்து ஆத்மாவைப் பிரித்துக்காட்டி 16, 17, 18-வது ஶ்லோகங்களால் (பக்—20–21) லிங்க சரீரத்திலிருந்தும் பிரித்து ஸந்மாத்ரமாகக் காண்பித்து, உலகமெங்கும் நிறைந்திருப்பது அதுதானென்றும், ஸ்தூல லிங்க ஶரீரங்கள் அஸத்தென்றும் காண்பித்திருக்கிறார்.

தான் இல்லையென்கிற உணர்ச்சி யாருக்கும் உண்டாகாது. ஆகையால், தான் எப்பொழுதும் இருக்கிறவன். ஸத்தாகிய தன்னில் எந்த விசேஷதர்மங்களை யாவது சேர்க்க வேண்டுமானால் ஸ்தூல லிங்கஶரீர தர்மங்களைத் தான் சேர்க்கவேண்டும். ஸ்தூலலிங்க தேஹங்களோ அந்தவத்தாயிருப்பதனால் அஸத்தென்று பகவான் வெளியிட்டிருக்கிறார். ஆகையால் ஆத்மா ஸந்மாத்ரம். 13வது அத்யாயத்தில் "ஸர்வ க்ஷேத்ரங்களிலும், ஒரே க்ஷேத்ரஜ்ஞன். அவன்

ஸர்வாத்மாவாகிய நான்தான்.'' என்று சொல்லியிருப்பதுபோல இவ்விடத்திலும் ''ஸர்வதேஹங்களிலும் தேஹி ஒருவன்தான். அந்த தேஹியும் ஸர்வாத்மாவாகிய ஸங்மாத்ரந்தான்'' என்று சொல்லியிருக்கிறார்.

உத்தர ஶ்லோகங்களால் ஜந்மாதி ஆறு பாவ விகாரங்கள் ஆத்மாவினிடத்தில் இல்லையென்றும், அதனிடத்தில் கர்த்ருபாவம் கர்மபாவம் (செய்யுந்தன்மை செய்ப்படுந்தன்மை) இல்லையென்றும் வெளியிட்டிருப்பதோடு, நிர்விகாரியான ஆத்மாவினிடத்தில் கர்த்ருகர்மபாவங்களைப் பார்க்கிறவன் மூடனென்றும் சொல்லியிருக்கிறார்.

अव्यक्तोऽयमचिन्त्योऽयमविकार्योऽयमुच्यते ।
तस्मादेवं विदित्वैनं नानुशोचितुमर्हसि ॥ (2—25)

அவ்யக்தோயம் அசிந்த்யோயம் அவிகார்யோய முச்யதே ।
தஸ்மா தேவம் விதித்வைநம் நஅநு ஶோசிது மர்ஹஸி ॥
(2-25)

இந்த ஆத்மா கரணங்களால் க்ரஹிக்கமுடியாததாயும் சிந்திக்கத்தகாததாயும் விகாரமற்றதாயும் சொல்லப்படுகிறது. ஆகையால் மேற்சொன்னபடி இதை அறிந்து நீ துக்கிக்கத் தகுந்தவனல்ல.

என்கிற ஶ்லோகத்தால் ''ஆத்மாவைத்தவிர வேறு எதுவுமில்லை. ஆத்மாவோ அஸங்கம், உதாஸீநம்' என்று இவ்விதம் தெரிந்துகொண்டால் வருத்தப்பட ந்யாயமில்லை என்று 11வது சுலோகத்தால் (பக் — 35) சொன்ன பிரதிஜ்ஞையைப் பூர்த்திசெய்துவிட்டார்.

एषा तेऽभिहिता सांख्ये बुद्धिर्योगे त्विमां शृणु ।
बुद्ध्या युक्तो यया पार्थ कर्मबन्धं प्रहास्यसि ॥ (2–39)

ஏஷா தேபிஹிதா ஸாங்க்யே
புத்தி: யோகேது இமாம் ஶ்ருணு ।
புத்த்யா யுக்தோ யயா பார்த்த
கர்மபந்தம் ப்ரஹாஸ்யஸி ॥ (2–39)

ஓ அர்ஜுநா! நான் உனக்கு இதுவரையில் பரமாத்ம விஷயமான ஜ்ஞாநத்தைச் சொன்னேன் இனிமேல் நான் சொல்லும் கர்மயோகத்தைக் கேள். கர்மயோகத்துடன் நீ கூடியிருந்தால் கர்ம பந்தத்திலிருந்து விடுபடுவாய்.

என்கிற ஶ்லோகத்தால் ஜ்ஞாநயோகஸாதநமான கர்மயோகத்தை ஆரம்பம் செய்திருக்கிறார். பலத்தில் இச்சையில்லாமல் ஈஶ்வர ஆராதந புத்தியோடு, ஸ்வகர்மாவை அநுஷ்டிப்பது கர்மயோகம். இதனால் ஸ்வாபாவிக ப்ரவ்ருத்தியிலிருந்து நீங்கி, ஜகதேகசரணனாயிருந்தவன் ஈஶ்வரைகஶரணனாகி, பகவத் ஸ்வரூபவிசாரணை செய்து, அதைத் தானென்று அறிந்து, தன்னிடத்திலேயே சித்தம் நிலைக்குமானால், அப்பொழுது அவன் ஜ்ஞாநயோகத்தை அடைந்தவனாகிறான். இந்த அர்த்தத்தைப் பின்வரும் சுலோகத்தால் வெளியிட்டிருக்கிறார்.

श्रुतिविप्रतिपन्ना ते यदा स्थास्यति निश्चला ।
समाधावचला बुद्धिस्तदा योगमवाप्स्यसि ॥ (2–53)

ஶ்ருதிவிப்ரதிபந்நா தே யதா ஸ்தாஸ்யதி நிஶ்சலா ।
ஸமாதாவசலா புத்தி: ததா யோகமவாப்ஸ்யஸி ॥ (2-53)

அநேகவித ஶ்ரவணங்களால் கலங்கியிருக்கிற உன்னுடைய சித்தம் எப்பொழுது ஆத்மாவினிடத்தில் ஸம்ஶயவிபர்யயங்களில்லாமல் நிலைத்து நிற்குமோ அப்பொழுது (கர்மயோகபலனை) ஜ்ஞாநயோகஸ்திதியை நீ அடைவாய்.

அந்த ஸ்திதியை அடைந்தவன் எவ்வித மிருப்பான் என்று அர்ஜுநன் கேட்டதற்கு இந்த அத்யாய முடிவு வரையில் ஸ்திதப்ரஜ்ஞனுடைய இருப்பைச் சொல்லி, கடைசி ஶ்லோகத்தால் "இதுதான் ப்ரஹ்ம நிஷ்டை, இந்தஸ்திதி அந்த்யகாலத்தில் உண்டானாலும் ப்ரஹ்மஸுகத்தை அடைகிருன்'' என்று சொல்லியிருக்கிருர். இந்த அத்யாயத்தில் ஆத்மஜ்ஞாநமே மோக்ஷஸாதந மென்பது நன்ருய் விளங்குகிறது.

மூன்ருவது அத்யாய தாத்பர்யம்

மூன்ருவது அத்யாயத்திலும் பகவான் அர்ஜுநனைக் கர்மயோக அதிகாரியாக நினைத்துக் கர்மயோகத்தை விசேஷித்துச் செல்லி வந்தாலும்,

यस्त्वात्मरतिरेव स्यादात्मतृप्तश्च मानवः ।
आत्मन्येव च संतुष्टस्तस्य कार्यं न विद्यते ॥

யஸ்த்வாத்மரதிரேவஸ்யாத் ஆத்மத்ருப்தஶ்ச மாநவ: ।
ஆத்மந்யேவ ச ஸந்துஷ்ட: தஸ்ய கார்யம் நவித்யதே ॥

नैव तस्य कृतेनार्थो नाकृतेनेह कश्चन ।
न चास्य सर्वभूतेषु कश्चिदर्थव्यपाश्रयः ॥ (3–17, 18)

நைவ தஸ்ய க்ருதேநார்த: நாக்ருதேநேஹ கஶ்சந ।
நசாஸ்ய ஸர்வபூதேஷு கஶ்சிதர்தவ்யபாஶ்ரய: ॥
(3-17, 18)

எவன் ஆத்மாவிலேயே ரமிக்கிறவனுயும், ஆத்மாவிலேயே த்ருப்தி அடைந்தவனுயும், ஆத்மாவிலேயே ஆநந்திப்பவனுயுமிருக்கிருனே அவன் செய்ய வேண்டிய தொன்றுமில்லை. அவனுக்கு இவ்வுலகத்தில் கர்மாவால் ஒரு ப்ரயோஜநமும் கிடையாது. கர்மா செய்யாததால் ஒரு தோஷமும் கிடையாது. அவனுக்கு ஸகல ப்ராணிகளிடத்திலும் ப்ரயோஜநநிமித்தமாய் ஒரு பிடிப்பும் இல்லை.

என்கிற ஸ்லோகங்களால் ஆத்மநிஷ்டனுக்கே க்ருதக்ருத்யதாரூப முக்தியைச் சொல்லி, முடிவிலும்,

एवं बुद्धेः परं बुद्ध्वा संस्तभ्यात्मानमात्मना ।
जहि शत्रुं महाबाहो कामरूपं दुरासदम् ।। (3—43)

ஏவம் புத்தே: பரம்புத்த்வா ஸம்ஸ்த ப்யாத்மாநமாத்மநா ।
ஜஹி ஶத்ரும்மஹாபாஹோ காம ரூபம் துராஸதம் ॥
(3-43)

ஒ அர்ஜுநா! இவ்விதம் புத்திக்கப்பாலிருக்கும் ஆத்மாவைத் தெரிந்துகொண்டு விவேக புத்தியால் மநஸை அடக்கி ஜயிக்க முடியாததான காமரூபமான ஶத்ருவைக் கொல்லுவாயாக.

என்கிற ஸ்லோகத்தாலும் ஆத்மஜ்ஞாநத்தாலேயே ஸர்வாநர்த்தமூலமான காமத்தின் நாசத்தைச் சொல்லியிருக்கிருர்.

நான்காவது அத்யாய தாத்பர்யம்

நாலாவது அத்யாயத்தில் ஈஸ்வர ஆராதநரூபமான பலவித யஜ்ஞங்களைச் சொல்லி,

श्रेयान्द्रव्यमयाद्यज्ञाज्ज्ञानयज्ञः परंतप ।
सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते ॥ (4–33)

ஶ்ரேயாந் த்ரவ்யமயாத்யஜ்ஞாத்ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப ।
ஸர்வம் கர்மாகிலம் பார்த ஜ்ஞாநே பர்ஸமாப்யதே ॥
(4-33)

ஓ அர்ஜுநா! த்ரவ்ய மயமான யஜ்ஞங்களைக் காட்டிலும் ஜ்ஞாநயஜ்ஞம் மிகவும் மேலானது. ஸர்வ கர்மபலன்களும் ஜ்ஞாநத்தில் உள்ளடங்கி யிருக்கின்றன.

என்கிற ஶ்லோகத்தால் இந்த எல்லா யஜ்ஞங்களைக் காட்டிலும் ஜ்ஞாநயஜ்ஞம் மிகவும் உயர்ந்தது; ஏனெனில் ஸர்வகர்மபலனும் ஜ்ஞாநத்தில் பரிஸமாப்தி அடைகிறது என்று இரண்டாவது அத்யாயத்தில்,

यावानर्थ उदपाने सर्वतः संप्लुतोदके ।
तावान्सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥ (2–46)

யாவாநர்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே ।
தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத: ॥
(2-46)

கிணற்று நீரால் எவ்வளவு ப்ரயோஜநமுண்டோ அவ்வளவு ப்ரயோஜநமும் (அதற்கு அதிகமும்) ஒரு பெரிய ஏரியால் உண்டாவதுபோல் வேதோக்தமான ஸர்வ கர்மாநுஷ்டாநத்தினுல் எவ்வளவு ப்ரயோஜநமோ அவ்வளவும் (அதற்கு அதிகமும்) ஆத்மாவையறிந்த ப்ரஹ்மஜ்ஞாநிகளுக்குண்டு.

என்கிற ஶ்லோகத்தில் சொன்னது போலச் சொல்லியிருக்கிறுர்.

பின்வரும் ஸ்லோகங்களால் ஜ்ஞானம் குருபதேசத்தால் உண்டாகுமென்றும், "ஜ்ஞானத்தால் அஜ்ஞானம் விலகி ஸர்வாத்மாவான பரமேச்வரன் தான் என்று அறிவான். இந்த அறிவே பந்த ஹேதுவான ஸர்வகர்மாக்களையும் எரித்துவிடும். இந்த அறிவை அடைந்த மாத்ரத்தில் பரம ஶாந்திரூபமான மோக்ஷத்தை அடைகிறான்" என்றும் சொல்லி இருக்கிறார்.

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः ॥

தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா ।
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிந: தத்தவதர்ஶிந: ॥

यज्ज्ञात्वा न पुनर्मोहमेवं यास्यसि पाण्डव ।
येन भूतान्यशेषेण द्रक्ष्यस्यात्मन्यथो मयि ॥

யத் ஜ்ஞாத்வா ந புநர் மோஹமேவம்யாஸ்யஸி பாண்டவ ।
யேந பூதாந்யஶேஷேண த்ரக்ஷ்யஸ்யாத்மநி அதோமயி ॥

अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं संतरिष्यसि ॥

அபிசேதஸி பாபேப்ய: ஸர்வேப்ய: பாபக்ருத்தம: ।
ஸர்வம் ஜ்ஞாந ப்லவேநைவ வ்ருஜிநம் ஸந்தரிஷ்யஸி ॥

यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात् कुरुतेऽर्जुन ।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात् कुरुते तथा ॥

யதைதாம்ஸி ஸமித்தோக்நி: பஸ்மஸாத் குருதேர்ஜுந ।
ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா ॥

न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।
तत् स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति ॥
நஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே ।
தத்ஸ்வயம் யோகஸம்ஸித்த: காலேநாத்மநி விந்ததி ॥
श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शान्तिमचिरेणाधिगच्छति ॥ (4-34-39)
ஶ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம் தத்பர: ஸம்யதேந்த்ரிய: ।
ஜ்ஞாநம் லப்த்வா பராம் ஶாந்திமசிரேணாதிகச்சதி ॥
(4-34-39)

அந்த ஆத்மதத்வத்தை குருநமஸ்காரத்தாலும், அவருடன் தத்வவிசாரணையாலும், குருஶுஶ்ருஷையாலும் அறிவாயாக. தத்வமறிந்த ஜ்ஞாநிகள் ஜ்ஞாநத்தை உனக்கு உபதேசிப்பார்கள். அதை அறிந்தால் நீ மறுபடியும் இவ்விதம் மோஹத்தை அடையமாட்டாய். அந்த ஜ்ஞாநத்தால் ஸர்வப்ராணிகளை உன்னிடத்திலும் அப்படியே என்னிடத்திலும் பார்ப்பாய். பாபிகள் எல்லோரிலும் நீ அதிக பாபத்தைச் செய்தவனாயிருந்தபோதிலும் ஸகல பாப ஸமுத்ரத்தையும் ஜ்ஞாநமென்கிற தெப்பத்தால் தாண்டிவிடுவாய். நன்ருய் எரிகிற அக்நி கட்டைகளை எப்படிச் சாம்பலாக்கிவிடுமோ அப்படி ஜ்ஞாநமென்கிற அக்நி எல்லாக் கர்மாக்களையும் எரித்துவிடும். இவ்வுலகத்தில் ஜ்ஞாநத்திற்கு ஸமாநமாய்ப் பரிசுத்தம் செய்யும் வஸ்து வேறென்றும் கிடையாது. கர்மயோகத்தால் நீ ஶுத்த சித்தனாகிக் காலாந்தரத்தில் ஜ்ஞாநத்தை அடைவாய். குருஶாஸ்த்ர வாக்யார்த்தங்களில் நம்பிக்கையுடன் ஈடுபட்டவனும் ஜிதேந்த்ரியனு

மாய் இருக்கும் புருஷன் ஜ்ஞாநத்தை அடைகிருன். ஜ்ஞாநத்தை அடைந்து வெகு சீக்ரத்தில் பரம ஶாந்தியை அடைகிருன்.

ஐந்தாவது அத்யாய தாத்பர்யம்

ஐந்தாவது அத்யாயத்தில்,

इहैव तैर्जितः सर्गो येषां साम्ये स्थितं मनः ।
निर्दोषं हि समं ब्रह्म तस्माद्ब्रह्मणि ते स्थिताः ॥ (5–19)

இஹைவ தைர்ஜித:ஸர்க: யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மந: ।
நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம தஸ்மாத் ப்ரஹ்மணி தே ஸ்திதா: ॥ (5–19)

எவர்களுடைய மநஸ் ஸமமான ப்ரஹ்மத்தினிடத்தில் நிலைத்திருக்கிறதோ அவர்களால் இங்கேயே ஸம்ஸாரம் ஜயிக்கப்படுகிறது. ப்ரஹ்மம் தோஷமற்ற ஸமமான வஸ்து அல்லவா? ஆகையால் ப்ரஹ்மத்தினிடத்திலேயே அவர்கள் நிலைபெற்றிருக்கிருர்கள்.

बाह्यस्पर्शेष्वसक्तात्मा विन्दत्यात्मनि यत् सुखम् ।
स ब्रह्मयोगयुक्तात्मा सुखमक्षय्यमश्नुते ॥ (5–21)

பாஹ்யஸ்பர்ஶேஷ்வஸக்தாத்மா
விந்தத்யாத்மநி யத் ஸுகம் ।
ஸ ப்ரஹ்ம யோகயுக்தாத்மா
ஸுகமக்ஷய்யமஶ்நுதே ॥ (5-21)

பாஹ்யவிஷயங்களில் ஆசையற்ற மநஸையுடையவன் ஆத்மாவினிடத்தில் எந்த ஸுகம் இருக்கிறதோ அதை அடைகிருன். (சமமுள்ள) அந்தப் புருஷன் ப்ரஹ்மத்தில் சென்ற சித்தமுடையவனுய் அழிவற்ற ஸுகத்தை அநுபவிக்கிருன்.

என்கிற ஶ்லோகத்தால் "சித்தம் வெளிவிஷயங்களில் செல்லாமல் நிருத்த(சாந்த) மாயிருந்தால் ஆத்மஸுகம் விளங்கும். அதுவே ப்ரஹ்மஸுகம். அதிலேயே சித்தத்தைச் செலுத்திஞல் அழிவற்றஸுகத்தை அநுபவிக்கிருன்" என்று ஸத்யோமுக்தியையே சொல்லியிருக்கிருர். இந்த அத்யாய முடிவுவரையில் கவனிக்கும் பக்ஷத்தில் ஜ்ஞாநத்தால்தான் முக்தி யென்றும், அதுவும் ஜ்ஞாநஸமகாலத்தி லென்றும் தெளிவாய் ஏற்படுகிறது.

ஆருவது அத்யாய தாத்பர்யம்

ஸர்வாத்மாவான பரமாத்மாவைச் சித்தத்தால் அறியும் பக்ஷத்தில் பரமாத்மா கர்மாவாகும். எந்த க்ரியைக்கும் கர்த்தாவுமல்ல, கர்மாவுமல்ல, என்று இரண்டாம் அத்யாயத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிருர். மேலும் குணமயமான சித்தம் குணமயமான வஸ்துவையே க்ரஹிக்கும். குணமயமான ஜகத் ஆத்யந்த முள்ளதாயிருப்பதனல் எப்பொழுதும் அஸத்தே யென்று இரண்டாவது அத்யாயத்தில் சொல்லியிருக்கிருர். பரமாத்மாவின் ஸாக்ஷாத்கார மில்லாமல் முக்தியோ கிடையாது. இந்த கீதையில் பலவிடங்களில் என்னை அறிந்தே சாந்தியை, அதாவது மோக்ஷத்தை, அடைகிருன் என்று சொல்லியிருக்கிருர். ஆகவே அவரை எவ்விதம் தெரிந்து கொள்கிற தென்ருல், அந்த விஷயத்தை இந்த ஆருவது அத்யாயத்தில் விரிவாய்ச் சொல்லியிருக்கிருர். சித்தத்திற்கு வஸ்துவை விளக்கிக்காட்டும் யோக்யதை எதனுலுண்டாயிருக்கிறதோ அது சித்தத்தை அபேக்ஷிக்காமலே விளங்குமல்லவா? மேலும் எவனும் அங்ய

வஸ்துவை அறியச் சித்தத்தை அசைக்கிறன். சித்தத்தை அசைப்பதற்குமுன் தானிருக்கும் நிச்சய மிருப்பதனுல் தன்னையறியச் சித்தத்தை அசைப்பதே யில்லை. 'தன்னையறியவேண்டும்' என்று ஶாஸ்த்ரம் சொல்வது எதற்காகவென்றல், தன்னிடத்தில் ஏற்றிக் கொண்டிருக்கும் அந்யவஸ்துவின் தர்மத்தை விலக்குவதற்குத்தான். தான் தனியாக விருந்தால் தன் தத்வம் நன்றய் விளங்கும். மற்றென்றோடு கலந்தால் தத்வம் விளங்காது. ஒரு வஸ்துவின் தத்வத்தை அறிய மற்றென்றின் கலப்பை நிவ்ருத்தி செய்யவேண்டும். ஆகவே சித்தத்தின் வ்ருத்திகளை உண்டாக்காமல் தடுத்தால் தன் தத்துவம் கலப்பற்று ஸ்பஷ்டமாய் விளங்கும். விளங்கும் அந்த ஆத்ம வஸ்துவே பரமாத்மஸ்வரூபம். அதுவே துக்கஸம்பந்தமில்லாத அழிவற்ற ஸுகம். ஶரீரவ்யாபாரமில்லாமலிருப்பதே ஸுகரூபமானுல், மனோவ்யாபாரமும் இல்லாமற் போனுல் ஸுகமென்பதில் ஆக்ஷேபணை யென்ன? அந்த ஸுகம் விஷயஸுகமல்ல. அதுவே ப்ரஹ்மஸுகம். ஸந்மாத்ரமாகிய பரமாத்மா அதுவே. அதைக் கண்டவன் அதைவிட்டு ஒருபொழுதும் விலகமாட்டான். எவ்வித துக்கமும் அவனை அணுகாது. அவன் அஸத்தாகிய பூதங்களை த்யாகம்செய்து ஸர்வாந்தர்யாமியான ஸத்வஸ்துவைத் தன்னிடத்தில் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருப்பதனுல் ஸர்வபூதங்களிலும் தன்னையே பார்க்கிறன். ஸர்வபூதங்களையும் தன்னில் பார்க்கிறன். இவ்விதம் பகவத் ஸாக்ஷாத்கார முண்டாகிறதென்றும் அதுவே முக்தி யென்றும் சொன்னதோடு வ்ருத்திநிரோத உபாயங்களையும் விரிவாய்ச் சொல்லியிருக்கிறர்.

மத்யமஷட்கதாத்பர்யம் (பரமாத்மப்ரக்ருதியின் ஸ்வரூபம், ஸர்வம் வாஸுதேவன்)

மத்யமஷட்கத்தில் தத்பதார்த்தத்தின் தத்வத்தையும் அதன் ஜ்ஞாநத்தால்தான் முக்தியென்பதையும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். குணமயமான ப்ரபஞ்சத்திற்குக் காரணபூதமான முக்குணமுடைய ப்ரக்ருதி பந்தஹேதுவாயிருப்பதனால் அபரை யென்றும், பரமாத்மஸ்வரூபமாகவேயிருக்கிற ஜீவபூத ப்ரக்ருதி பரை யென்றும் சொல்லப்படுகிறது. ஸர்வ பூதங்களும் இந்த இரண்டு ப்ரக்ருதிகளைக் காரணமாக உடையன.

பரமாத்மா, அபராப்ரக்ருதியினால் உலகமாகி, பராப்ரக்ருதியினால் கார்யகாரணஸங்காதரூபமாயமைந்திருக்கும் க்ஷேத்ரங்களில் க்ஷேத்ரஜ்ஞனாய்ப் ப்ரகாசிக்கிறார்.

ப்ராணிகள் பிறப்புமாத்ரத்தில் கார்யகரண ஸங்காதத்தில் அஹம்புத்தி உடையவர்களாயும், கரணங்களால் க்ரஹிக்கப்பட்ட குணமய ப்ரபஞ்சத்தில் இதம்புத்தி உடையவர்களாயும் இருக்கிறார்கள். இப்படியிருப்பதனால்தான் ஸம்ஸரிக்கிறார்கள்.

நன்றாய்க் கவனிக்கும் பக்ஷத்தில் சின்மாத்ரமாயும் நிர்குணமாயு முள்ள வாஸுதேவனே எல்லாம். அஹம்,இதம்' இவைகளுக்கு ஆஸ்பதமாய் எதுவுமில்லை.

वासुदेवः सर्वम् ।

வாஸுதேவ: ஸர்வம் । (எல்லாம் வாஸுதேவன்)

என்ற இதை அறிந்தால் அஹம் இதம் இல்லாமற்போவதனால் துக்கநிதாநமான (துக்கத்திற்குக் காரண

மான) ஸம்ஸாரம் அடியோடு அழிந்துபோகிறது. பகவான், இதை 'அஜ்ஞர்களுக்குத் தெரிவிக்கப் புகுந்தால் "ஸச்சிதாநந்த நிர்குணரூபியான பரமாத்மா ஏன் இந்த குணமயமான உலகமாகத் தோன்றவேண்டும்" என்று கேட்கக்கூடும். அதற்காக அவர்களை உத்தேசித்து குணமயமான ப்ரக்ருதி பரமாத்மா வாகிய என்னிடமுண்டு என்று சொன்னார்.

குணமயப்ரபஞ்சத்தை ஸந்மாத்ரமான வாஸுதேவ னென்று கண்டால் பரமாத்மாவினிடத்தில் அபராப்ரக்ருதியில்லை யென்றே தெரிந்து கொள்வான். ரஜ்ஜுவில் ஸர்ப்பத்தைப் பார்க்கிறவனுக்கு ரஜ்ஜு வென்று அறிந்தவன் 'இது ரஜ்ஜுத்தான், பாம்பல்ல' என்று சொல்லுவானாகில் "ஏன் பாம்பு தோன்றுகிறது?" என்று கேட்பான். அதற்கு "பாம்பாய்த் தோன்றும் சக்தி ரஜ்ஜுவினிடத்திலிருக்கிறது" என்று பதில் சொல்லுவான். பின்பு அவன் ரஜ்ஜுவைப் பார்த்து பாம்பு இல்லை' என்று தெரிந்துகொள் வானாகில் ரஜ்ஜுவினிடத்தில் பாம்பாய்த்தோன்றும் சக்தியுமில்லை யென்று தெரிந்துகொள்வான். இதுபோல உலகத்தை வாஸுதேவனாகவே பார்க்கிறவன் வாஸுதேவனிடத்தில் மாயை யில்லை யென்றே அறிவான். இந்த அர்த்தத்தை

दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया ।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ॥ (7–14)

தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா ।
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥
(7-14)

ஈச்வரனுன என்னிடமுள்ள இந்தமாயை தாண்டு தற்கரியது. ஆனுல் (ஸர்வாத்மாவான) என்னையே எவர்கள் ஶரணமடைகிருர்களோ அவர்கள் இந்த மாயையைக் கடப்பார்கள்.

என்கிற ஶ்லோகம் தெளிவாய்ச் சொல்லுகிறது.

वासुदेवः सर्वम् ।

வாஸுதேவ: ஸர்வம்: | (எல்லாம் வாஸுதேவன்)

என்ற வாக்யத்தால் எல்லாவற்றையும் தாளுகச் சொல்லி

अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः ॥ (10–20)

அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்தித: ‖ (10-20)

ஓ அர்ஜுநா! ஸகல பூதங்களிலும் ப்ரத்யகாத்மா வாயிருப்பவன் நானே.

என்ற வாக்யத்தால் ஸங்காதரூபமாய் அமைந்த ப்ராணிகளுடைய ஹ்ருதயத்தில் தானிருப்பதாகச் சொல்லியிருக்கிருர். இவ்விரண்டு வாக்யங்களின் அர்த்தங்களையும் யோசிக்கும்போது பராப்ரக்ருதிரூப மான க்ஷேத்ரஜ்ஞஸ்வரூபத்தைக் கண்டு உலகத்தை அதுவாகத்தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஏற்படு கிறது.

ஆகாசம், குடம் மடம் வீடு அரண்மனே முதலான கனபதார்த்தங்களாகத் தோற்றுவதாலும், குடம் முதலியவைகளுக்கு உள்ளேயிருக்கும் ஆகாசம் நிஜரூப மான இடைவெளியாகவே யிருப்பதாலும், ஆகாசம், குடம் முதலானவைகளினுள்ளே யிருக்கிறது என்கிற வ்யவஹாரம் ஸித்திக்கிறது. குடம் முதலானவைகளை

ஆகாசமாவே க்ரஹித்தால், குடம் முதலானவைகளி னுள்ளே ஆகாசமிருக்கிறது என்கிற வ்யவஹாரம் இல் லாமற்போய்விடும். எல்லாம் ஒரே ஆகாசமாகும்.

वासुदेवः सर्वम् ।

வாஸுதேவ: ஸர்வம்: | (எல்லாம் வாஸுதேவன்)

என்பதும் இப்படிதான்.

ஆகாசம், குடம் முதலான கனபதார்த்தங்களாகி ஒவ்வொன்றினுள் நிஜரூபமாக இருப்பதோடுகூட, வெளியில் நிஜரூபத்தோடு அகண்டமாயிருப்பது போல, பரமாத்மாவும் அபராப்ரக்ருதியால் உலகமாகி, பராப்ரக்ருதியால் நிஜரூபமாய் க்ஷேத்ரஜ்ஞனாய் உள்ளே யிருப்பதோடுகூட, அகண்டமாய் நிஜரூபத் தோடு வெளியிலும் இருக்கிறார். இந்த அர்த்தத்தை

अथवा बहुनैतेन किं ज्ञातेन तवार्जुन ।
विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत् ॥ (10—42)

அதவா பஹுநைதேந கிம் ஜ்ஞாதேந தவார்ஜுந |
விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நமேகாம்ஶேநஸ்திதோ ஜகத் ||
(10-42)

ஓ அர்ஜுநா! என்னுடைய விபூதி விசேஷங்களை நீ விஸ்தாரமாய்த் தெரிந்துகொண்டதனால் உனக்கு என்ன ப்ரயோஜநம்? நான் இந்த ஸகல ப்ரபஞ்சங் களையும் என்னுடைய ஓரம்சத்தால் தாங்கிக்கொண் டிருக்கிறேன்.

என்கிற ஶ்லோகத்தால் சொல்லியிருக்கிறார்.

மத்யமஷட்கத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட பரமாத்ம ஸ்வரூபம்

ஏழாவது அத்யாயத்தில்,

ज्ञानं तेऽहं सविज्ञानमिदं वक्ष्याम्यशेषतः ।
यज्ज्ञात्वा नेह भूयोऽन्यज्ज्ञातव्यमवशिष्यते ॥ (7–2)

ஜ்ஞாநம் தேஹம் ஸவிஜ்ஞாநமிதம் வக்ஷ்யாமி அஶேஷத: |
யத்ஜ்ஞாத்வா நேஹ பூயோந்யத் ஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே ||
(7-2)

எதைத் தெரிந்துகொண்டால் மறுபடியும் தெரிந்து கொள்ளவேண்டிய வஸ்து வேறென்று மீதியிருக்காதோ, அந்த அநுபவத்துடன் கூடிய ஜ்ஞாநத்தை உனக்குச் சொல்லப்போகிறேன்.

என்கிற ஶ்லோகத்தால் "ஒருவஸ்துவின் ஜ்ஞாநத்தால் எல்லாம் அறியப்பட்டதாகிறது. அறியத்தக்கது பாக்கியில்லை" என்று பகவான் சொல்லியிருக்கிறார். "ஒரு மண்ணுண்டையால் மண்மயமான எல்லாம் அறியப்பட்டதாகிறது. மண்தான் ஸத்யம். விகாரம் சொல்மாத்ரம்" என்று வேதத்தில் சொல்லியிருப்பதை அநுஸரித்து இருக்கிறது. இதனால் பரமாத்மாவே ஸத்யம், மற்றவையெல்லாம் அந்ருதம் என்று ஸித்திக்கிறது.

பரமாத்ம ஸ்வரூபத்தை ஸத் சித் ஆநந்தம் என்று மூன்று விதமாகச் சொல்லுவதுண்டு. ஸ்வரூபம் ஒன்றுயிருந்தாலும் க்ராஹகவ்ருத்தி பேதத்தால் ஒரே ஸ்வருபம் மூன்றுவிதமாகச் சொல்லப்படுகிறது.

காரணம் கார்யத்துக்கு விலக்ஷணம் என்பது அநுபவஸித்தம். ப்ரபஞ்சரூபகார்யம் அந்ருதஜட

துக்காத்மகமாயிருப்பதனுல் காரணமாகிற பரமாத்மா ஜகத்துக்கு விலக்ஷணம். ஆகையாலும் பரமாத்மஸ்வரூபத்தை ஸத் சித் ஆநந்தம் என்றும் வ்யவஹரிக்கிருர்கள். பரமாத்மா க்ஷேத்ரஜ்ஞனுக்கு அந்யமாயிருக்கும்பக்ஷத்தில் ஸச்சிதாநந்தஸ்வரூபி யென்பது சொல் மாத்ரமாய் முடியும்.

ஒன்பதாவது அத்யாயத்தில் முதல் ஐந்து ஶ்லோகங்களைக் கவனிக்கும் பக்ஷத்தில் ஜ்ஞாநமே மோக்ஷஸாதநமென்பது தெளிவாய் விளங்கும். கரண அகோசரமான ஸ்வரூபத்தால் உலகமெங்கும் நிறைந்திருக்கிறேன் என்று பகவான் சொல்லி யிருப்பதனுல் க்ஷேத்ரஜ்ஞன் நானென்று சொன்னது போலாகிறது. ஏனென்ருல் க்ஷேத்ரஜ்ஞனைத் தவிர கரண அகோசரமானவஸ்து உண்டென்று அங்கீகரிக்கப்படமாட்டாது. "பூதங்கள் என்னிடத்தில் இருக்கின்றன" என்று ஆரோபத்தையும் "பூதங்கள் என்னிடத்தில் இல்லை" என்று அபவாதத்தையும் சொல்லியிருப்பதால் உலகமில்லையென்பதும் ஆத்மா அஸங்கம் என்பதும் ஸித்தமாகிறது.

பகவத் விபூதிகளும் ஸகுணோபாஸகர்களும்

இந்த மத்யமஷட்கத்தில் ஸகுணோபாஸனையைச் சொல்லி உபாஸகர்களுக்கு புநராவ்ருத்தி யில்லை யென்று சொல்லியிருந்தாலும், ஜ்ஞாநத்வாராதான் முக்தியென்று

तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् ।
ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते ॥ (10–10)

தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம் |
ததாமி புத்தியோகம் தம் யேந மா முபயாந்தி தே ||
(10-10)

எப்பொழுதும் ப்ரீதியுடன் என்னிடத்தில் ஏகாக்ர பக்தி செலுத்துகிறவர்களுக்கு ஜ்ஞாநயோகத்தை நான் கொடுக்கிறேன். அதனுல் அவர்கள் என்னை அடைகிருர்கள்.

என்கிற ஶ்லோகத்தால் தெளிவாய்ச் சொல்லியிருக்கிருர். அவித்யாஜந்யமான பேததர்ஶநம் ஜ்ஞாநமின்றி அழியாது. ஆகையால் ஜ்ஞாநமின்றி யாருக்கும் முக்தியில்லை.

பன்னிரண்டாது அத்யாயத்தில் ஸகுணோபாஸகர்களையும் அக்ஷரோபாஸகர்களையும் அதாவது ஜ்ஞாநிகளையும் எடுத்துக்கொண்டு இவர்களில் சிறந்தவர்கள் யாரென்று அர்ஜுநன் கேட்டதற்கு ஜ்ஞாநிகளை உபாஸகர்களோடு சேர்க்கக் கூடாதென்று அவர்களைத் தனியாய் எடுத்துக்கொண்டு,

ते प्राप्नुवन्ति मामेव (12–4)

தே ப்ராப்நுவந்திமா மேவ | (12-4)

அவர்கள் என்னையே அடைகிருர்கள்.

என்று ஈஶ்வரப்ராப்தியில் அவர்களுக்கு ஸ்வாதந்த்ர்யத்தைச் சொல்லியிருக்கிருர். ஸகுணோபாஸகர்களுக்கோ

तेषामहं समुद्धर्ता । (12–7)

தேஷாமஹம் ஸமுத்தர்தா | (12-7)

அவர்களை நான் கரையேற்றுகிறேன்.

என்று தான் உத்தரணம் செய்வதாகச் சொல்லி யிருக்கிறார். உத்தரணப்ரகாரம், அவர்களுக்கு ஜ்ஞாந யோகத்தைக் கொடுப்பதுதான்.

ஆரோபிதம் அதிஷ்டாநத்திற்கு வேறாகாது. ஆகையால் உலகம் முழுவதும் அதிஷ்டாந பரமாத்மாவிற்கு வேறல்ல. இந்த விஷயத்தை பகவானே

वासुदेवः सर्वम् ।

வாஸுதேவ: ஸர்வம் । (எல்லாம் வாஸுதேவன்)

என்று சொல்லியிருக்கிறார். அப்படியிருந்தும் ஏழாவது அத்யாயத்தில், ஜலம் முதலியவைகளில் ரஸம் முதலியனவாக இருக்கிறேனென்று சொன்னது ப்ராணிபுத்தியை அநுஸரித்துச் சொன்னதாக எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகாசம், குடம் முதலிய உபாதிக்குத் தக்கபடி இடம் கொடுப்பதில் தரதம பாவத்தை அடைந்திருப்பதுபோல பகவானும் க்ஷேத்ர ரூபஉபாதிக்குத்தக்கபடி உத்கர்ஷாபகர்ஷத்தை (ஏற்றத்தாழ்வை) அடைந்திருக்கிறார். ஆகையால் ஈச்வரனைச் சிந்திப்பதற்காக உத்க்ருஷ்ட உபாதிகளைச் சொல்ல பத்தாவது அத்யாயம் ஏற்பட்டிருக்கிறது. பதினொன்றில் உபாஸநார்த்தம் விராட்ஸ்வரூபத்தை அர்ஜுநனுக்குக் காண்பித்திருக்கிறார்.

ப்ரதமஷட்கத்தில் ஜ்ஞாநத்தை மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் ஸாதநமாயும் கர்மயோகத்தை உபாயமாயும் சொல்லி யிருப்பதுபோல மத்யமஷட்கத்திலும் ஜ்ஞாநத்தையே முக்தி ஸாதநமாய்ச் சொல்லி பக்தியை உபாயமாகச் சொல்லியிருக்கிறார்.

ஐக்யத்தைச்சொல்லும் அந்த்யஷட்கம் முன்னரே விசாரிக்கப்பட்டிருக்கிறது.

மூன்ரும் அத்யாயம்

ஷட்விதலிங்கங்களால் கீதாதாத்பர்ய நிர்ணயம்

மேலும் ஆறுவிதலிங்கங்களால் ஒரு க்ரந்தத்தின் தாத்பர்யத்தை நிச்சயிக்கவேண்டும். உபக்ரமம், உபஸம்ஹாரம், அர்த்தவாதம், அபூர்வதை, அப்யாஸம், பலம் இவைகள் லிங்கங்கள். இந்த லிங்கங்களால் கீதைக்கு ஜ்ஞாநத்தில்தான் தாத்பர்யமென்று நிச்சயிக்கவேண்டும்.

உபக்ரமத்தில் ஜ்ஞாநயோகமே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை பகவானே

एषा तेऽभिहिता सांख्ये (2-39)

ஏஷா தேபிஹிதா ஸாங்க்யே । (2-39)

இந்த ஜ்ஞாநயோகம் இதுவரையில் உனக்குச் சொல்லப்பட்டது.

என்று சொல்லியிருக்கிருர். உபஸம்ஹாரத்திலும்,

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज । (18-66)

ஸர்வதர்மாங் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ । (18-66)

ஸர்வதர்மங்களையும் விட்டுவிட்டு அத்விதீயவஸ்துவான என்னையே சரணமடைவாயாக.

என்று ஜ்ஞாநயோகத்தையே குறிப்பிட்டிருக்கிருர். ஜ்ஞாநியையே ஸ்திதப்ரஜ்ஞனென்று இரண்டாவது அத்யாயத்திலும், த்ருடபக்தனென்று பன்னிரண்டா

வது அத்யாயத்திலும், குணாதீதனென்று பதினன்காவது அத்யாயத்திலும் புகழ்ந்திருக்கிருர்.

ப்ரதமஷட்கத்தில் ஜ்ஞாநயோகத்திற்கு அங்கமாய் கர்மயோகத்தைச் சொல்லியிருந்தாலும்,

न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।
तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति ॥

(4—38. பக்-43)

நஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரமிஹ வித்யதே |
தத் ஸ்வயம் யோகஸம்ஸித்த: காலேநாத்மநி விந்ததி ||
(4-38)

என்கிற ஶ்லோகத்தால் பகவான் அர்ஜுநனுக்கு "கர்மயோகத்தால் ஶுத்தசித்தனுகிப் பிறகு ஜ்ஞாநத்தை அடைவாய்; ஜ்ஞாநத்திற்கு ஸத்ருஶமான பாவநம் ஒன்றுமில்லை" என்று சொல்லியிருப்பதால் ஜ்ஞாநமே மோக்ஷத்திற்கு ஸாதநம் என்று ஏற்படுகிறது. மத்யமஷட்கத்தில் பக்தியை விசேஷித்துச் சொல்லியிருந்தாலும்,

तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् ।
ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते ॥

(10—10. பக்-52)

தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் |
ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே || (10-10)

என்கிற ஶ்லோகத்தால் "பக்திமான்களுக்கு ஜ்ஞாநயோகத்தைக் கொடுப்பேன்; அதனுல் அவர்கள் என்னை அடைவார்கள்" என்று சொல்லியிருப்பதனுல் பக்திரூபமான கர்மயோகமும் ஜ்ஞாநயோகத்திற்கு ஸாதந

மென்றே ஏற்படுகிறது. அந்தயஷட்கத்தில் குணத்ரயத்தைப்பற்றி விசேஷித்துச் சொல்லியிருந்தாலும் "ஸத்வத்தை வ்ருத்தி செய்து ஜ்ஞாநஸாதநங்களை அடைந்து தன்னை அறிந்தவனுகி குணங்களிலிருந்து விடுபட்டவன் ஆகவேண்டும். அவனே முக்தனுகிருன்" என்ற இந்த அர்த்தம் விளங்குவதனுல், ஜ்ஞாநஸாதநமாகவே குணங்களை விரிவாய்ச் சொல்லியிருக்கிருர் என்று ஏற்படுகிறது. இவ்விதமிருப்பதனுல் கீதைக்கு ஜ்ஞாநத்தில் தாத்பர்யம் என்ற விஷயத்தில் அப்யாஸ லிங்கத்தைச் சொல்லவேண்டியதே யில்லை. ஆனுலும் அப்யாஸம் இல்லாமற் போகவில்லை.

यावानर्थ उदपाने सर्वतः संप्लुतोदके ।
तावान् सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥
(2—46 பக்-41)

யாவாநர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே ।
தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத: ॥
(2-46)

एवं बुद्धेः परं बुद्ध्वा संस्तभ्यात्मानमात्मना ।
जहि शत्रुं महाबाहो कामरूपं दुरासदम् ॥
(3—43. பக்-40)

ஏவம் புத்தே: பரம் புத்த்வா ஸம்ஸ்தப்யாத்மாநமாத்மநா ।
ஜஹி ஶத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம் ॥
(3-43)

श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शान्तिमचिरेणाधिगच्छति ॥
(4—39. பக்-43)

ஶ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம் தத்பர: ஸம்யதேந்த்ரிய: |
ஜ்ஞாநம் லப்த்வா பராம்ஶாந்திம் அசிரேணாதிகச்சதி ‖
(4-39)

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशितमात्मनः ।
तेषामादित्यवज्ज्ञानं प्रकाशयति तत्परम् ॥ (5–16)

ஜ்ஞாநேந து ததஜ்ஞாநம் யேஷாம் நாஶிதமாத்மந: |
தேஷாமாதித்யவத் ஜ்ஞாநம் ப்ரகாஶயதி தத்பரம் ‖ (5-16)

எவர்களுடைய அஜ்ஞாநம் ஆத்மஜ்ஞாநத்தால் போக்கடிக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களுடைய ஜ்ஞாநம் ஸூர்யன் போல் பரமாத்மவஸ்துவை ப்ரகாசிப்பிக்கிறது.

सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि ।
ईक्षते योगयुक्तात्मा सर्वत्र समदर्शनः ॥ (6–29)

ஸர்வபூதஸ்தமாத்மாநம் ஸர்வபூதாநி சாத்மநி |
ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்ஶந: ‖ (6-29)

ஸமாஹிதசித்தனுய் எல்லாப்ராணிகளிடத்திலும் ஸமமாயிருக்கும் ப்ரஹ்மவஸ்துவைப் பார்க்கிறவன் தன்னை ஸர்வபூதங்களிலும் ஸர்வபூதங்களைத் தன்னிலும் பார்க்கிறுன்.

बहूनां जन्मनामन्ते ज्ञानवान् मां प्रपद्यते ।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ॥ (7–19)

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே |
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ‖ (7-19)

(தத்வவிசாரணையை அப்யஸித்துக்கொண்டுவந்த) அநேக ஜந்மங்களின் முடிவில் ஸர்வம் வாஸுதேவன்

என்ற ஜ்ஞாநமுடையவன் என்னை அடைகிருன். இப்படிப்பட்ட மஹாத்மா மிகவும் துர்லபம்.

इदं तु ते गुह्यतमं प्रवक्ष्याम्यनसूयवे ।
ज्ञानं विज्ञानसहितं यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥(9–1)

இதம் து தே குஹ்யதமம் ப்ரக்ஷ்யாமி அநஸூயவே ।
ஜ்ஞாநம் விஜ்ஞாநாஸஹிதம் யத் ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே
அஶுபாத் ॥ (9-1)

அதிரஹஸ்யமான அநுபவத்துடன் கூடிய இந்த ஜ்ஞாநத்தை அஸூயையற்ற உனக்குச் சொல்லப் போகிறேன். அதைத் தெரிந்து கொண்டால் நீ ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவாய்.

மேற்கூறிய ஶ்லோகங்களும் இன்னும் அநேக ஶ்லோகங்களும் ஜ்ஞாநத்தைப் பற்றியனவாயிருக்கின்றன.

ஜ்ஞாநத்தையே பரமகுஹ்யமாக பகவான் சொல்லி யிருக்கிருர். (9—1 பக்-59)

பின்வரும் ஶ்லோகங்களாலும் இன்னும் அநேக ஶ்லோகங்களாலும் ஜ்ஞாநமே பலவத் என்பதைத் தெரிவித்திருக்கிருர்.

श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शान्तिमचिरेणाधिगच्छति ॥
(4—39. பக்-43)

ஶ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம் தத்பர: ஸம்யதேந்த்ரிய: ।
ஜ்ஞாநம் லப்த்வா பராம் ஶாந்திமசிரேணாதிகச்சதி ॥
(4-39)

तद्बुद्धयस्तदात्मानस्तन्निष्ठास्तत्परायणाः ।
गच्छन्त्यपुनरावृत्तिं ज्ञाननिर्धूतकल्मषाः ॥ (5–17)

தத்புத்தயஸ்ததாத்மாந: தந்நிஷ்டாஸ்தத்பராயணா: |
கச்சந்த்யபுநராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்தூதகல்மஷா: ||
(5-17)

ப்ரஹ்மத்தினிடத்திலேயே புத்தியைச் செலுத்தினவர்களும் ப்ரஹ்மத்தையே ஆத்மாவாக உடையவர்களும் ப்ரஹ்மத்திலேயே நிஷ்டை உடையவர்களும் ப்ரஹ்மத்தையே முக்யஸ்தாநமாக உடையவர்களுமான ஜ்ஞாநிகள் ஆத்மஜ்ஞாநத்தால் பாபம் அழிந்தவர்களாய்ப் பிறப்பற்ற மோக்ஷத்தை அடைகிறார்கள்.

इदं तु ते गुह्यतमं प्रवक्ष्याम्यनसूयवे ।
ज्ञानं विज्ञानसहितं यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥
(9—1. பக்-59)

இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே |
ஜ்ஞாநம் விஜ்ஞாநஸஹிதம் யத்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே
அஶுபாத் || (9-1)

इति गुह्यतमं शास्त्रमिदमुक्तं मयानघ ।
एतद्बुद्ध्वा बुद्धिमान् स्यात् कृतकृत्यश्च भारत ॥
(15–20)

இதி குஹ்யதமம் ஶாஸ்த்ரம் இதமுக்தம் மயாநக |
ஏதத் புத்த்வா புத்திமாந்ஸ்யாத் க்ருதக்ருத்யஶ்ச
பாரத || (15-20)

ஓ அர்ஜுநா! இந்த பரமரஹஸ்யமான ஶாஸ்த்ரம் உனக்குச் சொல்லப்பட்டது. இதை அறிந்து புத்திமானாகவும் செய்வன செய்தவனாகவும் ஆகவேண்டும்.

இவ்விதம் ஷட்விதலிங்கங்களால் ஜ்ஞாநம்தான் மோக்ஷத்திற்கு ஸாதநமென்பது பகவத் அபிப்ராயமென்று நிச்சயிக்கப்படுகிறது. பகவத்பாதர்கள் கீதையின் ஆரம்பத்திலும் முடிவிலும் கேவலஜ்ஞாநமே மோக்ஷஸாதநமென்பது பகவத் அபிப்ராயமென்று நன்ருய் நிரூபணம் பண்ணியிருக்கிருர்கள். அவருக்குப் பின்வந்த ஸமுச்சயவாதிகள் அதைக் கண்டநம் செய்யவில்லை. இனியும் யாராலும் கண்டநம் செய்யவும் முடியாது.

முக்தி கர்மோபாஸநா பலனுகச் சொல்லப்படவில்லை

இந்த கீதையில் கர்மாவினுல் அல்லது பக்தியினுல் முக்தி ஸித்திக்குமென்று ஒரிடத்திலும் சொல்லவில்லை. பகவான் மூன்ருவது அத்யாயத்தில்,

लोकेऽस्मिन् द्विविधा निष्ठा पुरा प्रोक्ता मयानघ ।
ज्ञानयोगेन सांख्यानां कर्मयोगेन योगिनाम् ॥ (3–3)

லோகேஸ்மிந்த்விவிதாநிஷ்டா புரா ப்ரோக்தாமயாநக |
ஜ்ஞாந யோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந
யோகிநாம் ॥ (3-3)

இவ்வுலகில் என்னுல் தத்வவிசாரணை செய்பவர்களுக்கு ஜ்ஞாநநிஷ்டையும், கர்மயோகிகளுக்குக் கர்மயோகமுமாகிற இவ்விரண்டு நிஷ்டைகள் பூர்வத்தில் சொல்லப்பட்டுள்ளன.

என்ற ஶ்லோகத்தால் இரண்டு நிஷ்டைகளையே சொல்லியிருக்கிருர். பக்தியென்பது புருஷதந்த்ரமாயிருப்பதால் கர்மயோகத்தில்தான் சேரும். ஜ்ஞாநம்

வஸ்துதந்த்ர மாயிருப்பதால் அதில் சேரமாட்டாது' எட்டாவது அத்யாயத்தில் ப்ரஹ்மோபாஸகர்கள் ப்ரஹ்மத்தை அடைகிருர்கள் என்று சொல்லியிருப்பதுடன் அவர்களுக்கு சுக்லகதியும் அநாவ்ருத்தி பலனும் சொல்லப் பட்டிருந்தாலும், முக்தி சொல்லப் படவில்லை. அது ஜ்ஞாநத்தால்தான் ஸித்திக்கும். ப்ரஹ்மோபாஸகர்கள் ப்ரஹ்மலோகம் போய் அவ்விடத்தில் ஜ்ஞாநமடைந்து, பிறகுதான் முக்தர்களாகிருர்கள். சுக்லகதியால் ப்ரஹ்மலோகம் சென்றவர்களுக்கு அவச்யம் ஜ்ஞாநமுண்டாகி அவர்கள் முக்தியடைகிருர்கள். ஆகையால்தான் அநாவ்ருத்தி பலன் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் எவன் தன்னைக் கர்த்தாவாக நினைக்கிருனே அவனே உபாஸகனுவான். தன்னைக்கர்த்தாவாக நினைத்தவன் அஜ்ஞன், தத்வமறியாதவன். தன்னைக் கர்த்தா வல்ல வென்று தெரிந்துகொண்டவன் தத்வமறிந்தவன், ஜ்ஞாநி.

குணமயமான அந்தக்கரணமே கர்த்தா. ஆத்மா கர்த்தா வல்ல. த்ருஶ்யமாகிய அந்தக்கரணத்தின் தர்மத்தைத் தன்னிடத்தில் ஏற்றிக்கொண்டவனே கர்த்தாவாவான். த்ரஷ்டாவை த்ருச்யத்திலிருந்து பிரித்து அதன் உண்மையை அறிந்தவன் கர்த்தாவாக மாட்டான். இந்த அர்த்தத்தை பகவான் பின்வரும் ஶ்லோகங்களால் வெளியிட்டிருக்கிருர்:—

प्रकृतेः क्रियमाणानि गुणैः कर्माणि सर्वशः ।
अहंकारविमूढात्मा कर्ताहमिति मन्यते ॥ (3—27)

ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வஶ: ।
அஹங்காரவிமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே ॥ (3-27)

तत्त्ववित्तु महाबाहो गुणकर्मविभागयोः ।
गुणो गुणेषु वर्तन्त इति मत्वा न सज्जते ॥ (3–28)

தத்வவித்து மஹாபாஹோ குணகர்ம விபாகயோ: |
குணா குணேஷு வர்தந்த இதிமத்வா நஸஜ்ஜதே ॥ *(3-28)*

ப்ரக்ருதியின் குணங்களாலுண்டான கார்யகரண ஸங்காதத்தால் செய்யப்படும் கர்மாக்களை, தேஹமே நானென்கிற அஹங்காரமுடைய அவிவேகி நான் செய்கிறேனென்று எண்ணுகிறான். குணம் கர்மா இவைகளின் விபாகங்களை உண்மையாய் அறிந்தவன் "குணமயமான கரணங்கள் குணமயமான விஷயங்களில் ப்ரவ்ருத்திக்கின்றன, ஆத்மாவல்ல" என்றெண்ணி அவைகளில் அபிமாநம் வைப்பதில்லை.

तत्रैवं सति कर्तारमात्मानं केवलं तु यः ।
पश्यत्यकृतबुद्धित्वान्न स पश्यति दुर्मतिः ॥ (18–16)

தத்ரைவம் ஸதி கர்தாரமாத்மாநம் கேவலம் து ய: |
பஶ்யத்யக்ருதபுத்தித்வாத் நஸபஶ்யதிதுர்மதி: ॥ *(18-16)*

இவ்விதமிருக்க (மேற்சொன்ன ஐந்து ஹேதுக்கள் கர்மாவுக்குக் காரணமாயிருக்க) கேவல (சுத்த) ஆத்மாவை எவன் ஶாஸ்த்ராசார்ய ஸம்ஸ்காரமில்லாததால் கர்த்தாவாகப் பார்க்கிறானோ அந்த துர்புத்தி உடையவன் தத்வம் அறிந்தவன் அல்லன்.

नान्यं गुणेभ्यः कर्तारं यदा द्रष्टानुपश्यति ।
गुणेभ्यश्च परं वेत्ति मद्भावं सोऽधिगच्छति ॥ (14–19)

நாந்யம் குணேப்ய: கர்தாரம் யதா த்ரஷ்டாநுபஶ்யதி |
குணேப்யஶ்ச பரம் வேத்தி மத்பாவம் ஸோதிகச்சதி ॥
(14-19)

எந்த வித்வான் குணமயமான கார்யகரண ஸங்காதத்தைத் தவிர வேறு கர்த்தா இல்லை என்று அறிந்து, இக்குணங்களுக்கு அதீதமான வஸ்துவை அறிகிருனோ அவன் என் ஸ்வரூபத்தை அடைகிருன்.

प्रकृत्यैव च कर्माणि क्रियमाणानि सर्वशः ।
यः पश्यति तथात्मानमकर्तारं स पश्यति ॥ (13–29)

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணாநி ஸர்வஶ: |
ய: பஶ்யதி ததாத்மாநம் அகர்தாரம் ஸ பஶ்யதி ॥ (13-29)

ப்ரக்ருதிகார்யமான ஸங்காதத்தாலேயே எல்லாக் கர்மாக்களும் செய்யப்படுகின்றன என்றும் ஆத்மா அகர்த்தா என்றும் எவன் பார்க்கிருனோ அவன்தான் தத்வத்தை அறிந்தவன்.

ஆகையால் கர்த்ருத்வ அபிமானமுடைய உபாஸகனும் அஜ்ஞனே.

यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात् कुरुतेऽर्जुन ।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा ॥

(4—37 பக்-42)

யதைதாம்ஸி ஸமித்தோக்நி: பஸ்மஸாத் குருதேர்ஜுந | .
ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதேததா ॥

என்கிற ஶ்லோகத்தால் ஜ்ஞாநமே பந்தஹேதுவான ஸர்வ கர்மாக்களையும் அழிக்கிறது என்று பகவான் சொல்லியிருக்க, அஜ்ஞனுகிய உபாஸகனுடைய ஜந்மப்ரதமான ஸஞ்சிதம் எவ்விதம் அழியும்? ஆகாம்யமும் எப்படி ஒட்டாமலிருக்கும்? கர்மா அழியாமலிருக்குமாளுல் முக்தி எப்படி ஸித்திக்கும்? ஆகையால் உபாஸகனுக்கு ப்ரஹ்மலோகத்தில் அவச்-

யம் ஜ்ஞாநமுண்டாகும் என்ற அர்த்தத்தில் அநாவ்ருத்தி சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி கர்த்ருத்வ புத்தியுள்ள கர்மயோகி அஜ்ஞனோ, அப்படியே கர்த்ருத்வ புத்தியுள்ள உபாஸகனும் அஜ்ஞனே. ஆகையால்தான் பகவான் ஜ்ஞாநிகளைத் தனியாய்ப்பிரித்து உபாஸகர்களைக் கர்மயோகிகளோடேயே சேர்த்து, கர்மயோகிகளைக்காட்டிலும் உபாஸகர்கள், புநராவ்ருத்தியில்லாததால், மேலானவர்களென்று சொல்லியிருக்கிருர். இந்த அர்த்தம் பன்னிரண்டாவது அத்யாயத்தைக் கவனித்தால் விளங்கும். அதே அத்யாயத்தில், கர்மயோகிகளைப்போல் உபாஸகர்களும் ஜ்ஞாநத்தின் வழியாகத்தான் முக்தி அடையவேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருக்கிருர். ஜ்ஞாநத்தால் அஜ்ஞாநம் அழிந்தால்தான் பரமாத்மஸாக்ஷாத்காரம் உண்டாகும். இந்த அர்த்தம் 5-ல் 16-வது (பக்-58) ஶ்லோகத்தால் விளங்குகிறது. பரமாத்மஸாக்ஷாத்காரம் இல்லாமல் மோக்ஷமில்லை யென்று.

ज्ञात्वा मां शान्तिम् ऋच्छति ॥ (5–29)

ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம் ருச்சதி ।

என்னையறிந்து பரமஶாந்தி ரூபமான மோக்ஷத்தை அடைகிருன்.

என்ற வாக்யத்தால் தெரிவித்திருக்கிருர். ஆகையால் உபாஸநா மாத்ரத்தால் முக்தி ஸித்திக்காது. மேலும், உபாஸகர்களுக்கு கதி சொல்லப்பட்டிருக்கிறது. ஜ்ஞாநிகளுக்கோ கதியில்லை யென்று.

न तस्य प्राणाः उत्क्रामन्ति

ந தஸ்ய ப்ராணா: உத்க்ராமந்தி ।

அவனுடைய ப்ராணன்கள் மேலே செல்லுவதில்லை.

என்ற ச்ருதி வாக்யத்தால் தெரியவருகிறது. ஆகையால் "உபாஸகர்கள் ப்ரஹ்மலோகம் போன பிறகுதான் ஜ்ஞாநத்தை அடைகிறார்கள். ஜ்ஞாநத்தை அடைந்த பிறகுதான் முக்தி" என்ற இந்த அர்த்தம் தான் கீதையில் வெளிப்படுகிறது.

முக்தி கர்மபலனாகாது. லோகாந்தர ப்ராப்தியுமல்ல.

கர்மபலன், ஆப்யம், உத்பாத்யம், விகார்யம், ஸம்ஸ்கார்யம் என்று நான்குவிதந்தான். மோக்ஷம் இந்த அநித்யமான நான்கில் ஒன்றல்ல. ஆகையால் புருஷ தந்த்ரமான எவ்வித கர்மாவும் மோக்ஷத்திற்கு ஸாதந மாகாது. வைகுண்டம்போய் அப்ராக்ருததிவ்யசரீரியாயிருந்து கொண்டு சேஷசாயியான மஹாவிஷ்ணுவுக்குக் கைங்கர்யம் செய்துகொண்டிருப்பதோ, கைலாஸம் போய்ப் பரமசிவன் ஸந்நிதியிலிருந்து கொண்டு கைங்கர்யம் செய்துகொண்டிருப்பதோ முக்தியென்று கீதையில் எங்கும் சொல்லப்படவில்லை. அப்ராக்ருதமாய் ஒரு சரீரம் உண்டென்று கீதையில் பகவான் சொல்லவில்லை. தேவலோகத்தில் தேவனாயிருந்தாலும் ப்ரக்ருதி குணங்களால் விடுபட்டவனாக மாட்டானென்று,

न तदस्ति पृथिव्यां वा दिवि देवेषु वा पुनः ।
सत्त्वं प्रकृतिजैर्मुक्तं यदेभिः स्यात् त्रिभिर्गुणैः ।। (18–40)

நததஸ்திப்ருதிவ்யாம் வா திவிதேவேஷு வாபுந: ।
ஸத்வம் ப்ரக்ருதிஜைர்முக்தம் யதேபி:
ஸ்யாத் த்ரிபிர்குணை: ॥ (18-40)

என்கிற ஶ்லோகத்தால் பகவான் சொல்லியிருக்கிறுர். குணபத்தன் குணுதீதஞகமாட்டான். குணுதீதஞகாதவன் முக்தனல்லன். இந்த அர்த்தத்தை பகவானே வெளியிட்டிருப்பதனுல் இதர க்ரந்தங்களில், வைகுண்டாதிலோகங்களில் மஹாவிஷ்ணு முதலான தேவர்களின் ஸந்நிதாநத்தில் இருந்து கைங்கர்யம் செய்வது முக்தி யென்று சொல்லியிருந்தாலும் அது பகவத் ஸம்மதமல்ல. ஸம்மதமாயிருந்தால் ஸர்வ வேதார்த்த ஸாரபூதமான இந்த க்ரந்தத்தில் பகவான் சொல்லாமலிருக்கமாட்டார்.

அத்வைத ஸுகம்தான் யாவராலும் விரும்பப்படுவது

பசியால் அழுதுகொண்டிருக்கும் குழைந்தைக்குத் தாயார் சங்கினுல் பாலைப் புகட்டும்போது அந்தக் குழந்தை அறியாமையால் சங்கைத்தள்ளும். தள்ளிஞலும் தாயார் நிர்ப்பந்தமாகப் பாலைப் புகட்டி விடுவாள். பிறகு அந்தக் குழந்தை பசிநீங்கித் திருப்தி அடைந்து சிரித்து விளையாடும். மறுதடவை பாலைப் புகட்டும் போது, முன் பாலினுலடைந்த த்ருப்தியை நினைத்து அந்தக் குழந்தை ஆசையுடன் பாலை உட்கொள்ளுவதில்லை. முன்போலவே சங்கைத் தள்ளி விடுகிறது. பாலுக்காகவே அழும் குழந்தை பாலைத் தள்ளுவது அறியாமையினுல்தான். இவ்விதம் அஹங்காராதி ஜகத்ப்ரதீதியில்லாத அத்வைத நிலையையே விரும்பும் அஜ்ஞர்கள் அறியாமையினுல் அத்வைதத்தை வெறுக்கிறுர்கள்.

அத்வைதத்தை விரும்பாத பக்ஷத்தில் தூக்கத்தையும் இஷ்டப்ராப்தியையும் விரும்பமாட்டார்கள்.

தூக்கத்தில் ஜகத்ப்ரதீதி நீண்டகாலமில்லை. இஷ்ட ப்ராப்தியில் ஒரு க்ஷணம் ஜகத்ப்ரதீதி யில்லை. விஷயங்களை மனஸில் சிந்திப்பதும் இந்த்ரியங்களால் க்ரஹிப்பதும் அவைகளுக்காகப் ப்ரவ்ருத்திப்பதும் துக்க ரூபமென்பதில் விவாதம் யாருக்குமில்லை. ஜகத்ப்ரதீதி இருக்கும்போது சிந்திப்பது முதலானவை இல்லாமலிருக்க முடியாது. ஆகவே ஜகத்ப்ரதீதி இல்லாத அத்வைத நிலை ஒன்றுதான் ஸுகம். இவ்விதமிருந்தும் அறியாத குழைந்தைகளைப் போலிருக்கும் த்வைதிகளும் ''அத்வைத நிலையே ஸுகம், த்வைதம் துக்கம்'' என்று அறியாமல் அத்வைத்ததை வெறுக்கிறார்கள். பாலையே விரும்பிப் பாலைத் தடுப்பதுபோல, அத்வைதத்தையே (ஸுகத்தையே) விரும்பி அத்வைத (ஸுக)த்தை வெறுக்கிறார்கள்.

ஜ்ஞாநியின் ஸஞ்சிதகர்மா எப்படி அழியும்?

ஜ்ஞாநிக்கு ஜ்ஞாநமுண்டான பிறகு கர்த்ருத்வ அபிமாநமில்லாமல் போனதால் ஆகாமிகர்மஸம்பந்தமில்லையென்றாலும், கர்த்ருத்வ அபிமாநத்தோடு செய்யப்பட்ட புண்யபாபரூப ஸஞ்சித கர்மா எப்படி அழியும் என்றால், ஸ்வப்நகாலத்தில் கர்த்ருத்வ அபிமாநத்தோடு செய்யப்பட்ட புண்யபாப ரூபகர்மாவானது, விழித்துக்கொண்ட பிறகு கர்த்ராதிகாரகங்களில்லாமல் தான்மாத்ரம் சேஷ்டாரஹிதனா யிருப்பதைக்கண்டு 'நான் புண்ய பாபரூபகர்மாவை ஸ்வப்நத்தில் செய்தவனல்லன். ஒன்றும் செய்யாமல் நான் மாத்ரமிருந்தேன்' என்ற நிச்சய புத்தியினால் பாதிக்கப்பட்டு அழிவதுபோல, அழியும்.

यत् कृतं स्वप्नवेलायां पुण्यं वा पापमुल्बणम् ।
सुप्तोत्थितस्य किं तत् स्यात् स्वर्गाय नरकाय वा ॥

யத்க்ருதம் ஸ்வப்நவேலாயாம்புண்யம் வா பாபமுல்பணம் |
ஸுப்தோத்திதஸ்ய கிம் தத் ஸ்யாத் ஸ்வர்காய
நரகாயவா || (4-37)

ஸ்வப்நகாலத்தில் ஒருவன் பெரிய புண்யத்தையோ பாபத்தையோ செய்திருப்பானுனல் அவன் விழித்துக்கொண்ட பிறகு அக்கர்மா ஸ்வர்கத்தையோ நரகத்தையோ அவனுக்குக் கொடுக்காது.

என்று பகவத்பாதர்கள் சொல்லியிருக்கிருர்கள்.

ஸ்வப்நஜகத்தின் ஆரம்பமும் ஜாக்ரத்ஜகத்தின் ஆரம்பமும் இவைகளின் முடிவும் ஒரே இடத்தில், அவ்விடத்தை அஜ்ஞர்கள் நழுவ விடுகிருர்கள். ஜ்ஞானிகள் அதை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு அதிலிருந்து உண்டான ஸ்வப்நஜகத் எப்படிப் பொய்யோ, பொய்யா யிருப்பதனுல் அவ்விடத்தில் நடந்த வ்யவஹாரங்களெல்லாம் தன்னை எப்படி பாதிக்கமாட்டாவோ, தன்னைத் தவிர வேறு ஒன்று இல்லாததனுல் அந்த உலகம் முழுவதும் தானே தானே, அப்படியே, "ஜாக்ரத்ஜகத்தும் பொய், அந்த வ்யவஹாரமும் தன்னை பாதிக்காது, அந்த உலகமும் தன்னைத்தவிர வேறல்ல, நான்தான்" என்று ஜாக்ரத் ஜகத்திலுள்ள காரகங்களைத் தன்னைத்தவிர வேறல்ல வென்று பாதித்துவிட்டபடியால், ஸ்வப்நக்ருதகர்மா வைப்போல ஸஞ்சித கர்மாவும் பாதிக்கப்படுகிறது. இந்த அபிப்பிராயம் கொண்டுதான் பகவான்,

ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात् कुरुते तथा ॥
(4—37. பக்-42)

ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா ।
(4-37)

என்று சொல்லியிருக்கிறார்,

ஜாக்ரத் ஸ்வப்நம் ஸுஷுப்தி இம் மூன்றிலும் தம்மிருப்பை ஜ்ஞாநிகளைப்போல அஜ்ஞர்களும் அறிந்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி யிருந்தும் ஜாக்ரத்காலத்தில் மாத்ரம் ஜாக்ரத்ஜகத்தோடு தோன்றி அதனுடனேயே மறையும் ஒரு ஶரீரத்தினுடைய தர்மத்தைத் தன்னிடத்தில் எப்படி ஏற்றிக் கொள்ளமுடியும்? ஆனால் விசாரணையில்லாமல் ஜாக்ரத் ஶரீரதர்மத்தோடு கூடின தாமே ஸ்வப்நத்திலும் ஸுஷுப்தியிலும் இருப்பதாக நினைக்கிறார்கள்: ஜ்ஞாநியோ ஜாக்ரத் த்ருச்யம், ஸ்வப்ந த்ருச்யம், ஸுஷுப்தி த்ருச்யம் இம்மூன்றையும் ஒதுக்கி, குணமயமான இம் மூன்றுக்கும் வேறான த்ரஷ்டாவாகத் தன்னை நினைக்கிறான். ஸ்வப்நத்ருஶ்யம் எப்படி த்ரஷ்டாமாத்ரமோ அப்படி ஜாக்ரத்த்ருஶ்யமும் த்ரஷ்டாமாத்ரம். இரண்டு ஜகத்தும் பாதிக்கப்பட்டபடியால் ஸுஷுப்தியில் இரண்டு ஜகத்துக்களில் காரணரூபமான குணமய அவித்யையும் பாதிக்கப்படுகிறது. இந்த மூன்றும் பாதிக்கப்பட்டு எஞ்சிநிற்கும் த்ரஷ்டா எதுவோ அதுவே பரமாத்மாவுக்கு வேறாகாத க்ஷேத்ரஜ்ஞன்.

स्वप्नो जागरणे लीनः स्वप्नेऽपि जागरो न हि ।
द्वयमेव लये नास्ति लयोऽपि ह्युभयोर्न च ॥

ஸ்வப்நோ ஜாகரணே லீந: ஸ்வப்நேபி ஜாகரோ நஹி ।
த்வய மேவ லயே நாஸ்தி லயோபி ஹ்யுபயோர்நச ॥

त्रयमेव भवेन्मिथ्या गुणत्रयविनिर्मितम् ।
अस्य द्रष्टा गुणातीतो नित्यो ह्येकश्चिदात्मकः ॥

த்ரயமேவ பவேந்மித்யா குணத்ரய விநிர்மிதம் ।
அஸ்ய த்ரஷ்டா குணாதீத: நித்யோஹி ஏகஶ்சிதாத்மக: ॥

ஸ்வப்நம் ஜாக்ரத்காலத்தில் இல்லே. ஜாக்ரத் ஸ்வப்நகாலத்தில் இல்லே. இவ்விரண்டும் ஸுஷுப்தி காலத்திலில்லே. அவ்விரண்டிலும் (ஜாக்ரத் ஸ்வப்நங் களிலும்) ஸுஷுப்தியில்லே. ஆகையால் இம்மூன்று அவஸ்தைகளும் முக்குணங்களின் கார்ய மென்றும் மித்யை என்றும் ஸித்திக்கிறது. இவைகளின் த்ரஷ்டா குணதீதனுன நித்யமான இரண்டற்ற சைதந்ய ஸ்வரூபமாயிருக்கிருன்.

என்று பகவத்பாதர்கள் சொல்லியிருக்கிருர்கள்.

கீதையில் ஜாக்ரத்-ஸ்வப்ந-ஸுஷுப்திகளே தத்வாக்ரஹணம் அந்யதாக்ரஹணம் என்று இரண்டாக விபாகம் செய்திருக்கிருர்.

பகவான் இந்த கீதையில் ஸ்வப்நத்தை த்ருஷ்டாந்தமாக எங்கும் காண்பிக்கவில்லே. ஏனென்ருல் இந்த ஜாக்ரத்தே ஸ்வப்நமென்பது அவர் அபிப்ராயம். இந்த தீர்க்கஸ்வப்நத்திற்கு ஏன் அவாந்தர ஸ்வப்நத்தை த்ருஷ்டாந்தமாகக் கொடுக்கவேண்டுமென்று சொல்லாமலிருந்துவிட்டார். வஸ்துதத்வத்தின் அக்ரஹணம் நித்ரை. அதற்குக் காரணமான அஞ்ஜாநம் இருள். வஸ்துதத்வத்தின் க்ரஹணம் விழிப்பு. அதற்குக் காரணமான ஜ்ஞாநம் வெளிச்சம். வெளிச்சமுள்ள காலத்தைப் பகல் என்றும் இருட்டுள்ள காலத்தை இரவு என்றும் சொல்லுவது

வழக்கம். ஜ்ஞாநியானவன் ஜ்ஞாந வெளிச்சத்தினுல் அஜ்ஞாந இருளை விலக்கி ஆத்மதத்வத்தை நன்ருய் அறிந்துகொண் டிருக்கிருன். அஜ்ஞன் சித்த தோஷத்தினுல் ஜ்ஞாநத்தை க்ரஹிக்க முடியாமல் அஜ்ஞாநத்திலேயே இருந்துகொண்டு தத்வத்தை க்ரஹிக்காதவனு யிருக்கிருன். ஆகையால் ஜ்ஞாநி யின் பகல் அஜ்ஞனுக்கு இரவு; கோட்டான் முதலிய நிசாசர ப்ராணிகளுக்கு நம்முடைய பகல் இரவுபோல.

தத்வத்தின் அக்ரஹணம் அந்யதாக்ரஹணத்திற்குக் காரணம். தூக்கத்தில் ஓரறையில் படுக்கையில் தான் படுத்திருக்கும் தத்வத்தை அறியாததனுல் அந்யதாக்ரஹண ரூபமான ஸ்வப்நத்தைப் பார்க்கிருன். ஸ்வப்நம் பார்க்கிறவன் தான் பகலில் க்ராமாந்தரம் போவதாகப் பார்க்கிருன். இதுவே அந்யதாக்ரஹணம். ஸ்வப்நம் பார்க்கிறவன் தான் விழித்துக் கொண்டிருப்பதாக நினைத்தபோதிலும், பக்கத்தில் விழித்துக்கொண்டிருக்கும் ஒருவன் அவனைத் தூங்குகிறவனுகவே நினைப்பான். அவன் விழித்துக்கொண் டிருக்குமிடம், உண்மையில் விழித்துக்கொண்டிருக்கும் மற்றவனுக்கு இரவே ஆகும். இந்த அர்த்தத்தை,

या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥(2–69)

யாநிஶா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்திஸம்யமீ ।
யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிஶாபஶ்யதோமுநே: ॥
(2-69)

எந்த பரமார்த்ததத்வம் ஸர்வ பூதங்களுக்கும் (அகோசரமாயிருப்பதனுல்) இரவாயிருக்கிறதோ

அதில் ஜிதேந்த்ரியனான யோகி (அஜ்ஞாநநித்ரையிலிருந்து விழித்துக்கொண்டவன்) விழித்துக்கொண்டிருக்கிறான். (தூங்குகிறவன் ஸ்வப்நம் பார்ப்பதுபோல) எந்த அவித்யாநிசியில் ப்ராணிகள் விழித்துக்கொண்டிருக்கிறார்களோ, பரமாத்மதத்வத்தை அறிந்த முநிக்கு அது இரவு.

என்கிற ஸ்லோகத்தால் தெரிவித்திருக்கிறார்.

கண்வலிக்காரன் நேத்ரதோஷத்தால் வெளிச்சத்தை க்ரஹிக்கமுடியால் இருட்டிலேயே எப்படி அடங்கியிருப்பானோ, வெளிச்சத்தில் ப்ரகாசிக்கும் வஸ்துவை எப்படி க்ரஹிக்கமாட்டானோ, அப்படி அஜ்ஞன் சித்த தோஷத்தினால் ஜ்ஞாநத்தை க்ரஹிக்க முடியாமல் ஜ்ஞாநப்ரகாஶத்தால் விளங்கும் ஆத்ம தத்வத்தை க்ரஹிப்பதில்லை. கண்வலியுள்ளவனுக்கு ஔஷதத்தால் நேத்ரதோஷம் விலகியதும் கூச்சமில்லாமல் வெளிச்சத்தைப் பார்த்து அதில் விளங்கும் வஸ்துவையும் அவன் உள்ளபடி பார்க்கிறான். அஜ்ஞனும் ச்ரவண மநந நிதித்யாஸநங்களால் சித்தகதமான அஸம்பாவநா விபரீதபாவநா முதலிய தோஷங்களை விலக்கி, ஜ்ஞாநரூப ப்ரகாஶத்தை க்ரஹிப்பானானால் அந்த ஜ்ஞாநமே ஆத்ம தத்வத்தை விளக்கிக் காட்டும். இந்த அர்த்தத்தை,

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशितमात्मनः ।
तेषामादित्यवज्ज्ञानं प्रकाशयति तत्परम् ॥
(5—16 பக்-58)

ஜ்ஞாநேந து தத‌ஜ்ஞாநம் யேஷாம் நாஶிதமாத்மந: ||
தேஷாமாதித்யவத்ஜ்ஞாநம் ப்ரகாஶயதி தத் பரம் || (5-16)

என்கிற ஸ்லோகத்தால் வெளியிட்டிருக்கிறார்.

இவ்விரண்டு ஶ்லோகங்களிலும் தத்வமறியாதவனுக்கு அந்யதாக்ரஹணரூபமான ஜாக்ரத் இருக்கிறதென்றும், தத்வம் அறிந்தவனுக்கு அஜ்ஞர்களுடைய ஜாக்ரத் இல்லை, ஆனால் தத்வத்தின் ப்ரகாசமே இருக்கிறதென்றும் ஏற்படுவதனால், தூக்கம் ஸ்வப்நம் ஜாக்ரத் என்ற மூன்றையும் பகவான் எடுத்துக் கொள்ளவில்லை. ஸ்வப்நத்தையும் ஜாக்ரத்தையும் அந்யதாக்ரஹணம் என்று ஒன்றாகச் சேர்த்து, தத்வாக்ரஹணம் அந்யதாக்ரஹணம் என்ற இரண்டு அவஸ்தைகளையுமே சொல்லியிருக்கிறார்.

अन्यथा गृह्णतः स्वप्नो निद्रा तत्त्वमजानतः ॥

(मा-का-1—15)

அந்யதா க்ருஹ்ணத: ஸ்வப்ந: நித்ரா தத்வமஜாநத: ।

(மா. கா. 1-15)

ஒன்றை மற்றொன்றாய் க்ரஹிப்பது ஸ்வப்நம், தத்வத்தை அறியாமலிருப்பது நித்ரை.

என்று கௌடபாதாசார்யர்கள் சொன்னதை அநுஸரித்திருக்கிறார்.

ஜகத் மித்யை என்பதற்கு கீதாப்ரமாணம்.

பகவான் இந்த கீதையில் ஜகத்தை மித்யை என்று ஓரிடத்திலும் சொல்லவில்லை. ஆகையால் ஜகத்தை ஸத்யமென்று சிலர் சொல்லக்கூடுமேயென்றால், இது ஸங்கதமல்ல. ஏனெனில் இந்த கீதையில் ஜகத்தைத் தனக்கு அந்யமாய் எங்கும் சொல்லவில்லை. தானே ஜகத்துக்குக் காரணமென்றும் உலகம் முழுவதும் தானேயிருப்பதாகவும் தன்னை விட்டு எதுவுமில்லை யென்றும் சொன்னதோடு, தான்

இந்த ஜகத்துக்கு அந்யமாய், த்ருச்யதர்மரஹிதமான நிர்குண க்ஷேத்ரஜ்ஞனுயிருக்கிறதாகவும் சொல்லி யிருக்கிறுர். நிர்குணக்ஷேத்ரஜ்ஞஸ்வரூபமும் குணமய ஜகத்ரூபமும் பரஸ்பர விருத்தமாயிருப்பதால் ஒரு ரூபம் ஸத்யமாயும், மற்றொரு ரூபம் தோற்றமாத்ர மாயும், அதாவது மித்யையாயும்தான் இருக்கவேண் டும். ஒரு வஸ்துவின் தோற்றரூபத்தை க்ரஹித்த வன் அஜ்ஞனென்றும், யதார்த்த ரூபத்தை க்ரஹித் தவன் அறிந்தவனென்றும் உலகத்தில் சொல்வார் கள். பகவான், தன்னுடைய குணமய ஜகத்ரூபத் தைக் கண்டு மோஹித்து அதில் விருப்பு வெறுப் புள்ள ப்ராணிகள் அஜ்ஞர்களென்றும், நிர்குண க்ஷேத்ரஜ்ஞரூபத்தைக் கண்டவர்கள் ஜ்ஞாநிகளென் றும் சொல்லிருப்பதால் குணமய ஜகத்ரூபம் தோற்ற மாத்ரம், க்ஷேத்ரஜ்ஞரூபம் பரமார்த்தம் என்பது ஸித்திக்கிறது.

वस्तुनो ह्यन्यथाभावो न कथञ्चन सिद्ध्यति ।

வஸ்துநோஹி அந்யதாபாவ: நகதஞ்சந ஸித்த்யதி ।

ஒரு வஸ்து தன் ஸ்வரூபத்தை விட்டுவிட்டு மற் ருென்ருக ஆவது ஒருநாளும் ஸிக்திக்காது.

என்கிற ந்யாயத்தை அநுஸரித்து, ஸத் ஒருபொழு தும் அஸத்தாகாது, அஸத் ஒரு பொழுதும் ஸத்தா காது. இந்த அர்த்தத்தை பகவான் இரண்டாவது அத்யாயத்தில் (2—16, பக்—20) சொல்லியிருக்கிறுர். அப்படிச் சொன்னதோடு தேஹீ அதாவது க்ஷேத்ர ஜ்ஞன் ஸத்தென்றும், தேஹம் அதாவது ஜகத் அஸத்தென்றும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறுர்.

आदावन्ते च यन्नास्ति वर्तमानेऽपि तत् तथा ।
(मा. का. 4–31)

ஆதாவந்தே ச யந்நாஸ்தி வர்தமானேபிதத் ததா ।
(மா. கா. 4-31)

ஆதியிலும் அந்தத்திலும் ஒரு பொருள் இல்லையானுல் வர்த்தமாநத்திலும் (தோன்றினுலுங்கூட) அது இல்லைதான்.

என்ற ந்யாயத்தை அநுஸரித்து ஆதியிலும் அந்தத்திலும் இல்லாத இந்த ஜகத் நடுவில் தோன்றினுலும் அஸத்தென்றே சொல்லவேண்டும். ஆதியிலும் அந்தத்திலும் உலகம் இல்லையென்று பகவானே—

अव्यक्तादीनि भूतानि व्यक्तमध्यानि भारत ।
अव्यक्तनिधनान्येव तत्र का परिदेवना ॥ (2–28)

அவ்யக்தாதீநி பூதாநி வ்யக்தமத்யாநி பாரத ।
அவ்யக்த நிதநாந்யேவ தத்ர கா பரிதேவநா ॥ (2-28)

ஸர்வபூதங்களும் ஆதியிலும் அவ்யக்தம். முடிவிலும் அவ்யக்தம். நடுவில் மாத்ரம் வ்யக்தம். இவ்விதமிருக்க அந்த ப்ராணிகள் விஷயத்தில் துக்கம் எதற்காக?

என்கிற ஶ்லோகத்தில் சொல்லியிருக்கிறுர். மேலும் பரிதேவனையின் ஆக்ஷேபம் உலகம் பொய்யானுல் தான் பொருந்தும். மேலும் பந்தநிவ்ருத்திக்கு ஜ்ஞாநத்தை ஸாதனமாக சொல்லியிருப்பதனுற் பந்தரூபமான ஜகத் அஜ்ஞாநத்தினுல் தோன்றும் தோற்றமாத்ரமாகத்தானிருக்கவேண்டும். ஸத்யவஸ்துவுக்கு ஜ்ஞானத்தால் நிவ்ருத்தி ஸித்திக்கமாட்டாது.

நான்காம் அத்யாயம்

ஜ்ஞானிகளின் வ்யவஹாரம்

பூர்வபக்ஷம் :— தத்வக்ரஹணத்தால் தோற்றம் அழிந்துவிடும். பிறகு தோற்றநிபந்தநமான வ்யவஹாரமிருக்கக்கூடாது. இருந்தால் தோற்றம் அழியவில்லை.

கீதையில் ஜ்ஞாநி லக்ஷணம் சொல்லியிருப்பதைக் கவனித்தால் அவர்களுக்கு உலகவ்யவஹாரம் இருப்பதாக தெரியவருகிறது. ஆகையால் அஜ்ஞர்களுக்குப போல ஜ்ஞாநிகளுக்கும் உலகம் ஸத்யமாகவே இருந்துவருகிறது. நாலாவது அத்யாயத்தில்,

गतसङ्गस्य मुक्तस्य ज्ञानावस्थितचेतसः ।
यज्ञायाचरतः कर्म समग्रं प्रविलीयते ॥

கத ஸங்கஸ்ய முக்தஸ்ய ஜ்நாநாவஸ்திதசேதஸ: |
யஜ்ஞாயாசரத: கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே ||

ब्रह्मार्पणं ब्रह्महविर्ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम् ।
ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना ॥ (4—23, 24)

ப்ரஹ்மார்பணம் ப்ரஹ்ம ஹவி:
ப்ராஹ்மாக்நௌ ப்ரஹ்மணா ஹுதம் |
ப்ரஹ்மைவ தேந கந்தவ்யம்
ப்ரஹ்மகர்மஸமாதிநா || (4—23, 24)

என்கிற ஶ்லோகங்களால் ஜ்ஞாநிகள் ஈச்வர ஆராதந நிமித்தம் கர்மாவைச் செய்வதுண்டென்றும், அந்தக் கர்மாவானது, ப்ரஹ்மத்ருஷ்டியால் காரகங்கள் அழிக்கப்படுவதனுல் பலத்தைக் கொடுக்காமல் அழிந்துவிடு

மென்றும் சொல்லிருப்பதனுல், அஜ்ஞர்களைப்போல ஜ்ஞானிகளும் கர்மாவைச் செய்வதுண்டு என்று ஸித்திக்கிறது. இதனுலும் ஜ்ஞானிகளுக்கு ஜ்ஞானமுண்டான பிறகும் உலகத்தோற்றமுண்டென்று தெரிய வருகிறது. மூன்ருவது அத்யாயத்தில்,

कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः ।
लोकसंग्रहमेवापि संपश्यन् कर्तुमर्हसि ॥ (3–20)

கர்மணைவஹி ஸம்ஸித்தி மாஸ்திதாஜநகாதய: |
லோகஸங்க்ரஹ மேவாபி ஸம்பஶ்யந் கர்து
மர்ஹஸி ‖ (3-20)

ஜநகர் முதலான ஜ்ஞாநிகள் கர்மாவுடன் மோக்ஷத்தை அடைந்தார்கள். நீ ஜ்ஞாநியானுலும் உலக நன்மையை உத்தேசித்து அவச்யம் கர்மாவைச் செய்யத் தகுந்தவனுயிருக்கிருய்.

என்கிற சுலோகத்தால் அஜ்ஞர்கள் கெடாமலிருப்பதற்காக ஜ்ஞானிகள் கர்மாவைக் செய்வதுண்டென்று பகவான் சொல்லியிருக்கிருர். இதனுலும் ஜ்ஞானிகளுக்கு ஜகத்ப்ரதீதி உண்டென்று ஏற்படுகிறது.

ஸமாதாநம்:—ஜ்ஞானிகளுக்கு ஜகத்ப்ரதீதியும் அதனுலுண்டான உலக வ்யவஹாரமும் இருக்கிறதென்று மேற்சொன்ன வழியில் ஸித்தித்தபோதிலும் உலகம் ஸத்யமென்று ஸித்திக்கமாட்டாது. ஜ்ஞாநம் ஜகத்ஸத்யதாமாத்ரத்தை அழிக்கும். வ்யவஹாரமோ ஜகத்ஸத்யதையை அபேக்ஷிப்பதில்லை. தோற்றமாத்ரமாயிருந்தாலும் வ்யவஹாரம் ஸித்திக்கும். வ்யவஹாரத்தால் அபேக்ஷிக்கப்படும் தோற்றத்தை ஜ்ஞானம் தடுக்கமாட்டாது.

காகிதத்தால் செய்யப்பட்ட் தாமரைப்பூவை காகித மென்று உணர்ந்தவனும் உணராத அஜ்ஞனைப் போலவே 'இது தாமரைப்பூ' என்று வ்யவஹரிப்பான். மரத்தால் செய்யப்பட்ட யானையை மரமென்று அறிந்தவனும் 'இது யானை' என்று வ்யவஹரிப் பான். ஆகவே "உலகம் ஸத்யமல்ல. பரமாத் மாவாகவே இருக்கிறது" என்று அறிந்த ஜ்ஞானியும் உலகத்தை பரமாத்மாவென்று சொல்லாமல் அஜ்ஞர் களைப் போலவே தானும் உலகமென்றே சொல்வான். கொலுமண்டபம் ஜோடிக்கிறவன் அங்குள்ள பொம் மைகளை மரமென்றோ மண்ணென்றோ அறிந்திருந்த போதிலும், பசுவையும் அதன் கன்றையுமே சேர்த்து வைப்பான். புலியை அதன் பக்கத்தில் வைக்கமாட் டான். புலி மாட்டைக் கொல்லும் என்ற அநு பவத்தை அநுஸரித்தே புலியை மாட்டின் பக்கத்தில் வைப்பதில்லை. ஆகையால் மித்யாவஸ்துவிலும் நிய மத்தை யநுஸரிப்பதுண்டு. இவ்விதம் ஜ்ஞானியும் உல கத்தைப் பரமாத்மாவாகவே அறிந்திருந்தாலும், பழைய வழக்கத்தை அநுஸரித்து உலக வ்யவ ஹாரத்தை ஒழுங்காய் நடத்துவான்.

ஜ்ஞானம் எந்த சரீரத்திலுண்டாயிருக்கிறதோ அந்த சரீரத்தை அது அழிக்காது. விடப்பட்ட பாணம் புருஷப்ரயத்நமில்லாமற்போனாலும், வேகமுள்ளவரை யில் போய்த்தான் விழும். விளக்கில் எண்ணெய் ஆய்விட்டபோதிலும் திரி படர்ந்து எரிந்துதான் அணையும். இவ்விதம் ப்ராரப்தமுள்ளவரையில் சரீரம் இருந்துதான் அழியும். சரீரமுள்ளவரையில் உலக மும் தோன்றும். தோன்றும் வரையில் தோற்ற

நிபந்தநமான வ்யவஹாரமும் இருக்கக்கூடும். ஆனால் அஜ்ஞர்களுடைய வ்யவஹாரம்போல் இருக்கமாட்டாது. அஜ்ஞர்களுக்கு ஜகத்ஸத்யதாபுத்தியினால் ராகத்வேஷாதிகள் உண்டாகும். ஜ்ஞாநிக்கோ அந்த ஸத்யதாபுத்தி ஜ்ஞாநத்தால் அழிந்துவிட்டபடியால் ராகத்வேஷாதிகள் உண்டாகமாட்டாது.

பொம்மையாட்டத்திலும் நாடகத்திலும் வ்யவஹாரஸித்தியைக் கண்டிருக்கிறோம். ப்ராரப்தசரீரமுள்ளவரையில் ப்ராரப்தகர்மாநுஸாரம் ஜ்ஞாநிகளுக்கு வ்யவஹாரம் உண்டென்று சொல்லும் பக்ஷத்தில் "பகவானுடைய சரீரம் ப்ராரப்தமாகாததால் அவருக்கு உலகத்தோற்றம் பொருத்தமுடையதல்ல; அவர் அர்ஜுநனுக்கு கீதை உபதேசித்தாரென்பதும் அஸங்கதமாகும்" என்ற சங்கை பிறக்கக்கூடும். இந்த ஸம்சயம் ஜ்ஞாநிக்கு உண்டாகிறதில்லை. அவன் எதையும் ப்ரஹ்மஸ்வரூபமாகவே பார்க்கிறான். அஜ்ஞனுக்கோ அதிஷ்டாந பரமாத்ம ஜ்ஞாநத்துக்கு முன் எதுவும் ஸத்யமாகவே யிருப்பதனால் இந்த ஸம்சயமுண்டாக ந்யாயமில்லை. பகவானுடைய வ்யவஹாரப்ரதீதி எப்படி அஜ்ஞனுக்கேயோ அப்படியே ஜ்ஞாநியின் வ்யவஹாரப்ரதீதியும் அஜ்ஞனுக்கே யென்று ஸமாதாநம் சொல்லலாம். ஏன் ப்ராரப்தத்தை அங்கீகரிக்கவேண்டுமென்றால், எவ்விதமாகவாவது அஜ்ஞன் அதிஷ்டாநத்திற்கு அபிமுகமாக வேண்டும் என்பதற்காகச் சொல்லும் சொல்.

तिष्ठत्ययं कथं देह इति शङ्कावतो जडान् ।
बाह्यदृष्ट्या समाधातुं प्रारब्धं वदति श्रुतिः ॥

திஷ்டத்யயம் கதம்தேஹ
இதிஶங்காவதோ ஜடாந் ।
பாஹ்யத்ருஷ்ட்யா ஸமாதாதும்
ப்ராரப்தம் வததி ஶ்ருதி: ॥

ஜ்ஞாநம் வந்தபிறகு எப்படி இந்த தேஹம் நிற்கும் என்று ஸந்தேஹிக்கிற மந்தர்களை உத்தேசித்து, அவர் த்ருஷ்டியை அநுஸரித்து, வேதமானது ப்ராரப்தத்தைச் சொல்லி ஒரு ஸமாதாநத்தைச் சொல்லுகிறது.
என்று பகவத் பாதாள் சொல்லியிருக்கிறார்.

ஜகத் துக்கரூபம்

தூக்கத்தில் ஸ்வஸ்தனுயிருந்த புருஷன் ஜகத்ப்ரதீதி உண்டானதும் வாஸநாபலத்தால் தள்ளப்பட்டு மந இந்திரியத்வாரா வெளியில் ப்ரவ்ருத்தி சீலனுகிறான். துக்கரூபமான தன் ப்ரவ்ருத்தியை முடித்துக் கொண்டு மறுபடியும் இருப்பிடமே வந்து சேர்ந்து ஸ்வஸ்தனுகிறான். உடனே மற்றொரு வாஸனையால் தள்ளப்பட்டு மறுபடியும் ப்ரவ்ருத்திக்குவந்து கஷ்டப்பட்டு அதையும் முடித்துக்கொண்டு இருப்பிடமே வந்து சேர யத்நம் பண்ணுகிறான். சேர்ந்த ஒரு க்ஷணத்துக்கெல்லாம் மறுபடியும் தள்ளப்படுகிறான். இவ்விதம், பாலனுல் ப்ரவாஹத்தில் தள்ளப்பட்டுக் கரையை நோக்கி வருவதும், மறுபடியும் பாலனுல் தள்ளப்படவே மறுபடியும் கரையை நோக்கி வருவதுமாய்க் கஷ்டப்படும் எறும்பு போல, ஜகத்ப்ரதீதியால் கஷ்டப்படுகிறான் என்பது யாவரும் அறிந்த விஷயமே.

न हि द्वैते सुखस्य गन्धमात्रमप्यस्ति ।

நஹி த்வைதே ஸுகஸ்ய கந்தமாத்ரமப்யஸ்தி ।

த்வைதத்தில் ஸுகத்தினுடைய வாஸநைகூடக் கிடையாது.

என்று பகவத்பாதாள் சொல்லியிருக்கிறார். ஆகையால், தான் விரும்பும் இடத்தில் நிலைத்து நிற்க ஸத்குருவை ஆச்ரயித்து அத்வைத ஆத்மஜ்ஞாநத்தை அடைந்து த்வைதத்தை வேரோடு அழிக்க வழி தேடாமல் வீண் குதர்க்கங்களைச் செய்வதில் ப்ரயோஜநமில்லை.

ஜகத்தை அஸத்யம் அப்ரதிஷ்டம் என்கிற சார்வாகர்கள் அத்வைதிகளாகமாட்டார்கள்

ஜகத் அஸத்தென்பது பகவத் ஸம்மதமாயிருந்தால்,

असत्यमप्रतिष्ठं ते जगदाहुरनीश्वरम् ।
अपरस्परसंभूतं किमन्यत् कामहैतुकम् ॥ (16–८)

அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீஶ்வரம் |
அபரஸ்பர ஸம்பூதம் கிமந்யத் காமஹைதுகம் ‖ (16-8)

“இந்த ஜகத் அஸத். இதற்கு தர்மாதர்மரூபமான ப்ரதிஷ்டை கிடையாது. ஈச்வரன் கிடையாது. காம நிமித்தமாய் ஸ்த்ரீ புருஷர்கள் சேர்வதால் உண்டாகிறது” என்று அஸுர ப்ரக்ருதி உடையவர்கள் சொல்லுகிறார்கள்.

என்ற ஶ்லோகத்தால் ஜகத் அஸத்யமென்று சொல்லுகிறவர்களை அஸுரப்ரக்ருதி உடையவர்களென்று பகவான் ஏன் தூஷிக்கவேண்டுமென்றால், இந்த ஶ்லோகம் தேஹாத்மவாதிகளான சார்வாகர்களைப் பற்றினது; ஆத்மதர்ஶிகளைப் பற்றினதல்ல. கர்த்தா

போக்தாவா யிருக்கும் ஜீவர்கள், ஜீவர்களுடைய கர்மாநுஸாரம் பலத்தைக் கொடுக்கும் ஈசன், கர்மபலபூதமான ஜகத் இம்மூன்றும், இம்மூன்றைப் பொருந்திய ஜீவேசபேதம், ஈசஜகத்பேதம், ஜீவஜகத் பேதம், ஜீவபரஸ்பர பேதம், ஜகத்பரஸ்பரபேதம் ஆக ஐந்துபேதங்களும் ஸச்சிதாநந்தரூபியான க்ஷேத்ரஜ்ஞ பரமாத்மாவினிடத்தில் கல்பிதங்கள். அதிஷ்டாந ஜ்ஞாநத்தினுல்தான் கல்பிதத்தின் நிவ்ருத்தி யுண்டாகும். கல்பிதத்தின் வழி சென்றுதான் அதிஷ்டாநத்தை அறியவேண்டும்.

உலகத்தில் ஆசையுள்ள புருஷன் ஸ்வபாவமாக மநஸில் தோன்றியபடி லௌகிக கர்மாவைச் செய்கிருன். அந்தக் கர்மா ப்ரயோஜநப் படுவதில்லை என்பதை ஸ்வாநுபவத்தால் அறிகிருன். பிறகு சாஸ்த்ரத்தில் சோல்லப்பட்ட கர்மாக்களைச் செய்கிருன். அப்பொழுது, "தர்மாதர்மங்களுக்குப் பலரூபமான ஜகத்தை ஈசன் அர்ப்பணம் செய்கிருன். ஆகையால் சாஸ்த்ரத்தில் சொல்லியபடி கர்மாவை அநுஷ்டிக்க வேண்டும்" என்பது அவன் எண்ணம். பிறகு கர்மபலரூபமான ஜகத்தே துக்க ரூபமென்பதை அறிந்து, கர்மபலனை விரும்பாமல் ஈசனையே ஶரணமாக அடைந்து அவனைக் கர்மாவாலும் பக்தியாலும் ஆராதிக்கிருன். இவ்விதம் ஈஶனை ஆராதிக்கும் புருஷனே கல்பிதத்தின் வழியாய் அதிஷ்டாந வஸ்துவின் ஸமீபத்தை அடைந்தவனுகிருன். பிறகு ஶாஸ்த்ராசார்ய உபதேஶரூபமான வெளிச்சத்தைக் கொண்டு அதிஷ்டாநத்தை உற்றுப்பார்க்கும்போது க்ஷேத்ரஜ்ஞ பரமாத்மாவைத் தவிர முன் சொன்ன மூன்றையும் அவற்

றைப் பொருந்தின பேதங்களையும் பார்க்க மாட்டான். அதிஷ்டாந ஜ்ஞாநம் உண்டாகிறவரையில் கல்பிதமே அதிஷ்டாநத்தின் ஸத்யதையை க்ரஹித்துக்கொண்டு தான் ஸத்யமாய் விளங்கும். ஆகவே ஆத்மதர்சிகளுக்கு ஜகத் ஜீவேசபேதம் முதலில் ஸத்யமாயிருந்து, அதை அநுஸரித்தே ஆத்மஜ்ஞானம் உண்டாகிறது. பிறகுதான் பரமாத்மாவுக்கு அந்யமான ஸகலமும் அஸத்தாகிறது. ஸர்வமும் அஸத்தென்கிற நிச்சயம் ஆத்மஜ்ஞாநிக்கு ஏற்பட்டதனுல்தான் ஜகதாஸக்தியும் அஹங்கார மமகாரங்களும் ராகத்வேஷாதிகளும் அவர்களை விட்டு விலகுகின்றன. ஜ்ஞாநிலக்ஷணம் சொல்லும்போது இந்த விஷயத்தை பகவான் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறுர்.

ஜீவேஶ்வரஜகத் அஸத்தென்று சொல்லும் சார்வாகர்கள் ஆத்மஜ்ஞாந முடையவர்களல்ல. "காமஹேதுகமாய் பரஸ்பரஸம்பூதமாகவே எல்லாம் இருக்கிறது. தர்மாதர்ம நிபந்தநமாய் எதுவுமில்லை. அவைகளுக்குப்பலதா தாவாய்ஈசனுமில்லை" என்று எண்ணங்கொண்டு நிர்பயமாய் பரஹிம்ஸை முதலான பாபத்தையும் லக்ஷயம் செய்யாமல், அஹங்கார மமகாரங்களோடு கூடினவர்களாய் உலகத்தில் ப்ரவ்ருத்திசீலர்களாயிருக்கிறுர்கள். एतां दृष्टिमवष्टभ्य (16—9) என்று ஆரம்பிக்கப்பட்ட உத்தர ஶ்லோகங்களில் சொல்லியிருக்கும் விஷயத்தைக் கவனித்தால் ஜகத் அஸத்யமென்று அவர்கள் சொல்வது சொல் மாத்ரமென்று ஏற்படுகிறது. முன்னுமில்லை பின்னு மிருக்காது என்கிற எண்ணமேதவிர வர்த்தமாநத்தில் இல்லையென்கிற எண்ணம் அவர்களுக்கு இல்லவேயில்லை.

பகவான் பதினைந்தாவது அத்யாயத்தில் ஸம்ஸாரத்தை, அதாவது ஜகத்தை அச்வத்தவ்ருக்ஷமாகக் கல்பனை செய்திருக்கிறார். அதில் ஜீவேசஜகத்பேதத்தையும் காண்பித்திருக்கிறார். அதே அத்யாயத்தில் மூன்றாவது ஶ்லோகத்தில் "ஜகத்தை உற்றுப்பார்த்தால் முன்சொல்லப் பட்டபடி ரூபம் காணப்படுகிறதில்லை. பரமாத்மாவாகவே இருக்கிறது. இந்த உலகம் த்ருஷ்ட நஷ்டப்ராயமாயிருக்கிறது." என்று தானே அஸத்யமென்று சொல்லியிருக்கிறார். இந்த கீதையில் பல இடங்களிலும் ஜகத் அஸத்தென்பதை நிரூபணம் செய்திருக்கிறார். ஆகையால் அஸத்யம் என்று ஆரம்பிக்கப் பட்ட ஶ்லோகம் சார்வாகர்களைப் பற்றினது தான்.

ஜ்ஞாநிகளும் கர்மாநுஷ்டாநமும்

ஜ்ஞாநிகளில் சிலர் லோகஸங்க்ரஹத்துக்காகக் கர்மாவைச் செய்துகொண்டிருப்பார்கள். சிலர் ஸர்வ கர்மாக்களையும் ஸந்யஸித்துத் தாம் யாதொன்றையும் செய்யாமல் பிறரையும் செய்யும்படி தூண்டாமல் ஸுகமாயிருப்பார்கள். சிலர் ஶரீர ஸ்திதிக்கு மாத்ரம் வேண்டிய பிக்ஷாடநம் முதலிய கர்மாக்களைச் செய்துகொண்டிருப்பார்கள். அவரவர்கள் ப்ராரப்தத்துக்குத் தக்கபடி லோக வ்யவஹாரமுள்ளவர்களாயிருப்பார்கள். "ஜ்ஞாநிகள் எப்பொழுதும் ஸமாஹித சித்தர்களாயிருக்கவேண்டும், இல்லாத பக்ஷத்தில் கர்மாவைச் செய்யவேண்டும், இல்லையானல் பாபம் ஸம்பவிக்கும்" என்று எண்ண இடமில்லை.

निराशीर्यतचित्तात्मा त्यक्तसर्वपरिग्रहः ।
शारीरं केवलं कर्म कुर्वन् नाप्नोति किल्बिषम् ॥ (4–21)

நிராஶீர்யத சித்தாத்மா த்யக்தஸர்வபரிக்ரஹ: ।
ஶாரீரம் கேவலம் கர்ம குர்வந் நாப்நோதி
கில்பிஷம் ॥ (4-21)

ஒருவித ஸம்பத்தையும் கோராமல், தன்னுடைய தென்று ஒன்றையும் வைத்துக்கொள்ளாமல், தன் மநஸை அடக்கியிருக்கும் ஜ்ஞாநி ஶரீரஸ்திதிக்கு மாத்ரம் வேண்டிய கர்மாவைச் செய்வதனுல் பாப மடைய மாட்டான்.

என்கிற ஶ்லோகத்தால் இந்த அர்த்தம் விளங்குகிறது. ஜ்ஞாநிகளின் நடத்தையையும் லக்ஷணத்தையும் இன்னவிதமென்று சொல்ல யாராலும் முடியாது. ஜிஜ்ஞாஸை யுள்ளவனுக்கே யார் ஜ்ஞாநி யென்பது தெரியும்.

ஸந்யாஸியே ஜ்ஞாநத்திற்கு முக்யாதிகாரி

ஜ்ஞாநம், தத்வதர்ஶியான ஆசார்யனிடம்போய் தத்வ விசாரணை செய்தால்தான் உண்டாகும். நாலாவது அத்யாயத்தில் 34-வது ஶ்லோகத்தால் (பக்கம்-42) இந்த அர்த்தம் விளங்குகிறது. ஸந்யாஸியே ஜ்ஞாநத்திற்கு முக்யாதிகாரி என்பதை பகவான் காண்பித்திருக்கிருர். ஆருவது அத்யாயத்தில் 37-முதல் 44-வரையிலுள்ள ஶ்லோகங்களைக் கவனித்தால் இது விளங்கும். இவ்விடத்தில் அர்ஜுநன் "கர்மாவை விட்டு ஜ்ஞாநயோகத்தில் ப்ரவ்ருதிக்கிறவன் ஜ்ஞாந ஸித்தியை அடையாவிட்டால் உபயப்ரஷ்டனுகிருன்

அவன் ஒரு ஸமயம் துர்கதியை அடைவானோ" என்று ப்ரச்நம் பண்ணியிருக்கிறான். பகவான் அதற்கு, அவன் துர்கதியை அடையமாட்டானென்று பதில் சொல்லியிருக்கிறார். ஆறுவது அத்யாயத்தில்,

आरुरुक्षोर्मुनेर्योगं कर्म कारणमुच्यते ।
योगारूढस्य तस्यैव शमः कारणमुच्यते ॥ (6—3)

ஆருருக்ஷோர்முநேர்யோகம் கர்மகாரண முச்யதே ।
யோகாரூடஸ்ய தஸ்யைவ ஶம: காரணமுச்யதே ॥ (6-3)

த்யாநயோகத்தை அடையவிரும்புகிறவனுக்குக் கர்மா ஸாதநம். த்யாநயோகத்தை அடைந்தவனுக்கு ஸர்வகர்ம ஸந்யாஸமே மோக்ஷத்தின் பொருட்டு ஸாதநமாகும்.

என்கிற ஶ்லோகத்தில் ஜ்ஞாநயோகத்தை அடைவதற்கு கர்மா ஸாதநமென்றும், அதே புருஷன் ஜ்ஞாநயோகத்தில் ப்ரவ்ருத்தித்த பிறகு அவனுக்கு அதன் ஸித்தியில் ஸர்வ கர்ம உபாதியே ஸாதநமாகுமென்றும் சொல்லியிருக்கிறார். இதனாலும் ஸந்யாஸிக்கே அநாயாஸமாய் ஜ்ஞாந முண்டாகுமென்று தெரியவருகிறது.

கர்மயோகம் கர்மஸந்யாஸத்தினும் மேல் என்பதன் தாத்பர்யம்

கீதையில் கர்மயோகம் கர்மஸந்யாஸத்தைக் காட்டிலும் மேலானதென்று சொல்லப்பட்டிருக்கிறதென்றால் (5—2) அந்த ஶ்லோகத்திலுள்ள கர்மஸந்யாஸ பதம் விவிதிஷா ஸந்யாஸத்தைக் குறிப்பிடவில்லை. விவிதிஷா ஸந்யாஸம் கர்மயோகத்தின் பலனாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தம்,

संन्यासस्तु महाबाहो दुःखमाप्तुमयोगतः ।
योगयुक्तो मुनिर्ब्रह्म न चिरेणाधिगच्छति ॥ (5–6)

ஸம்ந்யாஸஸ்து மஹாபாஹோ
து:கமாப்தும யோகத: ।
யோகயுக்தோ முநிர்ப்ரஹ்ம
நசிரேணாதிகச்சதி ॥ (5–6)

கர்ம யோகத்தை அநுஷ்டிக்காமல் ஸந்யாஸத்தை அடையமுடியாது. கர்மயோகத்தோடு கூடினவன் சீக்ரமாகவே ஸந்யாஸத்தை அடைகிறுன்.

என்ற ஶ்லோகத்தால் விளங்குகிறது. விவிதிஷாஸந்யாஸமென்பது கர்மா அதன்பலன் இவ்விரண்டையும் த்யாகம் செய்வது. கர்மஸந்யாஸமென்பது பலேச்சையிருக்கும்போது கர்மாவைமாத்திரம் த்யாகம் செய்வது. கர்மயோகம் மென்பது பலத்தை த்யாகம்செய்து கர்மாவை அநுஷ்டிப்பது. பலத்தை த்யாகம் செய்யாமல் கர்மாவை த்யாகம் செய்வதைக் காட்டிலும் பலத்தை த்யாகம் செய்து கர்மாவை த்யாகம் செய்யாமலிருப்பது மேல் என்பது பகவானுடைய அபிப்பிராயம். இந்த அர்த்தத்தில்தான்,

कर्मेन्द्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इंन्द्रियार्थान्विमूढात्मा मिथ्याचारः स उच्यते ॥ (3–6)

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய
ய ஆஸ்தே மநஸா ஸ்மரந் ।
இந்த்ரியார்த்தாந் விமூடாத்மா
மித்யாசார: ஸ உச்யதே ॥ (3-6)

கர்மேந்த்ரியங்களை அடக்கி எந்த மூடன் மநஸி னால் விஷயங்களைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறானோ அவன் ஏமாற்றுகிறவனென்று சொல்லப்படுகிறான்.

दुःखमित्येव यत्कर्म कायक्लेशभयात्त्यजेत् ।
स कृत्वा राजसं त्यागं नैव त्यागफलं लभेत् ॥ (18–8)

து:கமித்யேவ யத்கர்ம காயக்லேஶபயாத்த்யஜேத் ।
ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாக பலம் லபேத் ॥ (18–8)

எவனொருவன் துக்கமென்றே ஶரீரக்லேஶத்திற்கு பயந்துகொண்டு கர்மாவை விடுகிறானோ அவன் தன் ரஜோகுணத்தால் தூண்டப்பட்டு கர்மத்யாகம் செய்த தால் உண்மையான ஸந்யாஸத்தின் பலனான மோக்ஷத்தை அடைய மாட்டான்.

என்கிற ஶ்லோகங்களை பகவான் சொல்லியிருக்கிறார்.

அர்ஜுனனுக்கு ஏன் யுத்தபூமியில் உபதேசம் செய்தார்?

இந்த கீதையை யுத்த பூமியில் யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் பகவான் அர்ஜுனனுக்கு உபதே சித்திருக்கிறார். ஏனென்றால் அப்பொழுதுதான் அர் ஜுனன் அபரிஹார்ய ஶோகாவிஷ்டனாய் பகவானைச் சரணமடைந்தான். சித்தம் உத்கட துக்கத்தால் உழப் பட்டு விவேகமென்கிற ஜலத்தோடு கூடியிருந்தால் தான் ஆசார்யனால் தெளிக்கப்பட்ட விஜ்ஞானபீஜம் நன்றாய்ப் பயிராகி பலவத்தாகும். அர்ஜுனனுடைய சித்தம் முன்பு விவேகத்தோடு கூடியிருந்தாலும் உத்கட துக்கத்தினால் உழப்படவில்லை. யுத்த ஆரம் பத்தில்தான் அவனுடைய சித்தம் அபரிஹார்ய

துக்கத்தினுல் உழப்பட்டு, முந்தியேயிருந்த விவேக ரஸத்தோடு கூடியிருந்ததனுல் பகவான் இது ஸமய மென்று கீதையை உபதேசித்தார்.

அர்ஜுநன் கர்மாதிகாரியானுலும் யாவரும் கர்மாசெய்யவேண்டும் என்பது பகவந்மதமல்ல.

அர்ஜுநன் யுத்தஞ் செய்யமாட்டேன் என்று சொன்னதன் பேரில் கீதை ஆரம்பிக்கப்பட்டது. கீதை முடிந்ததும் அர்ஜுநன் சண்டையையே செய்தான். நடுவிலும் பல இடங்களில் அர்ஜுநனுக்கு ஸ்வதர்மமாகிய சண்டையையே செய்யவேண்டு மென்று பகவான் சொல்லியிருக்கிறுர். ஆகையால் பக்தன் முக்தன் முமுக்ஷு யாவரும் கர்மாவையே செய்யவேண்டுமென்பது பகவத் தாத்பர்ய மென்று சிலர் நினைக்கிருர்கள். இது அஸங்கதம்.

கீதையில் கர்மாவினுல் அவச்யம் அபேக்ஷிக்கப் படும் அஹங்கார மமகாரம் ஜ்ஞாநிக்கு இல்லையென்று பலவிடங்களில் தெளிவாய்ச் சொல்லியிருக்கிருர். ஜ்ஞாநியே முக்தனுகிருன். அஹங்கார மமகாரமில்லாத முக்தன் எவ்விதம் கர்மாவைச் செய்யமுடியும்? ஆகையால்தான் பகவான்,

तस्य कार्यं न विद्यते । (3–17)
தஸ்ய கார்யம் ந வித்யதே । (3-17)

(அவனுக்கு செய்யவேண்டிய கர்மா ஒன்றுமில்லை என்றும்)

सर्वारंभपरित्यागी । (14-25)
ஸர்வாரம்ப பரித்யாகீ । (14–25)

(எல்லாக் கர்மாக்களையும் விட்டவன்).

என்றும் முக்தனைச் சொல்லியிருக்கிறார். முமுக்ஷுவும் விவிதிஷா ஸந்யாஸத்தோடு கூடித்தான் ஶ்ரவணம் செய்யவேண்டுமென்பது முந்தியே சொல்லப்பட்டிருக்கிறது. பாக்கியிருக்கும் பத்தன் தான் சித்த ஶுத்திக்காக கர்மாவைச் செய்யவேண்டும். பகவான் அர்ஜுநனைக் கர்மாதிகாரியாக நினைத்து அவனைக் கர்மயோகத்தை அனுஷ்டிக்கும்படி தூண்டினார். நாலாவது அத்யாயத்தில் 38–வது ஶ்லோகத்தில் (பக்-42) அர்ஜுநனைப் பார்த்து, "நீ இப்பொழுது ஜ்ஞாநாதிகாரியல்ல கர்மயோகத்தைச் செய். அதனால் சித்தம் சுத்தமாகி கால அளவில் ஜ்ஞாநயோகத்திற்கு அதிகாரியாகி, ஜ்ஞாநத்தை அடைவாய்" என்று சொல்லியிருக்கிறார். பதினெட்டாவது அத்யாயத்தில்,

यदहंकारमाश्रित्य न योत्स्य इति मन्यसे ।
मिथ्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वां नियोक्ष्यति ॥(18–59)

யதஹங்கார மாஶ்ரித்ய
நயோத்ஸ்ய இதி மந்யஸே ।
மித்யைஷ வ்யவஸாயஸ்தே
ப்ரக்ருதிஸ்த்வாம் நியோக்ஷ்யதி ॥ (18-59)

அஹங்காரத்தை ஆச்ரயித்து நான் சண்டை செய்யமாட்டேன் என்று எண்ணுவது பொய்த்தீர்மானமாகும். ஏனென்றால் உன் க்ஷத்ரிய ஸ்வபாவமே உன்னைத் தூண்டும்.

என்கிற ஶ்லோகத்தினாலும் அர்ஜுனன் கர்மாதிகாரி என்பதைக் காண்பித்திருக்கிறார்.

ஐந்தாம் அத்யாயம்

கீதார்த்த ஸங்க்ரஹம்

பதினெட்டாவது அத்யாயத்தில் 14வது ஶ்லோகம் முதல் முடியும்வரையில் கீதார்த்தத்தை ஸங்க்ரஹித்துச் சொல்லியிருக்கிறார். இந்த அர்த்தந்தான் கீதையில் விரிவாய்ச் சொல்லப்பட்டிருப்பது.

ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைஶ்யன், ஶூத்ரன் என்ற நான்கு வர்ணங்கள் உண்டு. அவர்களுக்குத் தக்கபடி கர்மா விதிக்கப்பட்டிருக்கிறது. அவனவன் ஸ்வகர்மாவை அனுஷ்டிக்கவேண்டும். பரகர்மாவை அநுஷ்டிக்கக்கூடாது. தன் தன் கர்மாவை அநுஷ்டிப்பதனால் ஈஶ்வர ஆராதநம் செய்து சித்தஶுத்தியை அடைகிறான். சித்தம் ஶுத்தமான பிறகு கர்ம த்யாகம் செய்து ஶ்ரவணாதிகளால் ஜ்ஞாந நிஷ்டையை அடைகிறான். ஜ்ஞாநநிஷ்டன் அஹங்கார மமகாரங்களை த்யாகம்செய்து எப்பொழுதும் ஆத்மநிஷ்டனாகவேயிருந்து ப்ரஹ்மமாகிறான். இதுதான் கீதார்த்த ஸங்க்ரஹம்.

இதன் விரிவு

ஜாதிகர்ம விபாகம் :—ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைஶ்யன், ஶூத்ரன் என்கிற வர்ணங்கள் உண்டு, இவைகள் ஸ்தூல ஶரீரதர்மங்கள். ஜீவர்களுடைய ப்ராரப்த புண்ய பாபத்திற்குத் தக்கபடி கர்மபல தாதாவான ஈச்வரனால் வர்ணதர்மத்தோடு கூடின ஸ்தூல ஶரீரம் கொடுக்கப்படுகிறது. இந்த ஶரீரம் போகாயதநமாய் இருப்பதோடு புண்ய பாபங்களைச்

செய்ய ஸாதநமாயுமிருக்கிறது. ப்ராஹ்மண சித்தத்தில் ஸத்வம் அதிகமாயும் ரஜஸ் குறைவாகவும் இருக்கும், க்ஷத்ரிய சித்தத்தில் ரஜஸ் அதிகமாயும் ஸத்வம் குறைவாகவும் இருக்கும். வைஶ்ய சித்தத்தில் ரஜஸ் அதிகமாகவும் தமஸ் குறைவாகவும் இருக்கும். ஶூத்ர சித்தத்தில் தமஸ் அதிகமாகவும் ரஜஸ் குறைவாகவும் இருக்கும். ஈஶ்வரன் குணங்களுக்குத் தக்கபடி கர்மாவை விபாகஞ் செய்து கொடுத்திருக்கிறான். இந்த அர்த்தம்,

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः । (4–13)

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்ம
விபாகஶ: । (4-13)

அவரவர்களுடைய குணம் கர்மா இவைகளை அநுஸரித்து நான்கு வர்ணங்கள் என்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டன.

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परंतप ।
कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणैः ॥ (18–41)

ப்ராஹ்மண க்ஷத்ரியவிஶாம்
ஶூத்ராணாம் ச பரந்தப ।
கர்மாணி ப்ரவிபக்தாநி
ஸ்வபாவப்ரபவைர்குணை: ॥ (18-41)

ஓ அர்ஜுநா, ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ரர்களுக்கு அவரவர்களுடைய ஸ்வபாவத்திற்குக் காரணமான குணங்களை அநுஸரித்து கர்மாக்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

என்கிற ஶ்லோகங்களால் விளங்குகிறது. முதல் ஶ்லோகத்தில் **मया सृष्टं** என்று ஈச்வரன் தானே

வர்ணங்களை ஸ்ருஷ்டித்திருப்பதாகச் சொல்லியிருப்பதனாலும், பின் குறிப்பிட்ட ஶ்லோகத்தால் கர்ம விபாகத்திற்கு முன் ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைஶ்ய ஶூத்ரர்கள் உண்டென்று

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च ।

ப்ராஹ்மண க்ஷத்ரிய விஶாம் ஶூத்ராணாம் ச |

என்று ஆறும் வேற்றுமையால் குறிப்பிட்டிருப்பதனாலும், பிறப்பிலேயே வர்ணம் (ஜாதி) உண்டென்று ஸித்தமாகிறதாதலால், அவனவன் எடுத்துக்கொண்ட கர்மாவுக்குத் தக்கபடி ப்ராஹ்மணன் க்ஷத்ரியன் வைஶ்யன் ஶூத்ரன் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது என்பது பகவத் தாத்பர்யமன்று.

जन्मना जायते शूद्रः कर्मणा जायते द्विजः ।

ஜந்மநா ஜாயதே ஶூத்ர: கர்மணாஜாயதேத்விஜ: |

என்கிற வாக்யமானது "உபநயநத்திற்கு முந்தி ப்ராஹ்மண, க்ஷத்ரிய வைஶ்யர்களுக்குத் தத்தம் கர்மாவில் அதிகாரம் இல்லை, ஶூத்ரர்களைப்போல் சும்மாயிருக்க வேண்டியவர்கள் தான்; உபநயநத்துக்குத் பிறகுதான் ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைஶ்யர்களுக்குத் தத்தம் கர்மாவில் அதிகாரம்" என்ற இந்த அர்த்தத்தைத்தான் குறிப்பிடுகிறது. பக்ஷிக்கு த்விஜம் என்ற பெயருண்டு. முதலில் முட்டையாய் ஒரு பிறப்பும், அடை காப்பினால் பறவையாய் மற்றொரு பிறப்பும் இருப்பதனால் அந்தப்பெயர் ஏற்பட்டிருக்கிறது. முட்டையாய் இருக்கும்போது பக்ஷிபேதம் ஸித்திக்கிறதில்லை. எல்லாப் பக்ஷிகளும் முட்டையில் ஜலரூபமாகவேயிருக்கும். அடைகாப்பு என்கிற ஸம்ஸ்காரத்

தால் பக்ஷிரூபமாக வெளிப்பட்டதும் பரஸ்பரபேதம் இருக்கவே இருக்கிறது. இவ்விதம் உபநயநஸம்ஸ்காரத்திற்கு முன் மூன்று வர்ணத்தார்களும் ஶூத்ரர்களைப் போல் கர்ம ரஹிதர்களாய் ஒன்ருய் இருந்தபோதிலும், உபநயனத்திற்குப் பின் பரஸ்பர பேதத்தோடு கூடி தத்தம் கர்மாவையே எடுத்துக்கொள்ள வேண்டும். கீதையில் பலவிடங்களில் ஸ்வதர்ம ப்ரதர்ம ஶப்தங்களை பகவான் உபயோகித்திருப்பதனுல் கர்மாவை அநுஸரித்து ஜாதியிருக்கிறதென்று நினைக்க இடமில்லை. மேலும் ஸ்வதர்ம பரதர்ம ஶப்தங்களுக்கு அர்த்தமில்லாமற் போகும்.

கர்மபேதமிருந்தாலும் பலபேதமில்லை

இந்த நான்கு வர்ணத்தார்களுக்கும் கர்மபேதமிருந்தாலும் பலபேதமில்லை. பலேச்சையோடு ஸ்வகர்மாவைச் செய்யும் ப்ராஹ்மணன் எந்த அப்யுதயத்தை அடைகிருனே அதே அப்யுதயத்தை மற்ற மூவரும் காமனையோடு செய்யப்படும் ஸ்வகர்மாவினுல் அடைவார்கள். பலத்தை விரும்பாமல் ஈஶ்வராராதந புத்தியோடு ஸ்வகர்மாவை அநுஷ்டிக்கும் ப்ராஹ்மணன் க்ரமமாய் நிஶ்ரேயஸத்தை (மோக்ஷத்தை) அடைவது போல, மற்ற மூவர்களும் பலேச்சையில்லாமல் ஸ்வகர்மாவை ஈஶ்வராராதநபுத்தியோடு செய்வார்களானல் க்ரமமாய் முக்தியை அடைவார்கள்.

முமுக்ஷுவானல் ஜ்ஞாநத்தில் யாருக்கும் அதிகாரமுண்டு

மோக்ஷஸாதநமான ஜ்ஞாநத்தில் முமுக்ஷுவாயிருந்தால் யாருக்கும் அதிகாரமுண்டு.

स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः । (18–46)

ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி
மாநவ: | (18-46)

என்கிற ஶ்லோகத்தால் "ஸ்வகர்மாவால் ஈஶ்வரனை ஆராதித்து மனிதன் சித்தஶுத்தி அடைகிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் கர்ம பேதமிருந்தாலும் பலபேத மில்லையென்று தெரிய வருகிறது.

मां हि पार्थ व्यपाश्रित्य येऽपि स्युः पापयोनयः ।
स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम् ॥
(9–32)

மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய
யேபி ஸ்யு: பாபயோநய: |
ஸ்த்ரியோ வைஶ்யா: ததா: ஶூத்ரா:
தேபி யாந்தி பராம் கதிம் ‖ (9-32)

ஸ்த்ரீகள், வைஶ்யர்கள், ஶூத்ரார்கள் பாபயோநிகளாய் இருந்தாலும், என்னைச் சரணமாய் அடைவார்களேயானால் பரமகதியை அடைவார்கள்.

என்கிற ஶ்லோகத்தினால் ஸ்த்ரீ வைஶ்ய ஶூத்ரார்களும் ஜ்ஞாநத்தால் பரகதி அடைவார்கள் என்று சொல்லியிருப்பதனால், யாருக்கும் ஜ்ஞாநத்தில் அதிகாரமும் அதன் பலனாகிய மோக்ஷமும் உண்டென்று ஸித்திக்கிறது. இவ்விதம் பலபேதம் இல்லை என்று ஸித்திப்பதனால் ஶாஸ்த்ரத்திற்குப் பக்ஷபாத தோஷமில்லை.

ஒரு வைத்யன் பலவித வ்யாதிக்காரர்களுக்கு வெவ்வேறு மருந்தைக் கொடுக்கிறான். சாப்பிடும் முறையையும் தெரிவிக்கிறான். அவனவன் தன்தன்

மருந்தை முறையோடு சாப்பிட்டு வருவானானால் நிவ்ருத்தி அடையும். வ்யாதி நிவ்ருத்திரூபமான பலன் யாவர்க்கும் ஸமம். தன் தன் மருந்தை முறை தவறியோ கொஞ்சமாகவோ சாப்பிட்டு வந்தாலும் கெடுதல் ஒன்றுமில்லை. கால அளவில் வ்யாதி நிவ்ருத்தியையே அடையும். மற்றொருவன் மருந்தை வாங்கிச் சாப்பிட்டால் வ்யாதி நிவ்ருத்தி அடையாததோடு பிழைப்பதிலும் ஸம்ஶயத்தை உண்டாக்கிக் கொள்வான். இவ்விதம் பகவானும், "அந்தந்த வர்ண தர்மங்களை அந்தந்த வர்ணத்தார் முறைதவறி அநுஷ்டித்தாலும் கொஞ்சமாய் அநுஷ்டித்தாலும் நல்லதையே அடைவர். பரதர்மத்தை அநுஷ்டித்தால் அது அவர்க்கு பயத்தையே உண்டு பண்ணும்" என்று சொல்லியிருக்கிறார்.

नेहाभिक्रमनाशोऽस्ति प्रत्यवायो न विद्यते ।
स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् ॥ (2—40)

நேஹாபிக்ரமநாஶோஸ்தி
ப்ரத்யவாயோ நவித்யதே ।
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய
த்ராயதே மஹதோ பயாத் ॥ (2-40)

ஸ்வகர்மாவை ஒருவன் அநுஷ்டித்தால், தான் செய்தது வீணாகாது. ப்ரத்யவாயமும் (தோஷமும்) கிடையாது. இக் கர்மயோகத்தைக் கொஞ்சம் அநுஷ்டித்தாலும் ஸம்ஸாரமாகிய பெரிய பயத்திலிருந்து ரக்ஷிக்கப்படுகிறான்.

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात् स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥ (3—35)

ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண:
பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் |
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய:
பரதர்மோ பயாவஹ: ‖ (3-35)

நன்ருய் ஆசரிக்கப்படாததான ஸ்வதர்மமானது நன்ருய் ஆசரிக்கப்பட்ட பரதர்மத்தைக் காட்டிலும் மேலானது. பரதர்மத்தை அநுஷ்டித்து ஜீவிப்பதைக் காட்டிலும் ஸ்வதர்மத்தில் மரணமடைவது நலம். ஏனென்ருல், பரதர்மம் நரகம் முதலிய பயத்தை விளைவிக்கும்.

स्वभावनियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥ (18—47)

ஸ்வபாவநியதம் கர்ம குர்வந்ந ஆப்நோதி
கில்பிஷம் | (18-17)

தனக்கு ஸ்வபாவமாய் ஏற்பட்ட கர்மாவைச் செய்வதால் யாதொரு பாபமும் ஸம்பவிக்காது.

இந்த ஶ்லோகங்களைக் கவனித்தால் மேற் சொன்ன அர்த்தம் தெளிவாய் விளங்கும்.

உயர்வு தாழ்வு என்பது ஜாதியைப் பொறுத்ததல்ல

ஸ்வதர்மத்திலிருந்து நழுவின ப்ராஹ்மணனைக் காட்டிலும் ஸ்வதர்மத்தை ஒழுங்காய் அநுஷ்டிக்கும் சூத்திரன் பெரியவனே யாவன். அஜ்ஞான ப்ராஹ்மணனைக்காட்டிலும் ஜ்ஞாநியான சூத்ரன் உயர்ந்தவனே. மற்ற மூவர்கள் ப்ராஹ்மணனை ஆராதிக்க வேண்டுமென்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுமிடங்களில் ஸதாசாரமுள்ள ப்ராஹ்மணனையே க்ரஹிக்கிருேம்.

ஆகவே ஸதாசாரம் ப்ராஹ்மணனை உயர்த்திக்காட்டு கிறதே தவிர ஜாதியல்ல.

குறையுள்ளவன் தன்குறையை நிவ்ருத்தி செய்கிறவனிடம் தன் தாழ்மையைக் காட்டாமலிருக்கமாட்டான். குறையை நிவ்ருத்தி செய்கிறவனும், தாழ்மையைக் காட்டுகிறவனிடமே அநுதாபங் காட்டுவான். கருப்பங்கொல்லையில் கரும்பை வெட்டிக்கொண்டிருக்கும கொல்லைக்காரனை "மூக்கறையா! எனக்கொரு கரும்பு கொடு" என்று கேட்டால் இல்லை யென்று அதட்டிச் சொல்வான். "நான் களைத்திருக்கிறேன். ஒரு கழி கொடுத்தால் உனக்குப் புண்யமுண்டு" என்று தாழ்ந்த குரலுடன் கேட்டால் அவன் கொடுப்பான். ஆகவே குறையை நிவ்ருத்திசெய்கிறவன் குறையுள்ளவனுடைய தாழ்மையை விரும்புகிறுன். ஏழை ப்ராஹ்மணன் ஒருவன் தன் குடும்பத்தை ரக்ஷிக்கமுடியாமல் பணக்காரனொருவனை ஆச்ரயித்து அவனிட்ட வேலையைச் செய்துகொண்டு அவனை அநுஸரித்து வந்தான். அவனும் ஏழை ப்ராஹ்மணனுக்கு உதவி செய்து வந்தான். சில காலஞ் சென்றபின் அதே ஏழை ப்ராஹ்மணன் தன் புத்ரனிடத்தில் குடும்பத்தை ஒப்புவித்து விரக்தனாய் ஸந்யாஸியாகி ஸத்குருவை ஆஶ்ரயித்து ஶ்ரவணம் செய்துகொண்டிருந்தான். முன் ப்ரபுவைத் தனக்கு மேலாக நினைத்தவன், இப்பொழுது அதே ப்ரபுவை விஷயமலபங்கத்தில் விளையாடும் குழந்தை யென்றே நினைப்பான். அந்த ப்ரபுவும் ஸந்யாஸியைத் தன் வேலைக்காரனென்று பாவிக்காமல் "இவர் உத்தம புருஷர், இவர் நம் க்ருஹத்தில் பிக்ஷை செய்து போனால் நமக்கு ஸுக்ருதமுண்டு" என்று நினைத்து அவரை வந்தனம் செய்து வீட்டுக்கு அழைப்பான்.

ஏழை ப்ராஹ்மணன் முன் குறையுள்ளவன். இப்பொழுதோ ப்ரபு குறையுள்ளவன். அவன் குறையை நிவ்ருத்தி செய்பவர் இந்த ஏழை ஸந்யாஸி. குறையுள்ள காலத்தில் தாழ்ந்தவராயிருந்தவர் குறையை நிவ்ருத்தி செய்யுங்காலத்தில் உயர்ந்தவரானார். ஆகையால் குறையுள்ளவன் தாழ்ந்தவன். அதை நிவ்ருத்தி செய்கிறவன் உயர்ந்தவன். முன் சொன்னவழியில் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகளை நிவ்ருத்திசெய்ய எவனும் சக்தனல்ல. ஜாதித்வேஷமுள்ள இந்தக் காலத்திலும் குறையுள்ளவன், குறையை நிவ்ருத்தி செய்கிறவனிடம் ஜாதியைப் பாராட்டாமல் தன் குறையை நிவ்ருத்தி செய்யும் எஜமானனென்றே நினைத்து, அவனுக்குப் பணிவிடை செய்கிறான்.

முன் காலத்தில் ஐஹிக போக போக்யங்களை துக்க ரூபமாய் நினைத்து அதிலிருந்து விலகி மற்றொன்றைப் பிடித்துக்கொள்ள வழிதெரியாமல் மயங்கின இதர வர்ணத்தார்களுக்கு ப்ராஹ்மணர்கள் ஒரு பிடிப்பையும் அதற்குஸாதநமான நிவ்ருத்தி மார்க்கத்தையும் உபதேசித்துவந்தார்கள். இந்தக் காரணத்தினால் ப்ராஹ்மணர்களை மற்ற வர்ணத்தார்கள் உயர்ந்தவர்கள் என்று நினைத்தார்கள். ஜாதியைக் காரணமாய்க் கொண்டல்ல. ஆகவே ப்ராஹ்மணர்களை பூஷிக்கும் எந்த க்ரந்தமும் பக்ஷபாத முடையதல்ல.

எல்லா ஶாஸ்த்ரக்ரந்தங்களும் நிவ்ருத்திபரம்

ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் முதலிய ஸர்வ க்ரந்தங்களும் நிவ்ருத்தியையே போதிக்கின்றன. உலக இச்சை கொண்டு ப்ரவ்ருத்தி மார்க்கத்திலுள்ளவர்களுக்கு இந்த க்ரந்தங்கள் பூஷிக்கத் தகுந்

தனவுமல்ல, தூஷிக்கத் தகுந்தனவுமல்ல, ப்ரமாண மாய் எடுத்துக் கொள்ளத் தகுந்தனவுமல்ல. பகவத் கீதை, மேலே குறிப்பிடப்பட்ட க்ரந்தங்களில் ஒன்று. ஆஸ்திகர்களால் ப்ரமாண க்ரந்தங்களில் ஶ்ரேஷ்ட மானதாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் பகவான் ப்ரவ்ருத்தியின் பலனுயிருக்கும் அப்யு தயத்தை நன்ருய் தூஷித்திருக்கிருர்.

ते तं भुक्त्वा स्वर्गलोकं विशालं क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति।
एवं त्रयीधर्ममनुप्रपन्ना गतागतं कामकामा लभन्ते ॥ (9–21)

தே தம் புக்த்வா ஸ்வர்கலோகம் விஶாலம்
க்ஷீணே புண்யே மர்த்ய லோகம் விஶந்தி |
ஏவம் த்ரயீ தர்மமநு ப்ரபந்நா:
கதாகதம் காம காமா லபந்தே ‖ (9-21)

அவர்கள் விஸ்தீர்ணமான ஸ்வர்கலோகத்தை அநுபவித்த பிறகு புண்யம் குறைந்தவுடன் மநுஷ்ய லோகத்தை அடைகிருர்கள். இவ்விதம் போகேச்சை யோடு வைதிக கர்மாவை அநுஷ்டிப்பவர், போவதும் வருவதுமா யிருக்கிருர்கள்.

என்கிற ஶ்லோகத்தில் அப்யுதயத்தை விரும்புகிற வர்கள் அடுத்தடுத்து ஜநந மரணங்களை அடைந்து கொண்டிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிருர். அப்யுதயத்தை விரும்புகிறவர்களை அறிவில்லாதவர்க ளென்று சொல்லியிருப்பதோடு அவர்களுக்கு நிஶ்ரேயஸ ஸாதநமான ஜ்ஞாநத்திலோ ஜ்ஞாநஸாதந மான நிஷ்காம கர்மயோகத்திலோ புத்தியுண்டாக மாட்டாது என்று தூஷித்திருக்கிருர். இந்த அர்த்தம்,

यामिमां पुष्पितां वाचं प्रवदन्त्यविपश्चितः ।
वेदवादरताः पार्थ नान्यदस्तीतिवादिनः ॥

யாமிமாம் புஷ்பிதாம்வாசம் ப்ரவதந்தி அவிபஶ்சித: ।
வேதவாதரதா: பார்த்த நாந்யதஸ்தீதி வாதிந: ॥

कामात्मानः स्वर्गपरा जन्मकर्मफलप्रदाम् ।
क्रियाविशेषबहुलां भोगैश्वर्यगतिं प्रति ॥

காமாத்மாந: ஸ்வர்கபரா: ஜந்மகர்ம பலப்ரதாம் ।
க்ரியாவிஶேஷ பஹுலாம் போகைஶ்வர்ய கதிம் ப்ரதி ॥

भोगैश्वर्यप्रसक्तानां तयाऽपहृतचेतसाम् ।
व्यवसायात्मिका बुद्धिः समाधौ न विधीयते ॥
(2–42, 43, 44)

போகைஶ்வர்யப்ரஸக்தாநாம்
தயாபஹ்ருத சேதஸாம் ।
வ்யவஸாயாத்மிகா புத்தி:
ஸமாதௌ ந விதீயதே ॥ (2-42,43,44)

ஸ்வர்க்கம் முதலிய பலத்தையும் அதன் ஸாதநத்தையும் வெளிப்படுத்தும் வேதவாக்யங்களில் ஆசை கொண்டவர்களும், புருஷார்த்த ஸாதநமாய் கர்மாவைத் தவிர மற்றொன்று இல்லையென்று சொல்லுகிறவர்களும், காமஸ்வபாவர்களும், ஸ்வர்க்கத்தை புருஷார்த்தமாய் நினைப்பவர்களுமான அவிவேகிகள். கர்மபலனான ஜந்மாவையே கொடுக்கிறதாயும் போகம் ஐச்வர்யம் இவைகளை அடைவதற்காக ஸாதநமான பலவித கர்மாக்களை அதிகமாக போதிக்கிறதாயும், பூத்த மரம் பார்வைக்கு அழகாய் இருப்பதுபோல கேட்பதற்கு மாத்ரம் அழகாயிருக்கும் எந்த வேதவாக்

யங்களை உதாஹரிக்கிருர்களோ அந்த வாக்யங்களால் அபஹரிக்கப்பட்ட சித்தமுடையவர்களாய், போகம் ஐச்வர்யம் இவைகளில் ஆஸக்தியுடையவர்களாய் இருப்பவர்களுடைய சித்தத்தில் ஜ்ஞாநயோகத்திலோ அதற்கு ஸாதநமான கர்மயோகத்திலோ நிச்சய புத்தி உண்டாகிறதில்லை.

என்கிற ஶ்லோகங்களைக் கவனித்தால் விளங்குகிறது.

त्रैगुण्यविषया वेदा निस्त्रैगुण्यो भवार्जुन ।
निर्द्वन्द्वो नित्यसत्त्वस्थो निर्योगक्षेम आत्मवान्॥ (2–45)

த்ரைகுண்ய விஷயா வேதா:
நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந ।
நிர்த்வந்த்வோ நித்யஸத்வஸ்த:
நிர்யோக க்ஷேம ஆத்மவாந் ॥ (2-45)

அவிவேகிகளுக்கு வேதங்கள் குணமய ஸம்ஸாரத்தை போதிக்கிறதாய் இருக்கின்றன. நீ அதில் இச்சை கொள்ள வேண்டாம். த்வந்த்வத்தை விட்டு விலகினவனும், எப்பொழுதும் ஸத்வகுணத்தை ஆச்ரயித்தவனும், யோக க்ஷேமத்தில் ஆஸக்தியில்லாதவனும் அப்ரமத்தனும் இரு.

என்கிற ஶ்லோகத்தால் பகவான் அர்ஜுனனுக்கு அப்யுதயத்தைப் பலனாய் வெளிப்படுத்தும் வேத பாகங்களைக் கவனிக்கவேண்டாமென்றும், நீ அப்யுதயத்தில் இச்சைகொள்ள வேண்டாமென்றும் சொல்லியிருக்கிருர். வேதம் நிவ்ருத்திபரம் என்று முன் சொன்னதற்கு விரோதம் வருகிறதே என்ருல், ஐஹிக அப்யுதயத்தில் இச்சைகொண்டு லௌகிக கர்மாக்களைச் செய்யும் பிராணிகளைத் திருப்பி வைதிக

கர்மாவில் ஶ்ரத்தை உண்டாகும்படிச் செய்ய ஆமுஷ்மிக பலத்தை ப்ரயோஜநமாகக் காட்டியிருக்கிறது. பலேச்சை கொண்டு கர்மாவில் ப்ரவ்ருத்திப்பார்களானுல், பின் அவர்களை நிவ்ருத்தி மார்க்கத்தில் திருப்பிவிடலாமென்பது வேதத்தின் தாத்பர்யம்; தாய் மருந்தைக் கொடுக்க வெல்லத்தைக் காட்டிக் குழந்தையை அழைப்பது போல, ஐஹிக அப்யுதயம் எப்படி ஸ்திரமல்லவோ அப்படி ஆமுஷ்மிக அப்யுதயமும் அஸ்திரமென்பதை பகவான்,

क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति ।

க்ஷீணே புண்யே மர்த்ய லோகம் விஶந்தி ।

என்கிற வாக்யத்தால் சொல்லியிருக்கிருர்.

கீதாக்ரந்தத்தில் ஆதியிலும் மத்தியிலும் அவஸாநத்திலும் மற்றும் அந்தந்த இடங்களிலும் காமக்ரோதங்களைப் பெரிய ஶத்ருவாகவும் அதைப் பரிஹரிக்க வேண்டுமென்றும் சொல்லியிருங்கிருர்.

त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मनः ।
कामः क्रोधस्तथा लोभस्तस्मादेतत् त्रयं त्यजेत् ॥

(16–21)

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஶநமாத்மந: ।
காம: க்ரோத: ததா லோப: தஸ்மாத் ஏதத்த்
த்ரயம் த்யஜேத் ॥ (6-21)

தன்னை அழிப்பதும் நரகத்திற்கு த்வாரமாயுமிருப்பது காமம் க்ரோதம் லோபம் என்று மூன்று விதமாய் இருக்கிறது. ஆகையால் இம்மூன்றையும் த்யஜிக்க வேண்டும்.

என்கிற ஶ்லோகத்தால் காம க்ரோத லோபங்களை நரகத்திற்கு வாயிற்படியாகச் சொல்லியிருப்பதோடு, தன்னழிவிற்குக் காரணமென்றும் சொல்லியிருக்கிறார்.

இந்த்ரியங்கள் விஷயங்களை க்ரஹிக்கும்போது ராகத்வேஷங்கள் பின்தொடரும். அவைகளுக்கு வசங்கதனாகக் கூடாதென்பதை,

इन्द्रियस्येन्द्रियस्यार्थे रागद्वेषौ व्यवस्थितौ ।
तयोर्न वशमागच्छेत्तौ ह्यस्य परिपन्थिनौ ॥ (3—34)

இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்தே
ராகத்வேஷெள வ்யவஸ்திதெள ।
தயோர் ந வஶமாகச்சேத்
தெளஹி அஸ்ய பரிபந்திநெள ॥ (3-34)

என்கிற ஶ்லோகத்தால் விளக்கிக் காட்டியிருக்கிறார். அப்யுதயத்தில் இச்சையுள்ளவன் அல்லது அதை அடைந்தவன் ராகத்வேஷாதி தோஷங்களில்லாமலிருக்க முடியாது. மேலும் பகவான், விஷயங்களை நினைக்கவுங் கூடாது, நினைத்தால் அழிவை அடைவானென்று,

ध्यायतो विषयान्पुंसः संगस्तेषूपजायते ।
संगात्संजायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥

த்யாயதோ விஷயாந் பும்ஸ:
ஸங்கஸ்தேஷு உபஜாயதே ।
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:
காமாத் க்ரோதோபிஜாயதே ॥

क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥
(2—62, 63)

க்ரோதாத் பவதி ஸம்மோஹ:
ஸம்மோஹாத் ஸ்ம்ருதிவிப்ரம: ।
ஸ்ம்ருதிப்ரம்ஶாத் புத்திநாஶ:
புத்திநாஶாத் ப்ரணஶ்யதி ॥ (2-62, 63)

என்கிற ஶ்லோகங்களால் வெளியிட்டிருக்கிறார். இரண்டாவது அத்யாயம் 37-வது ஶ்லோகத்தாலும், பதினொன்றாவது அத்யாயம் 33-வது ஶ்லோகத்தாலும் பகவான் அர்ஜுனனுக்கு அப்யுதயத்தைப் பலனாகக் காட்டியிருப்பது ப்ரரோசநாமாத்ரம். இவ்விதம் அப்யுதயத்தை தூஷித்திருப்பதோடு நிஶ்ரேயஸத்தையும் அதை யடைந்தவனையும் அதன் ஸாதநத்தையும் புகழ்ந்திருக்கிறார். அர்ஜுநனை யுத்தத்திற்குத் தூண்டினதும் க்ரமமாய் ஜ்ஞாநமடைந்து முக்தியடையட்டும் என்ற அபிப்பிராயத்தினால்தான்.

உபஸம்ஹாரம்

"ஜ்ஞாநிகள் லோகஸங்க்ரஹார்த்தம் கர்மாவைச் செய்கிறார்கள். நானும் லோக ஸங்க்ரஹார்த்தம் கர்மாவைச் செய்கிறேன்'' என்று பகவான் சொன்னது அஜ்ஞர்கள் நிஷ்காமகர்மாவை அநுஷ்டித்து ஜ்ஞாநத்தின் வழியாய் முக்தி அடையட்டும் என்ற அபிப்ராயத்தினால்தான். கீதையில் சொல்லப்பட்ட கர்மா, ஶாஸ்த்ர விஹிதமான கர்மா, மனம் போனபடி எடுத்துக் கொள்ளப்பட்ட கர்மா அல்ல. என்ற இந்த அர்த்தம்,

यः शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारतः ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ॥

யஃ ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத: |
நஸ ஸித்திமவாப்நோதி நஸுகம் நபராம் கதிம் ||

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥
(16–23, 24)

தஸ்மாத் ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே
கார்யாகார்ய வ்யவஸ்திதௌ |
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ர விதாநோக்தம்
கர்ம கர்து மிஹார்ஹஸி || (16-23,24)

எவன் சாஸ்த்ரத்தை மீறி தன்னிஷ்டப்படி கர்மாவைச் செய்கிருனே அவன் புருஷார்த்தத்திற்கு யோக்யனுகமாட்டான். இந்த லோகத்தில் ஸுகத்தை அடையமாட்டான். ஸ்வர்க்கத்தை அல்லது மோக்ஷத்தை அடையமாட்டான். ஆகையால் இது செய்யத்தகுந்தது இது செய்யத்தகாதது என்று நிர்ணயிக்க ஶாஸ்த்ரம்தான் உனக்கு ப்ரமாணம். ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட கர்மாவை அறிந்து கொண்டு அதை அநுஷ்டிப்பாயாக.

என்கிற ஶ்லோகங்களால் தெரிய வருகிறது. ஜ்ஞாநி ஜநமத்யத்தில் வஸிப்பவனுயும் அவர்களால் பூஜிதனுயும் இருக்கும் பக்ஷத்தில் அஜ்ஞர்களுக்குக் கர்மயோகத்தில் ஶ்ரத்தை உண்டாக்க ஆஸக்தியில்லாமல் கர்மாவை அநுஷ்டிப்பான் என்ற இந்த அர்த்தந்தான் கீதையில் விளங்குகிறது. எல்லா ஜ்ஞாநிகளும் கர்மாவை அஷ்டிக்கத்தான் வேண்டுமென்று பகவான் விதிக்கவில்லை.

निस्त्रैगुण्ये पथि विचरतां को विधिः को निषेधः ।

நிஸ்த்ரைகுண்யே பதி விசரதாம் கோ விதி:
கோ நிஷேத: |

முக்குணங்களற்ற மார்க்கத்தில் ஸஞ்சரிக்கும் ஜ்ஞாநிகளுக்கு விதி ஏது? நிஷேதம் ஏது?

என்பது பெரியோர்கள் வாக்யம். கீதையிலும் ஜ்ஞாநி ஸர்வ கர்மாக்களையும் விட்டு தான் ஒன்றும் செய்யாமலும் பிறரைச் செய்யத் தூண்டாமலும் ஸுகமாயிருக்கிறனென்று பகவான் சொல்லியிருக்கிறார். இந்த அர்த்தம்,

सर्वकर्माणि मनसा संन्यस्यास्ते सुखं वशी ।
नवद्वारे पुरे देही नैव कुर्वन्न कारयन् ॥ (5–13)

ஸர்வகர்மாணி மநஸா
ஸம்ந்யஸ்யாஸ்தே ஸுகம் வஶீ |
நவத்வாரே புரே தேஹீ
நைவ குர்வந் நகாரயந் ॥ (5-13)

ஜிதேந்த்ரியனுன ஜ்ஞாநி ஸர்வகர்மாக்களையும் விவேக புத்தியால் த்யாகம் செய்து, ஒன்பது வாயிற்படிகளுடன் கூடிய கோட்டை போலிருக்கும் இந்த தேஹத்தில் ஸுகமாய்த் தானொன்றும் செய்யாமலும் பிறரைச் செய்விக்காமலும் இருக்கிருன்.

ஆகையால் கீதை கர்மாவை, அதிலும் லௌகிக கர்மாவை போதிக்க வந்ததென்று சொல்வது அதிஸாஹஸம். கீதையின் முடிவில் பக்தியால் என்னை உள்ளபடி அறிகிருன் என்று சொல்லியிருக்கிருர். அந்த பக்தி ஜ்ஞாந லக்ஷணமான நான்காவது பக்தி. ஆகையால் கீதைக்கு ஜ்ஞாநத்தில்தான் தாத்பர்யமென்பது பெரியோர்களபிப்பிராயம்.

Wrapper blocks: Courtesy-Lifco, Madras-17